பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 18 கார்த்திகை 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை 14 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

வடக்கின் **வர்ண விருது**

(விரிவு - பக். 26)

# ரணிலை தலைமை அமைச்சராக்க மைத்திரி மறுப்பு அதற்காகத் தனது பதவியை இழக்கவும் அவர் தயார்

## இப்படிச் சொல்கிறார் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன



கொழும்பு, டிசெ. 14
"ரணில் விக்கிரமசிங்கவை ஒருபோதும் தலைமை அமைச்சராக நியமிக்கமாட்டேன். என்ன நடந்தாலும் பரவாயில்லை. முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்க மாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்" என்று கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மாலை அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட இலங்கைப் பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். இதன்போதே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று நாடாளு » 25

# நாடாளுமன்றக் கலைப்பு சட்டத்துக்கு புறம்பானது

## உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி

கொழும்பு, டிசெம்பர் 14
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையானது செல்லுபடியற்றது என்றும் அது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை என்றும் நேற்றுத் தீர்ப்பிட்டது உயர்நீதிமன்றம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சர் பதவியில் இருந்து ரணில் நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு மகிந்த நியமிக்கப்பட்டார். மைத்திரி – மகிந்த கூட்டணி தமது பெரும்பான்மையை நிரூபிப்பதற்குக் கடும் முயற்சி மேற்கொண்டது. எனினும் » 25



## வெடி கொளுத்தி நேற்று வவுனியாவில் வரவேற்பு

வவுனியா, டிசெ. 14
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை செல்லுபடியற்றது என்று உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பிட்ட நிலையில் இந்தத் தீர்ப்பை வரவேற்று வவுனியாவின் சில இடங்களில் » 25

## உயர் நீதிமன்றத் தீர்ப்பை கொண்டாடியது குடாநாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 14
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்டத்துக்குப் புறம்பானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் » 25

## நீதிமன்றத்தின் தீர்ப்பு கீச்சகத்தில் 'ட்ரென்ட்'

கொழும்பு, டிசெ. 14
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை செல்லுபடியற்றது என்றும் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை என்றும் உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பிட்ட நிலையில் இந்தத் தீர்ப்பு தொடர்பான விவரங்கள் கீச்சகத்தில் நேற்று மாலை பரபரப்பாக (ட்ரென்ட்) இருந்தன.
நேற்று இரவு 7 » 25




## 19ஆவது திருத்தச்சட்டமே வெற்றிக்கு முழுக்காரணம்

### சுமந்திரன் பெருமிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
19ஆவதுதிருத்தச்சட்டத்தின் காரணமாகவே அரச தலைவர் ஒருவரின் செயற்பாட்டை சவாலுக்கு உட்படுத்தி வரலாற்றுச் சிறப்பு » 25

## உயர்நீதிமன்றின் தீர்ப்பை மதித்து நடப்பார் மைத்திரி

### ரணில் நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 14
உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மதித்துச் செயற்படுவார் என நான் நம்புகிறேன் » 25

## அரச தலைவர் மைத்திரிக்கு எதிராக வருகிறது குற்றவியல் தீர்மான வரைபு

### ஜே.வி.பி முழுமூச்சு

கொழும்பு, டிசெ. 14
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் தீர்மான வரைபைக் கொண்டுவருவதற்கு ஜே.வி.பி. தயாரா » 25

## 'வெள்ளி அதிரடி' தொடரலாம்

கொழும்பு, டிசெ. 15
அரச தலைவர் மைத்திரிபாலவின் 'வெள்ளி அதிரடி' இன்றும் தொடரலாம் என்று கருதப்படுகிறது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் » 25

# லங்கா வைத்தியசாலையிலிருந்து தீர்ப்பை வரவேற்கிறார் சம்பந்தன்

### அரச தலைவர் மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்

கொழும்பு, டிசெ. 14
உடல்நலக் குறைவால் நேற்றுக் காலை கொழும்பிலுள்ள 'லங்கா' (அப்பலோ) தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்றக் கலைப்பு சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் வழங்கி » 25

## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 14
பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். அல்வாய் வடக்கைச் சேர்ந்த வைரமுத்து இராசரத்தினம் (வயது - 50) என்ற » 25

31 மகிழ்ச்சி நிறைந்த 31 தினங்களுக்கு % CASHBACK

DFCC கிரெடிட் கார்ட் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யும் ஒவ்வொரு நாளும் 1% த்திலிருந்து 31% வரை பண மீளளிப்பு.
உதா: 5 நாட்கள் = 5%, 10 நாட்கள் = 10%

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC கடனட்டை

- டிசம்பர் 1 முதல் 31 வரை செல்லுபடியாகும்
- ஆகக்குறைந்த கொடுக்கல் வாங்கல் தொகை நாளொன்றுக்கு ரூ.2000
- ஆகக்கூடிய CashBack தொகை - கோல்ட் ரூ.10,000 | பிளாட்டினம் ரூ.15,000 | சிக்னேச்சர் ரூ.20,000 | இன்பைனைட் ரூ.30,000

உங்கள் கிரெடிட் கார்ட்டைப் பெற்றுக் கொள்ள இப்பொழுதே அழையுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# எதிர்க்கட்சித் தலைவராக இருக்க சம்பந்தனுக்கு அருகதை இல்லை

## மகிந்த அணி சாட்டை



கொழும்பு, டிசெ. 14
நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளியாகச் செயற்படும் சம்பந்தனும், அவர் தலைமையிலான கூட்டமைப்பினரும் மக்களால் வெறுக்கப்பட்ட தரப்பினராக உள்ளனர். எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருப்பதற்கு அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தேசியகலாசாரமையநிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில்முறையற்றுச் செயற்படுகின்றது. அவர்களின் கட்சிக் கூட்டங்களே அங்கு நடக்கின்றன. அங்கு நிறைவேற்றப்பட்டனஎன்று சொல்லப்படும் எந்தத் தீர்மானத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு புறம் பலத்தை நிரூபிக்க முயற்சிக்கின்றது. மறுபுறம் ரணிலுக்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. ரணில் மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவி வகிக்க முடியாது.

கூட்டமைப்புஐக்கியதேசியக் கட்சியின்பங்காளிஎன்பதை இரண்டாவது தடவையாகவும்நிரூபித்துவிட்டது. கூட்டமைப்புஎதிர்க்கட்சியில்இருப்பதற்கோ, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடர்வதற்கோ அருகதையில்லை.

இதுவரை காலமும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்த சம்பந்தன், வடக்கு கிழக்குமக்களின்பிரச்சினைகள் தொடர்பில் மாத்திரமே பேசினார். பெரும்பான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில்எந்தக்கருத்துக்களையும்தெரிவிக்கவில்லை. மக்களால் வெறுக்கப்பட்டு வருகின்றஐக்கிய தேசிய கட்சியினருக்கு ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி பதவியைத் தொடர்ந்து வகித்தால் பெரிய விளைவுகளை எதிர்கொள்ளவேண்டிவரும் - என்றார். (ம5,31)

# அரசை அமைக்கும் எதிர்க்கட்சி எங்கள் நாட்டிலேயே இருக்கிறது

## கூட்டமைப்பின்செயற்பாட்டை சாடுகின்றது மகிந்த அணி



**கொழும்பு, டிசெ. 14**
**அரசுக்குஎதிராகச்செயற்படவேண்டியஎதிர்க்கட்சி, தலைமை அமைச்சராக இவரை நியமிக்கவேண்டும் என்று பெயர் குறிப்பிடுகின்றது. எதிர்க்கட்சிஒன்றுஅரசைஅமைக்கும்வரலாறு முதன்முறையாகஎமதுநாட்டிலேயேபதிவாகியுள்ளது. இவ்வாறு மகிந்தஅணிஆதரவுநாடாளுமன்றஉறுப்பினர்சந்திமவீரக்கொடி தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயேமேற்கண்டவாறுகூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

ஜனநாயகம் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியும், சில தனியார் அமைப்புக்களும் பேசிக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மையினரின்விருப்பத்துக்குஇடமளிப்பதே ஜனநாயகம். அதை அவர்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும். தலைமை அமைச்சர் பதவியிலிருந்து மாத்திரமல்ல, கூட்டு அரசிலிருந்தும் ரணிலைநீக்க வேண்டும்என்பதுதான் மக்கள் ஆணை. மக்களிடம் தீர்மானம் எடுக்கும்பொறுப்பைஒப்படைக்கவேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் தேர்தலைப்புறக்கணிக்கும்ஒரேயொரு கட்சி ஐக்கிய தேசியக் கட்சிதான். மக்கள் முன் செல்வதற்கு அந்தக் கட்சியினர் பயப்படுகின்றார்கள்.

2019ஆம்ஆண்டுக்கானவரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. இந்தக் காலப் பகுதிக்குள் அதனைச் செய்ய முடியாவிடின், அரசதலைவர்மைத்திரிபால நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி மூன்று மாதங்களுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்பிக்க முடியும் என்றார். (ம5,31)

# பௌத்தத்துக்கு முதலிடம் கூட்டமைப்புடன் இணக்கம்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு


யாழ்ப்பாணம், டிசெ. 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்மூன்றுவிடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின்நியமன நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர்சக்தித்தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

''கூட்டமைப்புடன் மூன்று விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். நாடு ஒற்றையாட்சியாக இருக்கும் என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டது. பௌத்த மதத்துக்கு அமைய நாடு தற்போதுள்ள நிலையிலேயே இருக்கும் என்று இணக்கப்பாடு எட்டப்பட்டது. வடக்கு-கிழக்குஅபிவிருத்தி தொடர்பிலும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்"என்றுபொன்சேகா மேலும் தெரிவித்தார். (ம-5)

# அரசியல்நெருக்கடிதொடர்ந்தால் நாட்டின்உறுதிப்பாடுபாதிப்பாகும்

## சீனா எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 14
இலங்கையில் தற்போது எழுந்துள்ளஅரசியல்நெருக்கடி நீடித்தால், அது நாட்டின் உறுதிப்பாட்டை கடுமையாகப் பாதிக்கும். பொருளாதார அபிவிருத்திக்கும் பாதகமானதாகஅமையும். இவ்வாறு இலங்கைக்கான சீனத்தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் பேச்சாளருமான லூவோ சொங் தெரிவித்துள்ளார்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட இணைய ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் எழுந்துள்ள அரசியல்நெருக்கடியில்நாம்எந்தவொரு தரப்பையும் ஆதரிக்கவில்லை. நாம் எவருடனும் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கையில்நிலவும்அரசியல் நெருக்கடிக்குள்ளும் எமது அபிவிருத்தித் திட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுக்கின்றோம். கொழும்புத் துறைமுக நகரத்தின் முதலாம் கட்டத் திட்டங்கள் பூர்த்தியடைந்து விட்டன. அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளோம். அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திப்பணிகளும்முன்னெடுக்கப்படுகின்றன. தெற்கு அதிவேகநெடுஞ்சாலைவிரிவாக்கப் பணிகளும் வேகமாகமுன்னெடுக்கப்படுகின்றன. அரசியல் நெருக்கடி காரணமாகசீனாவிலிருந்து இலங்கைக்குவருகின்றசுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடையவில்லை. அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது - என்றார். (ம-5)

# அமெரிக்க உயர் அதிகாரி முகாமிட்டார் கொழும்பில்

கொழும்பு, டிசெ. 14
அரசியல் குழப்பங்கள் தீவிரமடைந்துள்ளசூழ்நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரிஒருவர்கொழும்பை நேற்றுமுன்தினம் வந்தடைந்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான, பதில் பிரதி உதவிச் செயலரும் மூத்த இராஜதந்திரியுமான டேவிட் ரன்ஸே அவ்வாறு கொழும்பு வந்துள்ளார். கடந்த ஒக்டோபர் மாதமே இலங்கைஉள்ளிட்டதெற்கு, மத்திய ஆசிய நாடுகளின் விவகாரங்களுக்குப்பொறுப்பான பணியகத்தில் முக்கியமான இந்தப் பதவிக்கு இவர் நியமிக்க ப்பட்டிருந்தார். இலங்கைக்கு இவர் பயணம் மேற்கொண்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இலங்கையில் முறையான அரசு பதவியில் இல்லாத - அரசியல் குழப்பங்கள் தீவிரமடைந்துள்ள சூழலில் கொழும்பு வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின்பதில்பிரதி உதவிச் செயலர் டேவிட் ரன்ஸ், இலங்கையின் சிந்தனையாளர் குழாமைச் சேர்ந்த வல்லுனர்களைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார். (ம-5)



# கூட்டமைப்புடன் உடன்பாடுகள் செய்யவில்லை ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கைத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்ஐக்கியதேசியக்கட்சிஎந்தஇரகசிய உடன்பாட்டையும் செய்து கொள்ளவில்லை என்று அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நம்பிக்கை வாக்கெடுப்பு நிறைவேறிய பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

கூட்டமைப்புடன், ஐக்கிய தேசியக் கட்சி இரகசிய உடன்பாடுசெய்துள்ளது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் எந்த உடன்பாட்டையும் செய்து கொள்ளவில்லை. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது தார்மீக கடமை. 2009ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிந்த உடனேயே வடக்கு: கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொண்டிருக்க வேண்டும். கடந்த3ஆண்டுகள்காலத்தில்எம்மாலும் அதனைமேற்கொள்ள முடியாமல்போய்விட்டது. வடக்கு - கிழக்கில் அபிவிருத்தியையும்நல்லிணக்கத்தையும்ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது எமது கடமை. அதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் எந்த உடன்பாடும் செய்து கொள்ளப்படவில்லை. எமக்கானகடமை என்ற ரீதியில் அதனை நிறைவேற்றுவோம் - என்றார். (ம-5)

## கூட்டமைப்பு - ரணில்ஒப்பந்தம்

# போலியான ஆவணத்துக்கு எதிராக ஐ.தே.க. முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 14
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலுக்கும், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்குமிடையே இரகசிய ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஆவணப் பிரதி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. இந்த ஆவணப் பிரதிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது. அந்த ஆவணப்பிரதிபோலியானது என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ம-5)

ரணிலுடன் காணப்பட்ட இணக்கங்களுக்கு

# எழுத்துமூல உத்தரவாதம் கேட்கவே இல்லை; அப்படித்தந்தாலும் ஏற்கோம் என்றுவிட்டோம்

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார்

**யாழ்ப்பாணம், டிசெ. 14**

**நாட்டில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மீட்பதற்காக மட்டுமே ரணிலை ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தது. அப்படி ஆதரவு வழங்குவதற்காக எழுத்துமூல உறுதிமொழி எதனையும் தரவேண்டும் என்று அவருக்குக் கூட்டமைப்பு நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. அவர் எழுத்துமூல உறுதிமொழி தந்தாலும் அதனை நாங்கள் ஏற்கப் போவதில்லை என்று அவரிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவிடம் நாங்கள் உறுதிமொழி எதுவும் கேட்கவில்லை. எழுத்தில் உறுதிமொழி எதுவும் தரத் தேவையில்லை. தர வேண்டாம். தந்தாலும் நாங்கள் அதனைப் பெற்றுக் கொள்ளமாட்டோம் என்று நானே அவரிடம் (ரணிலிடம்) தெரிவித்துள்ளேன். இப்படி இருக்கையில் எப்படி உறுதிமொழி வழங்கப்படும்?

நர்டாளுமன்ற ஜனநாயகத்தை மீட்பதற்காக, காப்பதற்காக மட்டும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் ஆதரவு கொடுத்துள்ளோம். அதில் வேறு விடயங்கள் இல்லை. அது குறித்து ஏற்கனவே விரிவாக எமது மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் அதிகாரத்துக்கு வந்த ராஜபக்ச தரப்பை வீட்டுக்கு அனுப்பி ஜனநாயகத்தை மீட்பதற்காகவே இந்த நாடாளுமன்ற நடவடிக்கையை நாம் முன்னெடுத்தோம். வேறு காரணங்கள் எதுவும் இல்லை. ஆனால் ரணிலுக்கு தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சனைகள் நெருக்கடிகள், நீண்ட கால அடிப்படையிலான அடிப்படைத் தீர்வு ஆகியவை குறித்தெல்லாம் ஆழ்ந்த கரிசனை உண்டு என்பது எமக்கு நன்கு தெரியும். செய்யக்கூடியவற்றை செய்வார் என்று நாங்கள் நம்பலாம், நம்புகிறோம், எதிர்பார்க்கின்றோம். நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் விடயத்தில் சிறுபான்மை மக்களின் அரசியல் தலைமைகள் உறுதியாகவும் கரிசனையோடும் பிரக்ஞையுடனும் உள்ளதன் வெளிப்பாடே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கைத் தீர்மானம் - என்றார். (ம-5)

# நடந்ததையாமறியோம்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு செல்லவில்லை. அதனால் நடந்தது எதுவும் தெரியாது. இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில், ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்கு, அவரிடமிருந்து கையெழுத்து மூலமான ஆவணம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதா? அதற்கு கட்சித் தலைவர் சம்பந்தன் இணங்கினாரா?, அன்று மாலை இடம்பெற்ற ரணிலுடனான சந்திப்பில் கையெழுத்து ஆவணம் கோரப்பட்டதா? என்று 'உதயன்' கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேள்வி எழுப்பியது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தான் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று பதிலளித்தார். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன், கூட்டத்துக்குப் பிந்திச் சென்றமையால் நடந்தது என்னவென்று தெரியாது என்று பதிலளித்தார். (ம-5)

# ரணிலிடம் எழுத்துமூல ஆவணம் கோரப்பட்டது

### சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து எழுத்துமூலமான ஆவணத்தைப் பெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்று சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட னர் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்' தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு தவிர்க்க முடியாத காரணத்தால் செல்லவில்லை. கூட்டத்தின் பின்னர், சக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன். ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு. அவரிடமிருந்து எழுத்துமூலமான ஆவணத்தை பெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்று கூட்டமைப்பின் ஏனைய நாடாளும்மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள் - என்றார். (5)

# ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆவணம் கேட்கப்பட்டது

### சாந்தி எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 14

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு அவரிடமிருந்து எழுத்துமூலமான ஆவணம் கேட்கப்பட்டது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்த ராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது. ரணிலை ஆதரிப்பதற்கு அவரிடமிருந்து கையெழுத்து ஆவணம் வாங்க வேண்டும் என்று பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். அதனைச் செய்யலாம் என்று கட்சித் தலைவர் சம்பந்தன் கூறினாரா என்பது தெரியவில்லை. அன்று மாலை ரணில் விக்கிரமசிங்கவை கூட்டமைப்பு சந்தித்தது. அவரை ஆதரிப்பதற்கு எழுத்துமூல ஆவணம்கோரப்பட்டது -என்றார்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்துமூல ஆவணத்தைக் கேட்கவும் இல்லை, அவர் தந்தால் அதனைப் பெற்றுக் கொள்ளப் போவதுமில்லை என்று கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோது, "ஒப்பந்த விவகாரம் வெளியிடக் கூடாது என்று கட்சிக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அதன் காரணமாக அவர் இவ்வாறு தெரிவித்திருக்கலாம்" - என்றார். (5.110)

# ரணிலுடன் ஒப்பந்தம் எதுவுமில்லை என்கிறார் கூட்டமைப்பின் தலைவர்

யாழ்ப்பாணம், டிசெ. 14

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் ஆவணம் எதிலும் கைச்சாத்திடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராகிய நானும் இணைந்து கைச்சாத்திட்டோம் என்று தெரிவிக்கும் ஆவணமொன்று வெளியாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் இணைந்து நான் அவ்வாறான ஆவணம் எதிலும் கைச்சாத்திடவில்லை. அவ்வாறான ஆவணம் போலியானது - என்றுள்ளது. (ம-5)

# சம்பவம் நடைபெற்றது என்றவாறு மாத்திரமே தற்போது கூறமுடியும்

### மாவை. எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம், டிசெ. 14

ரணில்விக்கிரமசிங்கவுடன் உடன்பாடொன்றை எட்டியிருக்கின்றோம் என்று மட்டுமே சொல்ல முடியும். கையெழுத்துப் போட்டார், ஒப்பந்தம் செய்தார் என்று இப்போதுசொல்வது பொருத்தமாக இருக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணிலை ஆதரிப்பதற்கு முன்னதாக அவரிடம் எழுத்துமூலம் ஆவணம் வாங்க வேண்டும் என்று கட்சியில் சொல்வது முக்கிய விடயம். ரணிலுடன் பேசியுள்ளோம். ஒப்பந்தம் நடந்தது, கையெழுத்துப் போட்டது என்று சொன்னால் என்ன நடக்கும். பிரபாகரன் ஆயுதத்தால் செய்ய முடியாததை கூட்டமைப்பினரும் சம்பந்தனும் செய்யப் போகின்றனர் என்று இப்போதே தென்னிலங்கையில் சொல்லத் தொடங்கி விட்டார்கள். நாங்கள் எல்லாவற்றையும் வெளியிட்டால் நல்லதாக இருக்குமா?. கையெழுத்துப் போடப்பட்டது, ஒப்பந்தம் செய்துள்ளோம் என்று இப்போது நாங்கள் சொல்வது பொருத்தமாக இருக்காது - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு வெற்றிபெற்ற பின்னர் சக்தித் தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, நிபந்தனைகள் திருப்தியாக இருந்தபடியால் நாங்கள் வாக்களித்திருக்கின்றோம். ஆனால் அதை இன்னும் நாங்கள் வெளியிடவில்லை என்று குறிப்பிட்டார். இந்த நிபந்தனைகள் எழுத்துமூலம் கைச்சாத்திடப்பட்டனவா? என்ற கேள்விக்கு, 'ஆம், ஆவணம் வரும்' என்று பதிலளித்தார். (ம-5)

# கையெழுத்திட்ட ஆவணத்தை வழங்குவதற்கு ரணில் தயார்!

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதனைச் செயற்படுத்தும் உறுதிப்பாட்டு ஆவணத்தை கையெழுத்திட்டு வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாராகவே இருந்தார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்னர் அவரிடம் எழுத்துமூல ஆவணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். அப்படியான ஆவணத்தைவழங்கத் தயாராக இருப்பதாக ரணில் கூறினார் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நம்பிக்கை வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் சக்தித் தொலைக்காட்சிக்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்ட ஆவணத்தைவழங்குவதாகக் கூறினார். அவர் வழங்கியிருப்பார் என்று நினைக்கின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார். (ம-5)

# ரணிலிடம் உறுதிப்பாடுகளை கூட்டமைப்பினர் கோரினார்கள்

### சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 14

ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது, எழுத்துமூல ஆவணத்தை நாம் வலியுறுத்தவில்லை. அவரிடம் உறுதிப்பாடுகளைக் கேட்டோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

"நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், ரணிலிடம் எழுத்துமூல ஆவணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பலரும் கருத்துக்களை முன்வைத்தார்கள். ஆனால் தீர்மானம் எடுக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுடன் அன்று மாலை இடம்பெற்ற சந்திப்பில், எழுத்துமூல ஆவணம் கேட்கவில்லை. ஒப்பந்தம் அல்லது ஆவணம் போன்று இல்லாமல், உறுதிப்பாடுகளைக் கேட்டோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க எழுத்துமூலம் ஆவணம் தந்தாலும் அதனை ஏற்கோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்கூறியமை தொடர்பில் கேட்டபோது, "அவர் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார் என்று நினைக்கின்றேன். எழுத்துமூலம் தந்தால் ஏற்கத்தானே வேண்டும்" என்று குறிப்பிட்டார். (ம-5,110)

# ஈயத்துக்கு தங்கமுலாம் பூசி அசல் தங்கம் என்று டிமிக்கி

## சந்தேகத்தில் ஒருவர் கைது மேலும் இருவருக்கு வலை!

**கிளிநொச்சி, டிசெ. 14**

**ஈயத்துக்கு தங்க முலாம் பூசி அதை அசல் தங்கம் என்று ஏமாற்றி 23 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த மோசடியில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கப்படும் மூவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.**

'யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி உரிமையாளரே ஏமாற்றப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியில் தங்குவதற்கு அறைகள் தேவை என்று அதன் உரிமையாளருடன் சந்தேகநபர் ஒரு மாதத்துக்கு முன்னர் கதைத்து அவரின் தொலைபேசி இலக்கத்தைச் பெற்றுச் சென்றுள்ளார். பின்னர் தான் வாகன (ஜே.சி.பி) வேலை செய்பவர் எனவும் அவ்வாறு வேலை செய்யும்போது தங்கக் கட்டிகள் கிடைத்தன என்றும் அவற்றை விற்பனை செய்யவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். அதில் ஒன்றை 23 இலட்சம் ரூபா என்று இருதரப்பினரும் விலை பேசியுள்ளனர். அதைக் கொள்வனவு செய்ய கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குப் பின்பாகவுள்ள இரண்டாவது வீதிக்கு விடுதியின் உரிமையாளர் அழைக்கப்பட்டுள்ளார். அதன்படி பொருளையும் பணத்தையும் பரிமாறிக்கொண்டனர். அநுராதபுரத்திலிருந்து வந்திருந்தவர் பணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிவிட்டார்.

விடுதி உரிமையாளர் அந்தப் பொருளைப் பரிசோதித்தபோது அவை ஈயத்தில் செய்யப்பட்ட போலியான பொருள் என்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. பொருள் பரிமாறப்பட்ட வீதியில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணியின் (சி.சி.ரி.வி) உதவியுடன் சந்தேகநபர் அடையாளப்படுத்தப்பட்டார். அவர் பயன்படுத்திய மகிழுந்து (கார்) இலக்கத்தை வைத்து அனுராதபுரத்துக்குச் சிவில் உடையில் பொலிஸார் சென்றனர். அது வாடகைக்கு விடப்படும் மகிழுந்து என்பதும் அதை வாடகைக்கு விட்டவர் எது வித பதிவுகளுமின்றி வாகனத்தை வழங்கியுள்ளார் என்பதும் தெரியவந்தது. வாடகைக்கு விட்டவர் மூலமாகச் சந்தேகநபர் குறிக்கப்பட்ட இடத்துக்கு அழைக்கப்பட்டார்' என்று இது பற்றிய விசாரணையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி மாவட்டப் போதைப் பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.



'அவர் ஏற்கனவே மறைகாணியில் காணப்பட்ட நபர் என்பதை உறுதி செய்து அவரைக் கைது செய்தோம். அவரது வீட்டில் சோதனையிட்டபோது அங்கு போலியான நாணயங்கள், ஆறு அலைபேசிகள், அடையாள அட்டைகள் உள்ளிட்ட பலவும் கைப்பற்றப்பட்டன. பதிவேட்டில் (டயறி) பல்வேறு தொலைபேசி இலக்கங்கள் காணப்பட்டன. அவை வியாபார நிலையங்களின் பெயர்பலகைகளில் காணப்படும் இலக்கங்கள் என்பது தெரியவந்தது. அவர் இன்னும் பல வர்த்தகர்களை ஏமாற்றியிருக்கலாம் என்று கருதுகிறோம். இந்தச் சம்பவத்தில் 3 பேர் தொடர்புபட்டுள்ளனர். மற்றைய இருவரும் கைது செய்யப்படுவார்கள். விசாரணையின் பின்னரே மேலதிக விடயங்கள் தெரியவரும்' என்று பொலிஸ் அதிகாரி சதுரங்க மேலும் தெரிவித்தார். சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ம-4,6,35)

---

# சாவகச்சேரி நகர சபைக்கு வரும் வருமானத்தை குறைக்க முயற்சி

## முன்னணி உறுப்பினர்கள் மீது வரியிறுப்பாளர்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, டிசெ. 13

சாவகச்சேரி நகரசபைக்கு நிரந்தர வருமானம்கிடைக்கும்வழிமுறைகளைத்தடுக்கும்நோக்கில்உறுப்பினர்கள் சிலர் செயற்படுகின்றனர் என்று சாவகச்சேரிவரியிறுப்பாளர்கள்கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொதுச் சந்தையைக் குத்தகைக்கு விடுவது, சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இயங்கும் வங்கியை வெளியேற்றுவது, இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவதை நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்றும் வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

வருமான வரி அறவீடு மூலமாக மாதாந்தம் சராசரியாக 8 லட்சம் ரூபாவருமானமாகக்கிடைக்கிறது. யாழ்ப்பாணப்பிராந்தியஉதவிஉள்ளூராட்சி ஆணையாளர் 2011ஆம் ஆண்டுநகரசபையின்ஆணையாளராக இருந்த காலத்தில் பொதுச் சந்தை குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகையாளர்44லட்சம்ரூபாவுக்குச் சந்தையைக் குத்தகைக்கு எடுத்து பணியாளர்களை வைத்து நடத்தி வந்தார். அவர் சந்தையில் தாம் நினைத்தவாறு வரி அறவிட்டதால் பொதுமக்கள் பலரும், உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டனர். அதனால் சாவகச்சேரிச் சந்தைக்கு உற்பத்திப்பொருள்களைக்கொண்டு வராமல் கொடிகாமம் மற்றும் ஏனையசந்தைகளுக்குக்கொண்டு சென்றனர். அதனால் சந்தையின் நிரந்தரவருமானம்வீழ்ச்சியடைந்தது. 2012 ஆம் ஆண்டு சந்தை 50 லட்சம் ரூபா மதிப்பீட்டில் குத்தகைக்குவிடுவதற்குகேள்விஅறிவித்தல் கோரப்பட்டிருந்தது. அதிக தொகை என்று கருதி எவரும் குத்தகை எடுக்க முன்வரவில்லை. ஜனவரி முதலாம்திகதிதொடக்கம்சபையின் அலுவலகத்தில் பணிபுரிந்த ஊழியர்களை மீண்டும் சந்தைக்கு நியமித்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. சபை நியாயமான வரி அறவிட்டது. பெருமளவுஉற்பத்தியாளர்கள் மீண்டும் சந்தைக்கு வரத்தொடங்கினர். சந்தையின் வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்தது. அந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை சந்தை வருமானமாக 98 லட்சம் ரூபா அறவிட்டுச் சாதனை படைத்தது.

50லட்சம்ரூபாவுக்குக்குத்தகைக்கு எடுத்தால்நட்டம்ஏற்படுமெனத்தெரிவித்தவர்கள்10மாதசாதனையைப் பார்த்து வியந்தனர். சபை நடத்தியதில் டிசெம்பர் மாத நிறைவில் ஒரு கோடியே12லட்சம்ரூபாவைச்சபை வருமானமாகப்பெற்றது. அன்றிலிருந்துசந்தையைச்சபையேநடத்தி வருகின்றது.

இந்தநிலையிலேயே சந்தையை அடுத்த வருடம் குத்தகைக்கு விடுமாறு சபையின் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிஉறுப்பினர்ப.ஜெயகாந்தன் கடந்த வாரம் நடைபெற்ற சபைஅமர்வில்கோரிக்கைவிடுத்திருந்தார். அந்த விடயத்தில் சபையின் உப தவிசாளரான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த அ.பாலமயூரனுக்கும் உறுப்பினர் ஜெயகாந்தனுக்கும்இடையில்வாக்குவாதம் ஏற்பட்டது.

"சந்தைபொதுமக்களுக்குச்சேவை வழங்கவேஉள்ளது. குத்தகைக்குக் கொடுப்பதால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களுக்குச் சபையே பொறுப்பேற்க வேண்டிவரும். எனவே சந்தையை எந்தக் காரணம் கொண்டும் குத்தகைக்கு விடமுடியாது" என்று உப தவிசாளர் கூறினார்.

அடுத்து, சபைக்குநிரந்தரவருமானமாகசபைக்குரியகட்டடத்தில்இயங்கும்வங்கிஒன்றுவாடகைப்பணம் செலுத்திவருகிறது. அந்தவங்கியை சபைக் கட்டடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மற்றொருஉறுப்பினர்யோ.ஜெயக்குமார்சபைஅமர்வில்கருத்துமுன் வைத்தார். நகரசபையின் பொன் விழா மண்டபம் அமைப்பதற்கு 5 கோடிரூபாகடன்பெற்றுஅமைக்கப்பட்டு முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஒப்பந்ததாரர் விலகியிருந்தனர். அதனால் சபை நிதியிலிருந்து 2 கோடி ரூபா பெற்று கட்டட வேலைகள்முழுமையாக்கப்பட்டன. பெற்ற கடனுக்காக மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபா கடன் செலுத்தப்பட்டு வருகிறது. வங்கி வழங்கும் வாடகைப் பணத்துடன் பொன் விழா மண்டபத்தில்கிடைக்கும்நிதிஉதவியுடன் கடன் தொகை மாதாந்தம் செலுத்தப்பட்டு வருகிறது என்று சபையின் ஆளுங் கட்சியினர் விளக்கமளித்திருந்தனர்.

இந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்உறுப்பினர் வங்கியைவேறுஇடத்துக்குமாற்றுவதற்குமுயற்சிகள்மேற்கொள்வது ஏன்? என்றும் வரியிறுப்பாளர்கள் கேள்வியெழுப்பினர்.

சபைக்கு வருமானம் கிடைக்கும் வழிவகைகளைக் கண்டறிந்து அதனைச் செயற்படுத்தி அபிவிருத்திவேலைகளைமேற்கொள்வதையே உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து சபைக்கு நிரந்தரமாகக் கிடைக்கும் வருமானங்களை உறுப்பினர்கள்தடுக்கமுயற்சிக்கக்கூடாது. இது அவர்கள்சுயநலமாகச்செயற்படுவதையே காட்டுகின்றது என்றும் வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

(4,9)

---

வடமாகாண முன்பள்ளிகளின்

# கண்காட்சியும்கலைநிகழ்வும்இன்றும்கண்காட்சியைப்பார்க்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலைநிகழ்வவுகளும் நேற்று ஆரம்பமாகின. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவஅபிவிருத்திப்பிரிவின்ஏற்பாட்டில்யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் மாகாண முன்பள்ளிப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் இவை ஆரம்பமாகின.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கோட்டமட்ட, வலய மட்டப் போட்டிகளில் வைக்கப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கணிதம், தமிழ், சுற்றாடல், அழகியல் உள்ளிட்ட அனைத்துப்பாடப்பிரிவுகளுக்கும்ஏற்ற கல்விசார்ந்த கைவினைப்பொருள்கள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடக்குமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இங்கு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகள், ஆளுநர் செயலக அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், சிறார்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர். காலை 9 மணி தொடக்கம் மாலைமாலை 4 மணிநடைபெறும்இந்த கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(4,7)

---

கம்பியால் கட்டப்பட்ட என்புக்கூடு மீட்பு:

# மோசமான சித்திரவதைகள் இடம்பெற்றதன் வெளிப்பாடே!

மன்னார், டிசெ. 14

மன்னார் புதைகுழியில் இரும்புக் கம்பியால் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சம் மீட்கப்பட்டமை, கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டு, அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு, அடிமைகளாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்ற உண்மையைத்தான் புலப்படுத்துகிறது.

இவை அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். மன்னாரில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் நகர நுழைவாயிலில் சதொச விற்பனை வளாகத்தில் நூற்றுக்கணக்கான மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவை அச்சத்தையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலையில், பன்னாட்டுத் தூதரக பிரதிநிதிகள் மன்னார் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். அங்கு இன்னும் மனித என்புக் கூடுகள் மீட்கப்படுகின்றன. 21குழந்தைகளின் மனித என்புக் கூடுகள் உட்பட 269 பேரின் என்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் என்ற காரணத்துக்காகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களின் என்புக் கூடுகளாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்த உண்மை வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பு. கொல்லப்பட்டவர்கள் யாரால்? எப்போது? கொல்லப்பட்டனர் என்ற உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் வெளியேறிய அத்தனை இடங்களிலும் மனிதப் புதை குழி இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

பன்னாட்டுக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழிகளும் கிளறப்படவேண்டும். இதனூடாக எதிர்காலத்திலாவது ஈழத் தமிழர்கள் இன அழிப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். தெற்கில் ஏற்பட்டுள்ள இந்த குழப்ப நிலையில் அங்கிருக்கும் பேரினவாதக் கட்சிகள் எதுவானாலும் நாட்டை ஆண்டு விட்டு போகட்டும். எங்களுக்கு இன்றுவரை மனித புதைகுழி தொடர்பாக ஆழமான கருத்து அல்லது அழுத்தம் வழங்கப்படவில்லை. அவ்வாறிருக்க இந்தப் புதைகுழி தொடர்பான உண்மைகள் வெளிவருவதன் ஊடாகப் பல உண்மைகள் வெளிவரும் வாய்ப்புகள் உருவாகும் என்று நம்புகின்றோம் - என்றார். (4,56)



## பார்த்தீனிய ஒழிப்பு காரையில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம். டிசெ. 14

காரைநகர் பெரியடைப்பு - மருதபுரம் வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த பார்த்தீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. அந்தப் பகுதி அரச அதிகாரிகள் மாணவர்கள், மக்களுடன் இணைந்து அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதிச் சீரமைப்புக்காக வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மண் மூலமாக பார்த்தீனியம் இங்கு பரவியிருக்கலாம் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

காரைநகர் பிரதேசசெயலாளர் திருமதி உஷாசுபலிங்கத்தின் வழிப்படுத்தலில் மக்களின் உதவியுடனும் அவற்றை அழிக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

முதலில் பார்த்தீனியச்செடிகள் மற்றும் அதன் தாக்கம் தொடர்பாக மாணவர்களுக்கும் மக்களுக்கும் அறிவுறுத்தப்பட்ட பின்னர் பார்த்தீனியத்தை அழிப்பு இடம்பெற்றது.

விவசாய அபிவிருத்தி அலுவலர் ந.பொன்ராசா, காரை. மேற்குகிராமஅலுவலர் சு. ஸ்ரீரமணன் உள்ளிட்டபலர் கலந்து கொண்டனர் என்று ந.பொன்ராசா தெரிவித்தார். (4)

# பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசஅதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவும்

## சுழற்சி முறையில் செயற்படுமாறும் ஆளுநர் ஆலோசனை



யாழ்ப்பாணம், டிசெ. 14

**வடக்கு மாகாணத்தில் பார்த்தீனியம் ஒழிப்பு தொடர்பான அனைத்து திட்டங்களும், சட்டங்களும் தெளிவாக உள்ளன. பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அதற்காகசுழற்சி முறையில் செயற்படமுடியும் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.**

பார்த்தீனியம்ஒழிப்புதொடர்பான கலந்துரையாடல் மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரேதலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

**பூக்கும்போது அழித்துவிடுங்கள்**

வடக்குமாகாணத்தில் சுமார் 750 ஏக்கரில் பார்த்தீனியச் செடிகள் உள்ளன. அவைபூக்கும்தருணத்தில் நாம் கட்டுப்படுத்தாமல் விட்டால் இனம் பெருகிக் கொண்டே செல்லும். பார்த்தீனியம் ஒழிப்புஎன்பது வெறுமனே விவசாயத் திணைக்களத்தின் வேலையல்ல. வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள், திணைக்களங்கள் அனைத்துக்கும் இதில் பங்குள்ளது. ஆகவே மாதம் ஒன்றில் சுழற்சி முறையில் பார்த்தீனியம் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

தனியார்நிலங்கள், அரசநிலங்கள், வீதிகள், போன்றவற்றில் பார்த்தீனியம் உள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும். இது பற்றி உரிய தரப்பினருக்கு அறிவித்தல் சென்றடையச் செய்யவேண்டும். பார்த்தீனியம் இருப்பது அடையாளம் காணப்பட்டால் அதனை அழிக்குமாறு உரிமையாளருக்குப் பணிக்க வேண்டும். அல்லது மஞ்சள் துண்டறிக்கை, அதன் பின்னர் சிவப்பு துண்டறிக்கை வழங்க வேண்டும். அதற்கும் அவர்கள் பார்த்தீனியத்தை அழிக்கவில்லை என்றால் சட்ட நடவடிக்கைக்குச் செல்ல முடியும்.

இதுவரை 203 பேருக்கு மஞ்சள் துண்டறிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பார்த்தீனியம் ஒழிப்புநடவடிக்கையில் இராணுவத்தினரை ஈடுபடுத்தலாம்.

அவர்கள் உங்களுக்கு உதவத் தயாராக உள்ளனர். கடந்த நான்கு வருடங்களாகப் பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்னமும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இல்லை. ஆகவே ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளின் கீழுள்ள அனைத்து அரச தரப்பினரும் சுழற்சி முறையில் செயற்பட்டு பார்த்தீனியத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்குத் தேவையான வளங்களை விவசாய அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வழங்கும் - என்றார்.

கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், செயலர்கள், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அதிகாரிகள், இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.

பார்த்தீனியம் அழிக்கப்படவேண்டும் என்றுகூறி வடக்கு மாகாண விவசாய அமைச்சு முன்னர் நடவடிக்கைகள் எடுத்திருந்தது. பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. எனினும் முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கவில்லை. (4,7)

## கொடிகாமம் கொலனி மக்களுக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை

கொடிகாமம், டிசெ. 8

கொடிகாமம் கொலனிப் பகுதியில் மக்களுக்குக் காணிகளுக்கான ஆவணங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றுபிரதேசசெயலர் உறுதியளித்துள்ளார் என்று சாவகச்சேரிப்பிரதேசசபையின் உபதவிசாளர் செ.மயூரன் தெரிவித்தார்.

அந்தப்பகுதிக்குக் கடந்த 27 ஆம் திகதி சென்றிருந்த தென்மராட்சிப் பிரதேச செயலர்

திருமதி தேவந்தினி பாபு, உபதவிசாளர் ஆகியோர் அந்தப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களுடைய குறைபாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். அதன்போதே பிரதேசசெயலர் மேற்கண்டவாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இந்த இடம் உள்ளது.

“இங்கு 15 குடும்பங்கள் நிரந்தரவீடுகளின்றி, காணிகளுக்குச் சட்ட ஆவணங்களின்றி, தற்காலிககொட்டில்களில் பல வருடங்களாக வசித்து வருகின்றனர். மழைகாலத்தில் அவர்களுடைய குடிமனைக்குள் வெள்ளம் புகுந்துவிடும். வெள்ளம் வற்றும்வரை அவர்கள் வேறு எங்காவது வாழவேண்டிய அவலம் வருடாந்தம் தொடர்கிறது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிப்படைகின்றன. சுகாதாரப் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். இந்தப் பகுதியில் தற்காலிக கொட்டில்களில் வசித்துவரும் மக்களுக்கு நிரந்தர வீடும் காணிக்குரிய சட்டரீதியான ஆவணங்களும் பெற்றுத் தரவேண்டும்” என்று அங்குள்ள மக்கள் சாவகச்சேரிப்பிரதேசசபையின் உபதவிசாளர், கொடிகாமம் பகுதி சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் கோரிக்கைவிடுத்திருந்தனர். பிரதி நிதிகள் இவை தொடர்பில் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தனர்.

“அங்கு, மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த பிரதேச செயலர், அவர்களுக்கு காணி உறுதி ஆவணம் வழங்க ஏற்பாடுசெய்கிறேன் என்று உறுதியளித்தார். சமூகமட்டஅமைப்புக்களின் ஒத்துழைப்போடும், சாவகச்சேரிப்பிரதேசசபையின் ஒத்துழைப்போடும் சட்ட ஆவணம் ஒன்றுதயாரிக்கப்படும். எதிர்காலத்தில் வீடு, மலசலகூடம் என்பனவற்றை வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் மேற்குறித்த சட்ட ஆவணம் மூலமாக அவற்றை வழங்கலாம். அந்த பகுதியில் சில குடும்பங்களுக்குச் சட்டத்துக்குப் புறம்பான வகையில் சட்ட ரீதியற்ற ஆவணங்கள் கொடிகாமத்தைச் சேர்ந்த சிலரால் வழங்கப்பட்டுள்ளன. பணம்பெற்று இந்தச் சட்டவிரோத நடவடிக்கை இடம்பெற்றுள்ளதுஎன்பது பிரதேச செயலகத்தினர் ஆவணங்களைஆராய்ந்த பின்னர் தெரியவந்துள்ளது. அவற்றைத் தயாரித்துக் கொடுத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்“ என்றும்பிரதேச செயலர் கூறி யிருந்தார் என்று மயூரன் மேலும் தெரிவித்தார். (4,159)

## உறவினருக்காகப் பரிந்துபேசி சபைநடவடிக்கையில் தலையீடு

*முன்னணியின் உறுப்பினர் மீது குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், செ. 13

சாவகச்சேரிநகரசபை உறுப்பினர் ஒருவர் தனது உறவினருக்காகப் பரிந்துபேசி நகரசபையின் நடவடிக்கையில் தலையிடுகிறார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவர் தனது வட்டாரத்தில் வசிக்கின்ற தனது குடும்ப உறவினரின் வீட்டு எல்லைமதிலை நகராட்சி மன்றத்தின் கட்டட அனுமதியைப் பெறாமல் கட்ட அனுமதித்திருந்தார் என்பதே சபையில் சர்ச்சையாகியது. கட்டட அனுமதி தொடர்பான விண்ணப்பத்தைப் பரிசீலித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் எல்லைச்சுவர் அமையவுள்ள பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போதே உறுப்பினரின் உறவினருக்கும் அயல்குடியிருப்பாளருக்கும் எல்லைப்பிணக்கு இருப்பது தெரியவந்துள்ளது.

அதுமட்டுமின்றி குறித்த எல்லையை அடையாளப்படுத்துவதற்குரிய வேலிக் கதியால்கள் முற்றுமுழுதாக அகற்றப்பட்டு எல்லைச்சுவருக்கான அத்திவாரமும் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது.

பிணக்குத்தீர்க்கப்படாததால் நீதிமன்றில் வழக்கிடுமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த உறுப்பினர் “மதிலை அமைக்குமாறு கூறியதோடு வருகின்ற பிரச்சினைகளை தான் சமாளிப்பதாகவும் கூறியுள்ளார்” என்று தெரிவிக்கப்பட்டது. சட்டவிரோதமாக மதில் அமைக்க முற்பட்டபோது அயல்குடியிருப்பாளரான பெண் அழுதவாறு தவிசாளரிடம் முறையிட்டுள்ளார். தவிசாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலமாகச் சட்டவிரோத மதில் அமைப்பை நிறுத்தியதோடு சட்டநடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். குற்றச்சாட்டுத் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் குறித்த உறுப்பினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, “அத்தகைய பிரச்சினை ஒன்று உள்ளது. திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சபை அனுமதி கொடுக்கவில்லை. அயலவர் ஒருவர் நகர சபையில் முறைப்பாடு செய்திருந்தார். அதனாலேயே நகரசபை அனுமதி கொடுக்கவில்லை” - என்றார். (4,8)

## திங்கட்கிழமையிலிருந்து பார்த்தீனிய ஒழிப்பு வாரம்

*யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரம் பார்த்தீனிய ஒழிப்பு வாரமாகக் கடைபிடிக்கப்படும். அந்த வாரத்தில் சகலரும் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கண்டிப்பான அறிவித்தலை விடுத்துள்ளார்.

பார்த்தீனியம் ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் ஆளுநர் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர், திட்டங்களை நடைமுறைபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச்செயலர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மாவட்டச்செயலர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்பாண மாவட்டத்தில் பார்த்தீனியத்தின் பரம்பல் அதிகமாக உள்ளமை பற்றி உங்களுக்குத் தெரியும். அதனை உடனடியாக ஒழிக்க வேண்டும். காலந்தாழ்த்தினால் அதில் உள்ள பூ காயாக மாறி விதையை தோற்றுவிக்கும். பின்னர் அதன் பரம்பல் பன்மடங்கு அதிகரித்துவிடும். அதற்கு எவரும் இடமளிக்கக்கூடாது. ஒவ்வொருபிரதேசசெயலகபிரிவிலும் பார்த்தீனியம் ஒழிப்பு தொடர்பான அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள் உள்ளனர். அவர்களையும் அரசஅதிகாரிகள் மற்றும் சமூக பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்துக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

அந்தக்குழு பார்த்தீனியம் உள்ள இடங்களை இனம் காணுதல், அழித்தல், விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகளைச் செய்யும். ஒரு தடவை பார்த்தீனிய ஒழிப்பு வேலையைச் செய்தால் மட்டும் பார்த்தீனியம் கட்டுப்பாட்டுக்குள் வராது. இது டெங்கு ஒழிப்பு போன்று தொடர்ச்சியான செயற்பாடக அமைய வேண்டும். அதற்கான அறிவித்தல்கள் பிரதேச செயலர் ஊடாக அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படும். எதிர்வரும் திங்கட்கிழமை 17 ஆம் திகதி தொடக்கம் பார்த்தீனியம் ஒழிப்பு வாரமாக அறிவிக்கப்படுகிறது. ஆகவே விவசாய நிலம், வீதி, பொது இடம், திணைக்களங்கள், பாடசாலைகள் எல்லாவற்றிலும் இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாக அமையும். இதற்கு இராணுவத்தினர், பொலிஸாரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியும். பார்த்தீனியம் கட்டுப்படுத்தல் தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள், விவரங்கள் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்படும் - என்றார். (4,7)

# வவுனியா நகர சபை பாதீடு பார்வைக்கு

சாவகச்சேரி, டிசெ. 14

சாவகச்சேரிநகரசபையின் உத்தேச வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் நேற்றுமுன்தினம் தொடக்கம்பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் நகரசபை அலுவலகத்திலும் சாவகச்சேரி மீசாலை நுணாவில் ஆகிய பொது நூலகங்களிலும் ஒரு வாரத்திற்குபார்வையிடமுடியும் என்று தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்மூலம்தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கும் நகரசபையின் முதலாவது உத்தேச வரவு - செலவுத்திட்டத்தில் பல்வேறு அபிவிருத் தித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கும்எனமக்கள்எதிர்பார்க்கின்றனர் என்று வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

# தமது பாதுகாப்பை பொதுமக்கள் தாமே உறுதி செய்ய வேண்டும்

## நிலமையை விளக்குகிறார் பொலிஸ் அதிகாரி

கொடிகாமம், டிசெ. 14



**பொதுமக்கள் தமது பாதுகாப்பினைத் தாமே உறுதிப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதனைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.கே கோணாரதெரிவித்தார்.**

சாவகச்சேரிபொலிஸ்நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எமது சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. இவ்வாறான பிரச்சினைகளை கட்டுக்குள்கொண்டுவர வேண்டுமாக இருந்தால்பொதுமக்கள்ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பினைத் தாமேஉறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தற்போதுஇளைஞர்கள்உட்படப்பலரும்தலைக்கவசம் இன்றிப்பயணிக்கின்றனர். அதில் சிலர் மதுபோதையிலும்பயணிக்கின்றனர். ஒருபோதும் பொலிஸாருக்காக தலைக் கவசம் அணியக் கூடாது. உங்கள் பாதுகாப்பின் பொருட்டேதலைக்கவசம் அணிய வேண்டும்.

அத்துடன் பெரும்பாலான பெண்கள் தனிமையில் வெளியில்செல்லும்போதும் பெறுமதியான தங்க ஆபரணங்களைஅணிந்து செல்கிறார்கள். எமக்குபாதுகாப்பு இல்லை என உணரும் பட்சத்தில்தங்கஆபரணங்கள் அணிந்து செல்வதனைத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக கவரிங் நகைகளை அணிந்து கொள்ள முடியும்.

அத்துடன் பல இடங்களில் வீடு மற்றும் வர்த்தக நிலையங்களின் மேல் கூரை மற்றும்கதவுகள்பாதுகாப்பானதாக இல்லை. இதுவே திருடர்களுக்கு சந்தர்ப்பமாக அமைந்து விடுகிறது. நாம் ஒருபோதும் தவறு இடம் பெறுவதற்கு வழிவகுத்துக்கொடுக்கக் கூடாது. இயன்றவரை எமது பாதுகாப்பினைப் பலப்படுத்தி பாதுகாப்பாக வாழ்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

எமது சமூகத்தில் உள்ள மிகப்பெரியபிரச்சினைமது போதையில் வாகனம் செலுத்துதல். இவ்வாறானவர்கள் தாமாகஉணர்ந்து இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். மதுபோதையில்சாரத்தியம் செய்வதால்தமதுஉயிருக்கு தாமே ஆபத்தைத் தேடுவதுடன் தவறு செய்யாத இன்னொருவருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றனர் - என்றார் (159)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இரு மாடிக்கட்டடம் இன்று திறப்பு

சுன்னாகம், டிசெ.14

சுன்னாகம்கந்தரோடைஸ்கந்தவரோதயக்கல்லூரிவளாகத்தில்நவீனவசதிகளுடன்கூடிய இருமாடிக்கட்டடம்ஒன்று இன்று காலை 8 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

மறைந்த லயன். செ. மகாதேவா(சமாதானநீதிவான்) மற்றும் அவரது மனைவியான லயன்சீமாட்டி ம. பூமாதேவி ஆகிய இருவரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட கட்டடமே திறந்துவைக்கப்படவுள்ளது.

கல்லூரி முதல்வர் மு. செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும்நிகழ்வில்முதன்மைவிருந்தினராகநாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

லயன். செ. மகாதேவா(சமாதானநீதிவான்)மற்றும்அவரது மனைவியானலயன்சீமாட்டிஆகியோரின்புதல்வர்களான ம. பிருந்தாபன், லயன். ம. பிரிதிவிராஜா(ஸ்கந்தவரோதயன்)

இருவரும் இணைந்து ஞாபகார்த்தக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளனர். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனால் கட்டடதிறப்பு நிகழ்வின் சிறப்புமலர் வெளியிடப்படவுள்ளது. (ஐ)



# மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடு

வடமராட்சி, டிசெ.13

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் ராகம அமைப்பின் அனுசரணையுடன் மதுசாரம், புகையிலை, போதைப்பொருள்கள் பாவனைக்குஎதிரான விழிப்புணர்வு செயற்பாடுகள்கடந்தமாதம்28ஆம்திகதிநான்குபாடசாலைகளில் இடம்பெற்றன.

யா/நெல்லியடி மத்திய கல்லூரி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யா/புற்றளை மகா வித்யாலயம் ஆகிய பாடசாலைகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்றன.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தெருவீதி நாடகம் இடம்பெற்றது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனமானது கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மதுசாரம், புகையிலை, போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடுகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. (ஐ)

# கைதடி பொது அரங்கு மக்கள் பாவனைக்கு

கொடிகாமம், டிசெ. 14

கைதடி சிவபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொது அரங்குக் கட்டடம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் பால்காய்ச்சிபொதுமக்கள்பாவனைக்குவிடப்பட்டள்ளது. நாடாளுமன்றஉறுப்பினர்எம். ஏ. சுமந்திரனின்நிதிஒதுக்கீட்டில் 20 லட்சம் ரூபா செலவில் இந்த அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடத்துக்கானபால்காச்சும்நிகழ்வில்வடக்குமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரிநகரசபையின் முன்னாள்உறுப்பினர்த. சுதர்சன், சாவகச்சேரிபிரதேசசபை உறுப்பினர் ச. தங்கராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)






# சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கருத்திட்ட நிகழ்வு

பருத்தித்துறை, டிசெ. 14

இலங்கையின் கரையோர வலயம்சார்ந்த சிறுவர்களின்பாதுகாப்புக்கான கருத்திட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்புஅதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறை பிரதேச செயலகம் ஊடாக தொண்டமனாறு வடக்கு கிராமத்தில்நடைபெற்று வருகின்றது.

இந்தத் திட்டத்தின் நிகழ்ச்சியில் ஒன்றாக குறித்த கிராம சிறுவர்களுக்கானமகிழ்வூட்டல்மற்றும்கற்றல்உபகரணங்கள்வழங்கும்நிகழ்வும்கடந்த 7ஆம்திகதிபெரியகடற்கரைமண்டபத்தில் நடைபெற்றது. இதில் 100 சிறுவர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர். மகிழ்வூட்டல்நிகழ்ச்சிசெம்முகம் ஆற்றுகைக்குழு ஊடாக நிகழ்த்தப்பட்டது.

இந்தநிகழ்வில்சிறுவர்பாதுகாப்புஅலுவலகர், சிறுவர்உரிமை மேம்பாட்டுஅலுவலகர், உளவளத்துறை அலுவலகர்கள், கிராமஅலுவலகர், பொருளாதார அபிவிருத்தி அலுவலகர்ஆகியோர் கலந்துகொண்டனர். கரையோர வலயம்சார்ந்தசிறுவர்களின் பாதுகாப்புக்கான கருத்திட்டம் இலங்கையின் 12 மாவட்டங்களில் உள்ள 12 கிராமங்களில் நடைபெற்று வருகின்றன. (ஐ)

# இழப்பீட்டுக்கான பதிவை மேற்கொள்ள முடியும்

சாவகச்சேரி, டிசெ 14

அண்மையில்வீசியகஜாபுயல்மற்றும்கடும்மழையினால் தென்மராட்சிபிரதேசத்தில்பாதிக்கப்பட்டகுடும்பங்களுக்கு இழப்பீடுவழங்குவதற்கானபதிவுகள்பிரதேசசெயலகத்தில் பிரதேச இடர் முகாமைத்துவ அலகினரால்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் புயல்காற்று மற்றும்கடும் மழையினால் சிறு சேதத்திற்குள்ளான 502 குடும்பங்களுக்கு இழப்பீடுவழங்குவதற்கான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

நாவற்குழி கிழக்கு, மறவன்புலவு, சங்கத்தானை, சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, கல்வயல், நுணாவில் மேற்கு, மட்டுவில், வடக்கு சந்திரபுரம், சரசாலை தெற்கு, மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு, அல்லாரை, கொடிகாமம்வடக்கு, கொடிகாமம்மத்தி, கெற்பேலி, எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, மிருசுவில் வடக்குமிருசுவில் தெற்கு, நாவற்காடு, மாசேரி, கரம்பைக்குறிச்சி, வரணி, இயற்றாலை, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்குஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அண்மையில் நிறுவனமொன்றினால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

# வெற்றிலைக்கேணி வயல்களில் நீண்ட காலத்தின் பின் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

வெற்றிலைக்கேணி மன்டலாய் பிள்ளையார் கோயில் தொடக்கம் இயக்கச்சி வாடியடிச் சந்தி வரைக்குமான அனேகமான வயல் நிலங்கள் இவ்வருடம் செய்கை மேற்கொள்ளப்படுகின்றன.

போர்முடிவடைந்து அப்பிரதேசத்திலுள்ள வெடிபொருள்கள், கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட நிலையில் இவ்வருடம் விவசாயிகள்காலபோக நெற்செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனாலும் நீண்ட காலம் இந்தப் பகுதிகள்போர்நடைபெற்ற இடமாக இருந்தமையினால்இப்போதும்ஆங்காங்கே வெடிபொருள்கள்காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இவ்வாறாக வயல் நிலத்தில் காணப்பட்ட வெடிபொருள்கள் அன்மையில் அந்தப் பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டன.

வயல்நிலத்தில்வெடிபொருள்கள் இருப்பது தொடர்பில் கண்டறியப்படின் இராணுவத்தினர் அல்லது கண்ணிவெடி அகற்றும்பிரிவினரின் உதவியுடன் அவற்றை அகற்றி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-70)

# ஊர்காவற்றுறை பாதை சேவை அடிக்கடி பாதிக்கப்படும் அவலம்



**யாழ்ப்பாணம்,டிசெ 12**
**ஊர்காவற்துறைகடற்கரையில் இருந்து காரைநகர் கரைக்கு செல்லும் கேபிள் மூலமான பாதைப் படகு சேவை அடிக்கடி பாதிப்புக்குஉள்ளாவதாகமக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.**

ஊர்காவற்துறை கடற்கரையில் இருந்து வாகனங்கள் மற்றும் பாரமான பொருள்களைக் காரைநகர் கரைக்குக் கொண்டு செல்வதற்காக கேபிள் மூலமான பாதை படகுசேவை நடைபெற்றுவருகிறது.
450 மீற்றர் நீளமான கடல் பரப்பில் பொருள்களை மறு கரைக்கு கொண்டு செல்வதற்கு சுமார் 7 நிமிட பயணமாக வீதிஅபிவிருத்தி அதிகார சபையினால் இந்த சேவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
இதனைபலபயணிகள் அன்றாடதேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.
கேபிள் மூலம் இணைக்கப்பட்ட இந்த பாதைபாரியபடகுபோன்றுதோற்றமளிக்கும். இதன் மீது பாரமான பொருள்களை இந்த கரையில் இருந்தும் மறுகரைக்கு கொண்டு செல்ல முடியும். ஆனால் இந்த படகுத் தொகுதி பொருத்தப்பட்ட கேபிள் அடிக்கடி அறுபடுவதால் பயணிகள் பல்வேறுசிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
கேபிள் அறுபடுவதனால் பயணம் தாமதமாகும். அதனை கடற்படையின் படகு இழுத்துச்சென்று மறுபக்கத்தில்கொண்டு போய்சேர்க்கும்நிலை காணப்படுகிறது.
கால நிலை மாற்றங்களின் போதும் இவ்வாறு பயணிக்கும்போதும் கேபிள் அறுந்தால் உயிர் ஆபத்துக்கள் கூட ஏற்படும் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொருளியல் பிரிவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,
"உப்பு நீருக்குள் கேபிள் இருப்பதால் அது உக்கி அறும் தன்மை கொண்டதாக காணப்படுகிறது. அதற்குத் தீர்வாக உடனடியாக 5 லட்சம் ரூபா பெறுமதியான புதிய கேபிள் ஒன்றை கொள்வனவு செய்துவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. அந்த கேபிள் சற்று வலிமையானதாக இருக்கும் என்று பொருளியற்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-7)

## உதவும் கரங்களால் வீடு கையளிப்பு

கொடிகாமம், டிசெ.14
புலம்பெயர்உறவுகளின்அனுசரணையுடன் கைதடி உதவும் கரங்கள் அமைப்பினால் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட வீடு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்படவுள்ளது.
கைதடி கிழக்கு கள்ளி நகரில் கணவனை இழந்து இரண்டு மாற்றுத் திறனாளிகளான பெண் பிள்ளைகளுடன் வசித்து வரும் முருகன் தெய்வானைக்கே இந்த வீடு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.
கைதடி உதவும் கரங்கள் அமைப்பினரால் கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி இந்த வீட்டுக்கு அடிக்கல் நடப்பட்டது. (ஐ-159)



## தண்ணீர் தேங்கும் இடத்தில் மணல்மண் பரவப்பட்டது

மருதங்கேணி, டிசெ.14
மாரிகாலத்தில் மழைதண்ணீர் தேங்கக் கூடிய வகையில் காணப்பட்ட நாகர்கோவில் மகா வித்தியாலய வளாகத்தில் நீர்த் தேக்கத்தை தடுக்கும் வகையில் மணல் மண் பரப்பப்பட்டுள்ளது.
கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியில் மணல் மண் பரப்பும் பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.
இதனால் இனிவரும் மாரிகாலத்தில் பாடசாலையில் தண்ணீர் தேங்கிநிற்பதுதடுக்கப்பட்டுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர். (ஐ-160)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார்களென இருவர் கைது

மருதங்கேணி, டிசெ.14
குடத்தனை பகுதியில் நீண்டகாலமா கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் இருவரை பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.
பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து உற்பத்திநடவடிக்கையில்ஈடுபட்டுக்கொண்டிருந்த இவர்கள் இருவரையும் கைது செய்துள்ளதாக போலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர்களைநீதிமன்றில்முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்பொலிஸார்தெரிவித்தனர். (ஐ-160,169)

## இளைஞர் கழகத்தின் கலாசார விழா

சில்லாலை, டிசெ.14
சில்லாலை தெற்கு இளைஞர் கழகத்தினரின் கலாசார விழா சாந்தை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் மதியம் 12.30 மணிக்கு கழகத்தின் தலைவி செல்வி ஜெகராசா ஜனனி தலைமையில் இடம்பெறும்.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராகவலி. தென்மேற்குப்பிரதேசசபையின்தவிசாளர் அ. ஜெபநேசன், சிறப்புவிருந்தினர்களாக சில்லாலை தெற்கு கிராம அலுவலகர் க. சுதர்சன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அலுவலகர் றோ. றஜீபன், ஓய்வுபெற்ற ஆசிரியரும் சமாதான நீதிவானுமான த. குணத்திலகம், ஓய்வுபெற்ற ஆசிரியஆலோசகர்திருமதிஸ்ரீரஞ்சினிஇராமநாதன்ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## தென்மராட்சி கலாசார நிகழ்வு சனியன்று

கொடிகாமம், டிசெ. 14
தென்மராட்சிபிரதேசசெயலகத்தின்கலாசார நிகழ்வுவரணிமத்தியகலாசாரமண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான திருமதி தேவந்தினி பாபு தலைமையில்நடைபெறும்
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்மற்றும்கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து கலாசார நிகழ்வினை நடத்தவுள்ளனர்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரத்தினம், சிறப்புவிருந்தினராக மருதங்கேணிபிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச்செயலக மாவட்ட கலாசார அலுவலர் மா.அருள்சந்திரன், மாவட்டகலாசாரஅபிவிருத்திஅலுவலர் இ.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
பிரதேசத்தில் கலை உலகுக்கு நீண்ட காலம் சேவையாற்றிவரும் 8 கலைஞர்களுக்கு, "கலைசாகரம்"விருதும் இளந்தலைமுறைக் கலைஞர்கள் 7 பேருக்கு "இளங்கலைஞர்" விருதும் வழங்கப்படவுள்ளன.
பிரதேசகலைஇலக்கியப்போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
அத்துடன் வழங்கலும் கைதடி மின்னொளி நாடக மன்றத்தினரின் அண்ணாவியார் அ.சிவஞானத்தின் நெறியாழ்கையில் உருவானகாத்தவராயன் சிந்து நடைக் கூத்தும் இடம்பெறும். (ஐ-159)

## மர்மக் காய்ச்சலால் மாணவன் இறந்தான்

யாழ்ப்பாணம்,டிசெ. 14
மூன்றுநாள்களாக மர்மக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
விக்ரோறியாக்கல்லூரியில்தரம்9இல் கல்வி கற்கும் ஐயனார் கோயிலடி,சுழிபுரம்மேற்கைச்சேர்ந்த கோபாலகிருஷ்ணன்விதுர்சன்(வயது-14)என்றமாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த மாணவனுக்கு இரு தினங்களுக்கு முன்னர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்துதனியார்மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவீடுதிரும்பியுள்ளார்.
இந்நிலையில் குறித்த மாணவனுக்கு கடந்த11ஆம்திகதி இரவுகாய்ச்சல் அதிகரித்துள்ளது. இதனால்சங்கானைமருத்துவமனையில் காலையில் சேர்க்கப்பட்டார்.
எனினும் அங்கு சிகிச்சை பயனின்றி மாணவன் உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தமாணவனின்சடலம்யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் பரிசோதனைக்காகஒப்படைக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில்யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியை தொடர்புகொண்டு கேட்ட போது,
குறித்த மாணவனுக்கு சில தினங்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக காய்ச்சல்ஏற்பட்டுஉயிரிழந்துள்ளார். அவ்வாறு மாணவனுக்கு ஏற்பட்ட மர்ம காய்ச்சல் தொடர்பில் ஆய்வு செயத்வதற்காக மாணவனின்குருதிமாதிரிகொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை வந்த பின்னரே காய்ச்சலின் வகையை கண்டு பிடிக்க முடியும்-என்றார். (ஐ-8)

## வலி. வடக்கில் டெங்கு ஒழிப்பு நாளை

தெல்லிப்பழை, டிசெ.14
"உயிர் கொல்லும் டெங்கை உருவெடுக்காதுதடுப்போம்"எனும்தொனிப்பொருளில் டெங்கு ஒழிப்புநடவடிக்கை வலி வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் நாளைமறுதினம் காலை 8.30 மணிக்கு டெங்கு ஒழிப்புநடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.
வலி. வடக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன்கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இணைந்து இதனை ஏற்பாடுசெய்துள்ளன.
கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலைய முன்றலிலிருந்து ஆரம்பமாகி கருகம்பனை கிராமத்திலும், கூவில், கீரிமலை, நகுலேஸ்வரம் போன்றவற்றில் இந்ததுப்புரவுநடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளன.
எனவேபொதுமக்கள்தங்களுடையவீடுகளில் உள்ள டெங்கு நுளம்பு பரவக்கூடிய பொருள்களை உரியமுறையில் பொதி செய்து சூழலில் டெங்கு பரவாது உரிய முறையில் பாதுகாக்க எம்மோடு கை கோர்க்குமாறும்ஏற்பாட்டாளர்கள்அறிவித்துள்ளனர். (ஐ)

# புவேந்தன் பாலர் நிலைய ஆண்டுவிழா

கொடிகாமம், டிசெ.14

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் ஐங்கரன் மணிமண்டபத்தில்நாளைமறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத் தலைவர் வை.இராசரத்தினம்தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் மூத்த நன்னடத்தை அலுவலர்சி.சிவகரன்,

சிறப்புவிருந்தினர்களாக சாவகச்சேரி ஆதாரமருத்துவமனைகுழந்தைநல மருத்துவநிபுணர்திருமதிபத்மபிரியா தரணிதரன்,

தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், தென்மராட்சிகல்வி வலய முகாமைத்துவ அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளைமுகாமையாளர்க.முரளிதரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம்,சாவகச்சேரிநகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் பிரதேச சிறுவர்நன்னடத்தை அலுவலர் தீபா மஞ்சூரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து அடுத்த வருடம் பாடசாலைகளில்இணையவுள்ளமாணவர்களே மதிப்பளிக்கப்படவுள்ளன. (ஐ-159)

# பட்டமளிப்பும் சைவமாநாடும்

யாழ்ப்பாணம், டிசெ.14

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 58 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் யாழ்ப்பாணம் வண்ணைநாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில்

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நல்லைஆதீன இரண்டாவது குரு மகாசந்நிதானம் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தினிசிறிமுரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ து.கு. ஜெதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவி), கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது சைவநாதம் 8 மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. நூலின் வெளியீட்டுரையினை சைவப்புலவர்சி.கா.கமலநாதன், நயப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளர், விரிவுரையாளர் கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

முதற்பிரதியினை செ.சற்குணம் அவர்களும் சிறப்பு பிரதியினை அலங்கார வித்தகன் க.வரததாசனும் பெறவுள்ளார்கள். (ஐ-159)

# மக்கள் சி.க.கூ.சங்களில் கடன்களை இலகுவாகப் பெறும் நிலை வேண்டும்

## வலியுறுத்துகின்றார் யாழ். மாவட்டச் செயலர்

**கொடிகாமம், டிசெ. 14**

**நிதி நிறுவனங்களின் தொல்லையிலிருந்து பாதுகாப்பைப் பெற வேண்டும் என்பதற்காக சி.க.கூ. சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் மக்கள் இலகுவாகக் கடன்களைப் பெறக்கூடிய நிலை இருக்க வேண்டும். அதற்கேற்றதாக சி.க.கூ. சங்கங்கள் செயற்படவேண்டும்.**



இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் சி.க.கூ.சமாசத்துக்கு என்று யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் புதிய அலுவலகம் அமைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்கிகளுக்குச் செல்லும்போது கட்டுப்பாடுகள் காணப்படுகிறன. நிதி நிறுவனங்கள் மக்களின் வீட்டுக்குச் சென்று கடன்களை வழங்கிவிட்டு இரவிலும் வீடுதேடிச் சென்று கடன்களை வசூலிக்கின்றன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நிதி நிறுவனங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் வருவதைப் பார்த்திருப்பீர்கள். தரம் என்பது மிக முக்கியமானது. 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தைப் போல கூட்டுறவைக் கொண்டு வரவேண்டும். நியாயமான நீதியான அமைப்பாக இருந்தால் நின்று நிலைக்கும். அர்ப்பணிப்பு முக்கியம். எவ்வளவு கடினமான வேலை செய்கின்றோமோ அந்தளவு கடின உழைப்பின் வியர்வைக்காக நிச்சயமாக வெற்றி கிடைக்கும். கூட்டுறவாக அமையும் சங்கங்கள் அங்கத்தவர்களின் நேர்மையற்ற தன்மையால் உடைந்து செல்கிறன. சுயநலப் போக்கு இருந்தால் கூட்டுறவு வருங்காலத்தில் உடைந்துவிடும். எல்லோரும் இணைந்து பொது நலனுக்காகச் சிறப்பாகச் செயற்பட்டால் நல்ல நிலைக்கு வர முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் கடனை வழங்கி அறவிடுகின்றன. கடின உழைப்பும் நேர்மையும் இருக்க வேண்டும். ஒருவர் சுய ஒழுக்கமாக இருந்தால் வெற்றி பெற முடியும். நேர்மையும் கடின உழைப்பும் விட்டு அகலாது - என்றார். (ஐ-159)

# ஆயுதமுனையில் கொள்ளை

கொடிகாமம், டிசெ.14

வீட்டிலிருந்த தம்பதியினரை ஆயுதங்களைக் காட்டி அங்கிருந்த 6 பவுண் தங்க நகைகள் மற்றும் 35 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரணி இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முகத்தை மூடிக்கட்டியவாறு உள் நுழைந்த நால்வர் ஆயுத முனையில் தம்பதியினரை அச்சுறுத்தி அங்கிருந்து 2 சூட்கேசுகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

அதனுள் 6 பவுண் தங்க நகைகள் 35 ஆயிரம் ரூபா பணம் விலை உயர்ந்த அலைபேசி, காணி உறுதிகள் ,உடைகள் போன்றவற்றை திருடிச் சென்றுள்ளனர் எனக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது..

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159,9)

# 4 பேருக்கு வைத்த பொறியில் மாட்டியவர் ஒருவர் மட்டுமே

*திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு நேர்ந்த கதி*

கொடிகாமம், டிசெ. 14

இரவு நேரம் வீட்டினுள் நுழைந்து திருடுவதற்கு முயன்றார்கள் என்று சந்தேகிக்கப்படும் நால்வருக்கு வீட்டு உரிமையாளர் வைத்த பொறியில் ஒருவர் மாட்டிக்கொண்டார் மற்றைய மூவரும் தப்பிச் சென்றுவிட்டனர். நன்றாகக் கவனிக்கப்பட்ட அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் விடத்தற்பளை பாடசாலைக்கு அருகிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

வீட்டு வளவின் இருளான பகுதியில் நால்வர் நிற்பதை இரவு 9 மணியளவில் அவதானித்துவிட்டார் வீட்டின் உரிமையாளர். அது பற்றி உடனே சத்தம் சந்தடி செய்யாத அவர், அயலில் உள்ளவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர்களை உதவிக்கு அழைத்தார்.

அயலவர்கள், உறவினர்கள் வீட்டு வளவைச் சுற்றி வளைத்து நிற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்னர்வீட்டின் மின் விளக்குகளை இரவு 10.30 மணியளவில் அணைதார். சத்தம் ஏதும் செய்யாமல் வீட்டுக்குள்ளிருந்தே என்ன நடக்கியது என்று கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

இரவு 11 மணியளவில் வீட்டின் ஜன்னலை பிரிப்பதற்கு பதுங்கியிருந்த நால்வரும் முற்பட்ட வேளையில்வீட்டுக்காரர்கள் மின் விளக்குகளை உடனடியாக ஒளிரவிட, நால்வரும் தலை தெறிக்கத் தப்பியோடினர். அவர்களைத் துரத்திச் சென்ற அயலவர்களும் மற்றவர்களும் ஒருவரைப் பிடித்தனர். மற்றைய மூவரும் தப்பிவிட்டனர்.

பிடிபட்டவர் நன்கு கவனிக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். தப்பியோடியவர்களில் கெற்பேலியைச் சேர்ந்த ஒருவர் உடுப்பிட்டியில் வசித்து வருபவர் என்றும் மற்றைய இருவரும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-ஐ-159)

# நூல் வெளியீடு

சாவகச்சேரி, டிசெ. 14

கலாபூசணம் செல்லையா குமாரசாமி எழுதிய பிள்ளைநிலாசிறுவர்பாடல்கள்நூல்வெளியீட்டு நிகழ்வுஇணுவில்அறிவாலயத்தில்நாளைமறுதினம் காலை 9 மணிக்கு இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில்நடைபெறும்நிகழ்வில்முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் வடமாகாண சுற்றுலாப் பணியகத் தலைவருமான பேராசிரியர் க.தேவராசா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில்வரவேற்புரையினை வவுனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி கோப்பெருந்தேவிகலைநாதனும்,வாழ்த்துரையினை வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்சு.தேவமனோகரனும்நிகழ்த்துவர்.

நூலின்வெளியீட்டுரையினை யாழ்ப்பாணம் மாநகரசபைஆணையாளர் கவிஞர்த.ஜெயசீலன் நிகழ்த்தவுள்ளார்.

நூலின்முதற்பிரதியைமுதன்மைவிருந்தினர் வெளியிட இளைப்பாறிய ஆசிரியர் இ.சொக்கலிங்கம் பெற்றுக் கொள்வார்.

ஆய்வுரையினை வலிகாமம் கல்வி வலயத் தமிழ்ப்பாட சேவைக்காலஆசிரியஆலோசகர் ம.பா.மகாலிங்கசிவமும்நயப்புரையை பருத்தித்துறை பிரதேசசிறுவர்பாதுகாப்பு அலுவலர் க.றஜீவனும்நிகழ்த்துவர். (ஐ-9)

# வரணிப் பிரதேசத்தில் வளர்ப்பு ஆடுகள் திருட்டு

வரணி மாசேரிப் பகுதியில் பெறுமதியான வளர்ப்பு ஆடுகள் திருடப்பட்டுள்ளன.

சுமார்ஒருஇலட்சம்ரூபாபெறுமதியான்கிடாய் ஆடும் அதன் தாய் ஆடுமே இவ்வாறு கடந்த வாரம் நடுநிசியில்திருடப்பட்டுள்ளன

மழை பெய்து கொண்டிருந்த சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தித் திருடர்கள் குறித்த வளர்ப்பு ஆடுகளைத் திருடிச்சென்றுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வீட்டு உரிமையாளர் எழுந்துள்ளார். கூக்குரலிட்டு அயலவர்களுக்கு விடயத்தைக்கூறியுள்ளார். அயலவர்கள் இருவர் திருடர்களைத் துரத்திச்சென்றபோதும் அவர்கள் உந்துருளிகளில்ஆடுகளை ஏற்றிக்கொண்டு தப்பியுள்ளனர்.

கிடாய் ஆடு திருடர்களுடன் மல்லுக்கட்டிப் போராடியதை நிலத்தில் பதிந்திருந்த ஆட்டின் கால்தடங்கள்மூலம்அவதானிக்கக்கூடியதாக இருந்தது என ஆடுகளின் உரிமையாளரான வேலாயுதம் முருகேசு தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் இன்னமும் முறைப்பாடு செய்யப்படவில்லை என உரிமையாளர் தெரிவித்தார். (ஐ-122)

# உயிர்வாழ் சான்றிதழ் விண்ணப்பத்தைப் பெறவும்

சாவகச்சேரி, டிசெ.14

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கான உயிர்வாழ்சான்றிதழ்விண்ணப்பப்படிவம் அந்தந்த பிரிவு கிராமஅலுவலரிடம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார்.

வருடாவருடம் ஓய்வூதியர்களின் உயிர்வாழ்சான்றிதழ் பிரதேசசெயலகத்தினால் ஓய்வூதியர்களின் முகவரிக்குஅனுப்பப்பட்டுவந்தது. இந்தநிலையில்ஓய்வூதியர்களில் சிலர் தமக்கு படிவம் கிடைக்கவில்லைஎன முறையிட்டனர்.

இதன் அடிப்படையிலேயே அடுத்த வருடத்துக்கான உயிர்வாழ் சான்றிதழுக்கான படிவங்கள் அந்தந்தப் பிரிவு கிராமஅலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

ஓய்வூதியர்கள் தமது

பிரிவு கிராம அலுவலரிடம் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம்தமது ஓய்வூதிய அடையாளஅட்டையுடன் சென்று படிவத்தினைப்பெற்று பூர்த்திசெய்து வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

படிவத்தினை எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர்கையளிக்குமாறும், அவ்வாறுகையளிக்கத் தவறுவோருக்குஏப்ரல்மாதம்தொடக்கம்ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப் படுமெனவும் அறிவித்துள்ளார். (ஐ-9)



## பாடசாலைக்குச் செல்லும் சிறாருக்கு விடைகொடுப்பு

முல்லைத்தீவு, டிசெ.14
முள்பள்ளிக் கற்கைகளை நிறைவு செய்து, முதலாம் தரத்துக்குச் செல்லவுள்ள சிறார்களுக்கு விடைகொடுக்கும் நிகழ்வுமுல்லைத்தீவு,தண்ணீரூற்று அன்னைஈசுவராம்பா முன்பள்ளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இறைவணக்கம், மங்கலவிளக்கேற்றல், சிறார்களின்கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து சிறார்களுக்கு விடைகொடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வுகளில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேசுவரன், ஓய்வுநிலைஅதிபர்சு.தேவராசா, ஆலயப் போதகர் சவரிமுத்து யோன்சன் சதீஸ்குமார், மாதர் சங்க நிர்வாகிதிருமதிச.தவக்குமார்உட்படமுன்பள்ளிஆசிரியர்கள், சிறார்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# முட்கொம்பன் சந்தை மூடப்படும் அபாயம்

**கிளிநொச்சி, டிசெ.14**
**பூநகரி, முட்கொம்பன் சந்தைக்கு வெளியே உள்ள வியாபார நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதால் சந்தைக்குள் மரக்கறி விற்பனை செய்யும் வியாபாரிகள் தமது வியாபாரத்தைக் கைவிடும் நிலமை ஏற்பட்டுள்ளது. அதனால் சந்தை மூடப்படும் அபாய நிலைமை காணப்படுகின்றது என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.**

இது தொடர்பாக எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வெளியே உள்ள வியாபார நிலையங்களில் மரக்கறிகளை விற்பனை செய்ய வேண்டாம் என்று கடிதம் மூலம் அறிவிக்கப்படவுள்ளது என்று பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்தார்.
முட்கொம்பன் சந்தைக்கு வெளியே உள்ள வியாபார நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. அதனால் மக்கள் சந்தைக்குள் வருவதில்லை. சந்தைக்குள் மரக்கறி வியாபாரிகள் 3 பேர் மரக்கறிகளை விற்பனை செய்து வந்தனர். விற்பனை மந்தமாக இருந்ததால் அவர்களில் 2 பேர் விற்பனையை நிறுத்தியுள்ளனர். ஒருவரே இப்போது விற்பனை செய்கின்றார். அவரும் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் உள்ளார். பூநகரி பிரதேச சபை இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக பூநகரி பிரதேச சபைத் தவிசாளரிடம்கேட்டபோது, "இந்தவிடயம் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சந்தைக்கு வெளியே உள்ள வர்த்தகர்களுக்கு'மரக்கறிவியாபாரத்தை நிறுதுங்கள்' என்று அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
எனினும்அவர்கள்தற்போதும்விற்பனை செய்கின்றனர். உடனடியாக மரக்கறி வியாபாரத்தைநிறுத்துங்கள்என்றுஅவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்படவுள்ளது" என்றுதெரிவித்தார். (ற-214)



## முல்லை. மாவட்டத்தில் படைப்புழுவின் தாக்கம்

### விவசாயிகளுக்கு எச்சரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.14
முல்லைத்தீவு மாவட்டத்தில் படைப்புழுவின் தாக்கம் காணப்படுவதால் விவசாயிகள் விவசாயப் போதனாசிரியர்களுடன்தொடர்பு கொண்டு அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். உகநாதன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சோளம், இறுங்கு, மரக்கறி, பழப்பயிர் என்பவற்றை விரைவாகத்தாக்கக்கூடிய படைப் புழுவின் தாக்கம் அளம்பிலில்இனங்காணப்பட்டுள்ளது. இந்தப் புழு மணிக்குநூறுகிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது. இதன் தாக்கம் பயிர்களில் விரைவாகப்பரவி, பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தும். அளம்பிலில் 27 ஏக்கர் நிலப்பரப்பில்செய்கைசெய்யப்பட்டுள்ள சோளம், இறுங்கு பயிர்களில் இதன் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய பிரதேசங்களுக்கும் இதன் தாக்கம் பரவும் சந்தர்ப்பம் இருப்பதால் விவசாயிகள் தமது பகுதி விவசாயப்போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டுபடைபுழுவைக் கட்டுப்படுத்துவதற்கானஅறிவுரைகளைக்கேட்டுப் பின்பற்ற வேண்டும் - என்றார். (ற)

## மலைமகள் வி. கழகத்தின் மண்டபத்துக்கு அடிக்கல்

வவுனியா, டிசெ.14
வவுனியா, சாம்பல்தோட்டம் மலைமகள் விளையாட்டுக்கழகத்தின்புதியமண்டபத்துக்கான அடிக்கல்நேற்றுமுன்தினம்நடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதனின்1மில்லியன்ரூபாநிதிஒதுக்கீட்டில்இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் பா.சிந்துஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் பூ.சந்திரபத்மன், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் வவுனியாமாவட்டஇணைப்பாளர்க.சிவசுப்பிரமணியம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், கிராம இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (ற-110)



வவுனியாவில் தற்போது நிலவும் பனிமூட்டமான காலநிலையால் வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். வழமையை விடவும் தற்போது பனி மூட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிகாலையில்கடமைக்குச்செல்வோரும், மாணவர்களும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற- 110)





## குருதிக் கொடை முகாம்

வவுனியா, டிசெ.14
வவுனியா, அலகரைநண்பர்கள் அமைப்பின்ஏற்பாட்டில்சாஸ்திரி கூழாங்கும்மண்டபத்தில்கடந்த சனிக்கிழமை குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது.
வவுனியாமருத்துவமனையின் குருதிப் பற்றாக்குறையின் ஓர் பகுதியை நிறைவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த குருதிக் கொடை முகாமில் பலர் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-110)

## கற்றல் உபகரணம் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.14
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெண் தலைமைக் குடும்பங்களைச் சேர்ந்த 130 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்அண்மையில்வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுமுல்லைத்தீவு, தேவிபுரத்தில்உள்ள இனியவாழ்வு இல்லத்தில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட அமரர் பெண் தலைமை தாங்கும் குடும்பங்க்ளின்ஒன்றியத்தைச்சேர்ந்ததெரிவுசெய்யப்பட்ட குடும்ங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே உதவிகள் வழங்கப்பட்டனஎன்றுதெரிவிக்கப்பட்டது. ஜேர்மன்நாட்டைச் சேர்ந்ததமிழர்கலாசாரவட்டம்கயில்புறோம்பாட்றிக்சால் அமைப்பால், வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ற)



# மேய்ச்சல் நிலங்கள் வழங்கியும் வீதிகளில் திரியும் கால்நடைகள்

## உள்ளூராட்சி சபைகளே கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார் மன். மாவட்ட செயலர்

**மன்னார், டிசெ.14**
**மன்னாரில் மேய்ச்சல் நிலம் இன்மையால் கால்நடைகள் வீதிகளில் அலைகின்றன. அதனால் விபத்துக்கள் நடைபெறுகின்றன என்று மன்னார் மாவட்ட செயலரிடம், மன்னார் பொதுமக்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

மன்னார் மாவட்டத்தில் மேய்ச்சல் நிலங்கள் இல்லை என்பதை மறுத்த மாவட்ட செயலர், மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டத்தின் 4 பிரதேசசெயலர்பிரிவுகளிலும் மேய்ச்சல்நிலங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்றுதெரிவித்துள்ளார்.

மன்னாரில்மக்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் பொதுமக்கள் குழு ஆளுநர் சபையினர் கடந்த புதன்கிழமை மாவட்டசெயலர் சி.எ.மேகன் ராஜைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கால்நடை வளர்ப்போருக்குத் தகுந்த மேய்ச்சல் நிலம் இன்மையால் கால்நடைகள் இரவு வேளை வீதிகளில் அலைகின்றன. அதனால்விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்கள் பறிபோகும் நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக் காட்டினர்.

மேய்ச்சல் நிலங்கள் இல்லை என்று கூறப்பட் டதை மாவட்ட செயலர் மறுத்தார். மன்னார்மாவட்டத்தில்மேய்ச்சல் நிலம் இல்லை என்று இப்போதுகூற முடியாது. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உட்பட வன இலாகா மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி பல மேய்ச்சல் நிலங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களை மேய்ச்சல் நிலமாகச் சட்ட வரையறைக்குள் கொண்டு வரவில்லை என்றாலும் வன இலாகா அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவை மேய்ச்சல் நிலங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்பவர்கள் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர் என்றே எமக்குத் தோன்றுகின்றது. வீதிகளில் கட்டாக்காலிகளாகத்திரியும்கால்நடைகளைக் கட்டுப்படுத்த நகர சபை, பிரதேச சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட செயலர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் மன்னார் மாவட்டபிரஜைகள்குழுஆளுநர்சபையினர் மன்னார்நகரசபைத்தலைவர் ஞானப்பிரகாசம்அன்ரனிவிட்சனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். கால்நடைகளால் ஏற்படும் பிரச்சினைகள்தொடர்பாகஅவரிடம்சுட்டிக்காட்டிய போது, கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் என்று பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர். (ঢ-60)



# பரந்தனில் மருத்துவமனை அமைத்தமை சிறப்பானது

### ஞானப் பிரகாசம் ஆண்டகை பாராட்டு

கிளிநொச்சி, டிசெ.14
மருத்துவப் பணி என்பது மகத்தான பணி. திருச்சிலுவைக் குடும்பத்தினரால் திறக்கப்படும் இந்த மருத்துவமனையைத் திறந்துவைப்பதில்பெரும்மகிழ்வடைகின்றேன். போர்நடந்த பூமியில் தேவையுள்ள இடத்தில் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை.

கிளிநொச்சி, பரந்தனில் கடந்த செவ்வாய்க்கிழமை திருச்சிலுவை கன்னியர் மடத்தின் மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகைக் காக்கும் தொழிலாக மருத்துவத் துறை உள்ளது. போர்நடந்த பூமியில் தேவையுள்ள இடத்தில் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது. திருச்சிலுவைக் குடும்பத்தினரால் திறக்கப்படும் இந்த மருத்துவமனையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். - என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனும் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
போர் நடைபெற்ற நெருக்கடியான காலகட்டத்தில் அருட் தந்தையர்களும், அருட் சகோதரிகளும் ஆற்றிய பங்கு அளப்பரியது. எமது இனத்தின் விடுதலைக்காக அருட் தந்தையர்களும், அருட் சகோதரிகளும் முக்கிய பங்காற்றியுள்ளனர். பங்காற்றுகின்றனர். - என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண திருச் சிலுவை கன்னியாஸ்திரிகளின்ஒன்றியத்தலைவி, கிளிநொச்சிமாவட்டக்குருமுதல்வர், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், மருத்துவர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ঢ-6)



# ஊற்றுப்புலம் வீதியை சீரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.14
கிளிநொச்சி, கரைச்சியில் உள்ள ஊற்றுப்புலம் குடியிருப்புக்கான வீதி மண் அரிப்பால் துண்டிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. சம்பந்தப்பட்ட த்ரப்பினர் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

புதுமுறிப்புக்குளம்சீரமைக்கப்பட்டுஉயர்த்தப்பட்டுநீரின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் குளத்தின் பின்பகுதியான ஊற்றுப்புலத்தில் நீர் மட்டங்கள் உயர்ந்துள்ளன. அங்குள்ள நீரேந்து பகுதியை ஊடறுத்தே குடியிருப்புக்கானபிரதானவீதிஅமைந்துள்ளது. வீதியில்ஒரு பகுதி நீரால் அரிக்கப்பட்டு துண்டாடப்படும் நிலமை தோன்றியுள்ளது.

இந்த வீதி துண்டாப்பட்டால் ஊற்றுப்புலத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்படும். வீதி முற்றாகச்சேதமடைந்துபோக்குவரத்துத்துண்டிக்கப்படுவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ঢ-214)

# சிறு விடயத்தை திருத்தினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்

### வடக்கு முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை



மன்னார், டிசெ.14
மன்னாரில் கவனக் குறைவால் பெறுமதி மிக்க உயிர்கள் பறிபோகின்றன. ஏராளமானகால்நடைகள்உயிரிழக்கின்றன. சிறு சிறு விடயங்களை நாம் திருத்திக் கொண்டால் பெரும் விளைவுகளையும், விபத்துக்களையும்தவிர்க்கமுடியும்.

இவ்வாறுவடக்குமாகாண சபை முன்னாள் அமைச்சரான பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அதில் உள்ளதாவது:
கடந்த மாதம் கொழும்பில் இருந்துமன்னார்நோக்கிப் பயணித்தபோது தம்பனைக்குளத்தில் 10 கன்றுத்தாச்சிப் பசுக்கள் இறந்து கிடந்தன. இரவுநடுவீதியில் படுத்திருந்த பசுக்கள் மீது பேருந்து மோதியதாலே அவை இறந்தன என்று அறியக் கிடைத்தது. அது மட்டுமல்லாது பயணிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தன.

அதிகாலை வீதியால் பயணித்த பட்டா ரக வாகனமும் இறந்துகிடந்தபசுக்கள் மீதுமோதிவிபத்துக்குள்ளாகிது. சாரதிக்குக் காயங்கள் ஏற்பட்டதுடன், வாகனமும் சேதமடைந்தது.

வீதிமக்களின்போக்குவரத்துக்காக அமைக்கப்பட்டது. அதில் மாடுகளைப் படுக்க விட்டமையார்தவறு?. வீதிகளில்திரியும்கட்டாக்காலிக் கால்நடைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் யார்? அவ்வாறு நடவடிக்கை எடுக்காதவர்கள் தொடர்பாக யார் பொறுப்புக் கூறுவது?

சிறு சிறு விடயங்களை நாம்திருத்திக் கொண்டால் பெரும்விளைவுகளையும், விபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். பல விடயங்களை நாம் திருத்திக் கொண்டால்நாம்மேலைத்தேய நாடுகளுக்கு நிகராக வளர முடியும்.

யாரையும் குறை கூறுவதற்காகவோ, குற்றஞ்சுமத்துவதற்காகவோ இவற்றைக் குறிப்பிடவில்லை. எதிர்காலத்தில்பலவிடயங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவேஇவற்றைக்குறிப்பிடுகின்றேன். சற்று நாம் முயற்சித்தால்பலநன்மைகள் கிடைக்கக் கூடும். என்றுள்ளது. (ঢ4)



# மன். பிரதேச சபைப் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்

மன்னார், டிசெ.14
மன்னார்பிரதேசசபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம்ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

மன்னார்பிரதேசசபையின் அமர்வுகடந்தசெவ்வாய்க்கிழமை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாகீர் தலைமையில் நடைபெற்றது. சபையின் 21 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஉறுப்பினர் ரி.ஜீவாநந்தம் சுகவீனம் காரணமாக அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

தவிசாளரால்முன்வைக்கப்பட்ட வுரவு - செலவுத் திட்டத்தைத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் பி.கதிர்காமநாதன்முன்மொழிந்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் அலியார்சாபீர்வழிமொழிந்தார். வரவு - செலவுப் பொழிப்பை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

அதைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்டப்பொழிப்பைத் தவிசாளர் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் பொது நிர்வாகத்தில் மதிப்பிட்ட வருமானமாக 517 லட்சத்து 89 ஆயிரத்து 937 ரூபா 44 சமமும், மதிப்பிட்ட செலவினமாக 73 லட்சத்து 28 ஆயிரத்து154 ரூபாவும், சுகாதார சேவைகள் மதிப்பிட்ட வருமானமாக 52 லட்சத்து 87 ஆயிரத்து190 ரூபாவும், மதிப்பிட்ட செலவினமாக 204 லட்சத்து 32 ஆயிரத்து463 ரூபாவும், பௌதீக திட்டமிடல்மதிப்பிட்டவருமானமாக100லட்சத்து78ஆயிரத்து 600 ரூபாவும், மதிப்பிட்டசெலவினமாக119இலட்சத்து 67 ஆயிரத்து 884 ரூபாவும், தண்ணீர்சேவைகள்மதிப்பிட்டவருமானமாக 60 ஆயிரம் ரூபாவும், மதிப்பிட்ட செலவினமாக 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், பொதுப்பண்பாட்டுச்சேவைகள்மதிப்பிட்டவருமானமாக 11லட்சத்து28 ஆயிரத்து100 ரூபாவும், மதிப்பிட்ட செலவினமாக 10 லட்சம் ரூபாவும், நலன்புரி சேவைகள் மதிப்பிட்ட வருமானமாக 51 ஆயிரத்து 900 ரூபாவும், மதிப்பிட்ட செலவினமாக 74 லட்சத்து91ஆயிரத்து976 ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் 250 ரூபா 44 சதமேமேலதிகவருமானமாகக் காட்டப்பட்டுள்ளது. (ঢ-60)

## தேசிய நத்தார் நிகழ்வில் 3,000 பேர் பங்குகொள்வர்

*விக்ரர் சோசை அடிகள் தெரிவிப்பு*

மன்னார், டிசெ.12
மன்னாரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய நத்தார் கொண்டாட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகள் தெரிவித்தார். வருடாந்தம் நடத்தப்படும் தேசிய நத்தார் கொண்டாட்டமும், இயேசு பிரான் பிறப்பு நிகழ்வும் இந்த முறை மன்னாரில் நடைபெறவுள்ளன.

அதற்கான ஏற்பாடுகளை வர்த்தகம், நுகர்வோர் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.


எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகர சபை விளையாட்டரங்கில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அதிவண. ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகை மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை ஆகியோரின் பங்குபற்றலுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-60)

### வவு. பழைய பேருந்து நிலையத்தில்

# மலசலகூடம் செல்லும் வழி மூடப்பட்டுள்ளதால் சிரமம்

## ஆவண செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை



**வவுனியா, டிசெ.14**
**வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் உள்ள வியாபார நிலையங்களுக்கூடாக பொது மலசல கூடத்துக்குச் செல்லும் பாதை கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ளது. அதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பொதுமக்களும், வர்த்தகர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.**

அந்தப் பாதை பாதுகாப்பற்றுள்ளது. பாதையின் மேற்பகுதி உடைந்து விழும் நிலையில் உள்ளது. அதனாலேயே அந்தப் பாதை மூடப்பட்டுள்ளது.

விரைவில் திருத்தி அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றப்படும் என்று வவுனியா நகர சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஸ்ரீபரன் தெரிவித்தார்.



பழைய பேருந்து நிலைய வர்த்தக நிலையங்கள் ஊடாகப் பொது மலசலகூடத்துக்குச் செல்லும் வழி பாதுகாப்பற்றது என்று தெரிவித்து கடந்த 2 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. பொது மலசல கூடத்துக்கு செல்வதற்குப் பின்புறமாக மாற்று வழி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் பலர் மது அருந்துவதையும், புகை பிடிப்பதையும் வழமையாகக் கொண்டுள்ளனர். அதனால் அந்த வழியாகச் செல்வதற்கு பெண்களும், ஏனையோரும் தயங்குகின்றனர். பழைய வழியைத் திறப்பதற்குப் பல தடவைகள் கோரியபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. நகர சபையின் அலுவலர்கள் பல காரணங்களைக் கூறுகின்றனர். பழைய வழியைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களும், வர்த்தகர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக வவுனியா நகர சபைத் தொழில்நுட்ப அலுவலர்களுடன் ஸ்ரீபரனிடம் கேட்டபோது, "இன்று (நேற்று) சம்பந்தப்பட்ட இடத்துக்கு தொடர்புபட்ட உத்தியோகத்தருடன் சென்று நேரடியாக நிலைமைகளைப் பார்த்தோம். அந்த வழியைச் சீரமைப்புச் செய்து திறப்பதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வழியூடாக பயணிப்பது பாதுகாப்பற்றது என்பதாலேயே மூடப்பட்டுள்ளது. அதன் மேற்பகுதி உடைந்து விழும் நிலையில் உள்ளது. அவை சீரமைக்கப்பட்டு விரைவில் போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றப்படும்" - என்றார். (ற-111)



## ஆலயங்களின் சீரமைப்புக்கு அடிக்கல்

வவுனியா, டிசெ.14
வவுனியாவில் ஆலயங்கள் சிலவற்றில் சீரமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கள் அண்மையில் நடைபெற்றன.

கற்குழி ஸ்ரீ முத்துமர்ரி அம்மன் ஆலய வசந்த மண்டபம், காத்தான் கோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வசந்த மண்டபம், கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நவகிரக மண்டபம், மருக்காரம்பளை ஆலய நவகிரக மண்டபம் என்பற்றுக்கே அடிக்கற்கள் நடப்பட்டுள்ளன.

இந்த சீரமைப்புப்புப் பணிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, கம்பரலிய திட்டத்தின் கீழ் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அடிக்கல் நடும் நிகழ்வுகளில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், வவுனியா நகர சபை உறுப்பினர் லக்ஸ்சனா நாகராஜன், ரெலோ அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் விஜயகுமாரன், ரெலோ அமைப்பின் வவுனியா மாவட்ட மகளிர் அணித் தலைவி ரா.கனகம்மா, ஓய்வு பெற்ற கிராம அலுவலர் அரியரட்ணம் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-110)





# மனித உரிமை தினத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

வவுனியா, டிசெ.14
பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்றுவவுனியாவில்நடைபெற்றது.

வவுனியா, பம்பைமடுவில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகவவுனியாவளாகத்தில்வவுனியா பிராந்திய மனிதஉரிமைகள்அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் மனித உரிமைகள்தொடர்பானவிடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.மனித உரிமைகள் என்பது பிறப்பில் இருந்து உருவாக்கப்படுகின்றனவா? அல்லது சலுகையில் இருந்து உருவாக்கப்படுகின்றனவா? என்ற தலைப்பில் மாணவர்களிடையே பட்டிமன்றம் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் ரி. மங்களேஸ்வரன் கலந்து கொண்டார். பிரயோகவிஞ்ஞான பீடாதிபதி சி.குகனேசன், வன்னிப் பிராந்திய மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி எம்.ஆர்.பிரியதர்சன, மனித உரிமைகள்ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தின் பொறுப்பதிகாரி ஆர்.எல்.வசந்தராஜா, பல்கலைக் கழகப் பதிவாளர், விரிவுரையாளர்கள், அலுவலர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-110)

# இரட்டைவாய்க்கால் வீதி பகுதியளவில் சீரமைப்பு



முல்லைத்தீவு, டிசெ.14
முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் மாத்தளன் வீதியின் பகுதியளவிலான சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் மேற்கு, வலைஞன்மடம், அம்பலவன் பொக்கணை, புதுமாத்தளன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். இந்த வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டதை அடுத்து அதைச் சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் வீதிச் சீரமைப்புக்காகக் கடந்த ஆண்டு தலா 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியிருந்தனர். அதன்மூலம் 1 கிலோமீற்றர் தூரம் தார் போடப்பட்டுச் சீரமைக்கப்பட்டது.

வீதியின் ஏனைய பகுதி சிறப்புத் திட்டம் ஒன்றில் உள்வாங்கப்பட்டுச் சீர மைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அது நடைபெறவில்லை. 2019ஆம் ஆண்டே சிறப்புத் திட்டம் ஒன்றில் உள்வாங்கப்பட்டு வீதி சீரமைக்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலர் தெரிவித்திருந்தார்.

வீதி போக்குவரத்துச் செய்யமுடியாது மோசமான நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்துரையாடியதன் அடிப்படையில் தற்போது 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு சுமார் 300 மீற்றர் வீதியைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# நத்தார்ப் பொருள் விற்பனை கூடத்தில் துப்பாக்கிச் சூடு துப்பாக்கிதாரி தப்பி ஓட்டம்

பாரீஸ்.டிசெ.14

பிரான்ஸ் நாட்டில் நத்தார் தினத்தையொட்டி நத்தார்ப் பொருள் விற்பனைகளைகட்டியுள்ளது. அதேநேரத்தில் நத்தார்க் பொருள்களை விற்பனை செய்கின்ற வர்த்தநிலையம் ஒன்றில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இதில் 3பேர் கொல்லப்பட்டுள்ளனர். சூடு நடத்தியவரைச் சுட்டுப்பிடிப்பதற்குஅங்கிருந்ததுப்பாக்கிதரித்தபாதுகாப்புஊழியர்கள்முயற்சித்தபோதும் அவர் தப்பி ஓடிவிட்டார்.






பிரான்ஸின் ஸ்டிராஸ்பர்க் நகரநத்தார்பொருள்விற்பனைக் கூடத்தில் நேற்று முன்தினம்மக்கள்பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தனர். இரவு 8 மணி அளவில் அங்கு துப்பாக்கியுடன் வந்த ஒருவர், அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகச்சுடத்தொடங்கினார். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. அங்கிருந்த மக்கள் நாலாபுறமும் பதறியடித்தவாறு ஓடினர். இந்தச் சூட்டுச் சம்பவத்தில் 3 பேர் சாவடைந்தனர். 12 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாகஅங்கிருந்துமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தச் சூட்டுச் சம்பவம் பற்றிய தகவல் அறிந்ததும், அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த துப்பாக்கி ஏந்திய காவல் ஊழியர்கள் அங்கு விரைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபரைத் தடுத்து நிறுத்த அவர்கள் முயற்சித்தும் அது முடியவில்லை. முடிவாக இரண்டு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடந்தது. அதில் துப்பாக்கிதாரி காயம் அடைந்தாலும், சம்பவ இடத்தில்இருந்து தப்பி ஓடிவிட்டார்.

அந்தநபர்பற்றிப்பொலிசார்விசாரணைகளை நடத்தி வருகின்றனர். துப்பாக்கிச்சூடுநடத்தியநபர், தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களின் பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்.

அவர்29வயதானஷெரீப்எனப்பின்னர் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்தப் பகுதியில் உள்ள நத்தார் விற்பனைக் கூடங்கள் அனைத்தும் மூடப்பட்டன. துப்பாக்கிதாரியைக் கைது செய்வதற்காக அந்த நகரில் பலபகுதிகளிலும் நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படைச் சிப்பாய்கள்குவிக்கப்பட்டுள்ளனர். 2உலங்குவானூர்திகளும் துப்பாக்கிதாரியைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

**கொல்லப்பட்டவர்களுக்கு இரங்கல்**

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தையடுத்து, அந்த நகரில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றம் மூடப்பட்டது. இதில் கொல்லப்பட்டவர்களுக்கு பாரீஸ் நாடாளுமன்றின் சபாநாயகர் அன்ரனியோ தஜானி இரங்கல் தெரிவித்தார். அந்த நாட்டின் அதிபர் மெக்ரோன் அமைச்சரவை அதிகாரிகளைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினார்.

அதைத் தொடர்ந்து கீச்சகத்தில் இந்தச் சம்பவத்துக்குத் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார். அண்மைக் காலமாக பிரான்ஸ் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவது அதிகரித்து வருவதும், பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.





# நம்பிக்கையில்லாத்தீர்மானம்மீதானவாக்கெடுப்பில் பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரசாமே வெற்றி


லண்டன்.டிசெ.14

பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரசா மேயுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நேற்று நடந்தது. அதில் தெரசா மே வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றிமூலம்இனிஓராண்டுக்கு அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டுவரமுடியாத நிலைஉருவாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து எந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரிட்டன் விலகும் என்பதில் தெளிவில்லாத நிலை இருந்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவது என்ற முடிவுக்கு ஆதரவாக 2016ஆம் ஆண்டில் பிரிட்டனில் ஏற்பட்ட ஒருமித்தமுடிவைநடைமுறைப்படுத்த முடியுமா என்ற சூழல் உருவாகியுள்ளது. தெரசா மேவின் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள்பலர், இந்தவிடயத்தில் வேறுபட்ட கருத்துகளுடன் உள்ளனர். இந்த நிலையிலே ஐரோப்பிய ஒன்றியத்துடன் தெரசா மே முன்னெடுத்த ஒப்பந்தம் மீது விமர்சனம் இருந்து வந்தது. பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 48பேரால் தெரேசாமேமீதுநம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டுவரப்பட்டது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்மீதானவாக்கெடுப்பில் தெரசா மே வெற்றி பெற்றிருக்கிறார். இதில் தமது வாக்குகளைப் பதிவு செய்த 200 உறுப்பினர்களில், 117உறுப்பினர்கள் தெரசா மேக்குஆதரவாகவாக்களித்துள்ளனர்.

# செவ்வாயில்காற்றின் சத்தத்தை பதிவுசெய்தது பிரிட்டனின் சாதனம்






நியூயோர்க். டிசெ.14

செவ்வாய்க் கிரகத்தில் வீசுகின்ற காற்றின் ஓசையைப் பதிவு செய்துள்ளது நாசாவின் ஆய்வுக் கலத்தில் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டிருக்கின்றபிரிட்டனுக்குச் சொந்தமானஒருசாதனம். செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்கு நாசா அனுப்பிய 'இன்சைட் லேண்டர்' ஆய்வுக் கலத்தில் இணைத்து அனுப்பப்பட்டபிரிட்டனின் பூமியதிர்வு ஆய்வுக் கருவியான 'சீஸ்மோ' மீற்றரானது ஆய்வுக்கலத்தைக் அண்மித்துச் சென்ற செவ்வாய்க்கோளில்வீசியகாற்றின் ஓசையைப்பதிவுசெய்துள்ளது. செவ்வாயில் தூசுப் படிமங்கள் இருப்பதைக் காட்டும் படங்கள் வெளிப்படுத்தும்செய்தியுடன் இந்த விடயமும் ஒன்றிணைத்துப் பார்க்கப்படுகிறது. ஆறுமாத காலப்பயண முடிவில் செவ்வாயைச் சென்றடைந்துள்ள இந்த ஆய்வுகலம் நவம்பர் 26ஆம் திகதியன்று செவ்வாயில் தரையிறங்கியுள்ளது. இது செவ்வாயின் சுற்றுப்புறங்களையும் ஆராய்ந்துவருகிறது. இன்னும் சில வாரங்களில் இந்த விண்கலத்தின் உணர்வுக் கருவிகள் செவ்வாய்க்கிரகத்தின்நிலநடுக்கங்களை (அல்லது செவ்வாய் நடுக்கம்) பற்றி ஆராய்வதில் ஈடுபடும். இந்தசெவ்வாய்நடுக்க ஆய்வுக்கருவியை உருவாக்குவதற்குப் பிரிட்டன் விண்வெளி ஆய்வு முகாமை 4 மில்லியன் பவுண்டுகளைச்செலவிட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

# சித்திரவதை செய்து கொல்லப்பட்ட உடல்கள் சிரியாவில் கண்டெடுப்பு



டமஸ்காஸ்.டிசெ.14

சிரியாவின் கிழக்குப் பகுதியில் ஐ.எஸ் அமைப்பின்கட்டுப்பாட்டில்இருந்தஇடம்ஒன்றில், நூற்றுக்கணக்கானோரின் உடல்கள் புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் ஏழு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் அரசசெய்தித் தளமான 'சனா' கூறியுள்ளது.


கண்டெடுக்கப்பட்ட உடல்களில்'சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட' அறிகுறிகள் தென்படுவதாகஅதுசெய்திவெளியிட்டுள்ளது. கொலைசெய்யப்படும்முன்புஅவர்களில்சிலரது கண்களும்கைகளும்கட்டப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களில்பெண்களும்அடங்கியுள்ளனர் என்று 'சனா' மேலும் தெரிவிக்கின்றது.

## பா.ஜ.க. படுதோல்வி

# இதுவே மக்கள் விருப்பம் சிவசேனா கடும் விமர்சனம்

புதுடெல்லி.டிசெ.14

**இந்தியாவின் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், மிசோரம்மற்றும்தெலுங்கானா ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபைத்தேர்தல்முடிவுகள்நேற்றுமுன்தினம்வெளியாகின. இதில் பாரதீஜ ஜனதாக் கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இந்தத் தோல்வியை பா.ஜனதாவின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிவசேனா, தனது கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சாம்னா'வில் கடுமையாக விமர்சித்துள்ளது.**



சிவசேனா கூறியிருப்பதாவது:

தலைமை அமைச்சர் மோடியும், அமித்ஷாவும் காங்கிரஸ் இல்லாதஇந்தியாவைஉருவாக்குவோம்என்றுசூளுரைத்தனர். ஆனால்தற்போது அவர்கள் ஆட்சிசெய்த மாநிலங்களிலேயே பா.ஜனதா இல்லாததை அவர்கள் பார்க்கவேண்டிய நிலைமை வந்துவிட்டது. தங்களைத் தவிர்த்து வேறு எந்தக் கட்சியும் அந்த மாநிலங்களில் ஆட்சியைப் பிடிக்க முடியாது.மக்கள்தங்கள்ஆட்சியைவிரும்புகிறார்கள்என்று பா.ஜனதாவினர் அவிழ்த்துவிட்ட கட்டுக்கதை தேர்தல் முடிவுகளால்பொய்யாகிஇருக்கிறது. வானத்தில்பறந்துகொண்டிருந்த அவர்களை, மக்கள் தங்களின் வாக்குகள் மூலம் தரைக்கு இழுத்துள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளால், பா.ஜனதா இல்லாத இந்தியாவைஉருவாக்கமக்கள்விருப்பம்தெரிவித்துஉள்ளனர். ராஜஸ்தானில்விவசாயிகள்பல்வேறு இன்னல்களைஎதிர்கொண்டார்கள்.

மத்திய பிரதேசத்தில் விளைபொருள்களுக்கு உரிய விலை கேட்ட விவசாயிகள் துப்பாக்கிக் குண்டுகளை எதிர்கொண்டனர். இதற்கு மக்கள் தேர்தலின் மூலம் பழி தீர்த்துக்கொண்டார்கள். பண மதிப்பிழப்பு நடவடிக்கை பெரும் பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்தியது. ஏராளமானோர் வேலை இழந்தனர். பணவீக்கம் அதிகரித்தது. ஆனால் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் மோடியோ உலக அரசியலில் ஈடுபட விமானத்தில் பறந்துகொண்டு இருந்தார். விமானம் இந்தியாவில் தரை இறங்கியதும் நேராகத் தேர்தல் பரப்புரைக்காகக் கிளம்பினார். மோடியின் குழந்தைத்தனமான பேச்சுகள் தற்போது அவருக்கு எதிராகத் திரும்பி இருக்கின்றன. என்று கூறப்பட்டுள்ளது.



## துருக்கியில் அதிவேக ரயில் விபத்து 4 பேர் சாவு; பலர் படுகாயம்

அங்காரா.டிசெ.14



துருக்கியில் நேற்று அதிவேகரயில்ஒன்றுநடைமேம்பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 4பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். துருக்கியின் தலைநகர் அங்காராவில் இருந்து மத்திய துருக்கியின் கொன்யாநோக்கிநேற்றுக்காலை அதிவேகரயில்ஒன்றுபயணித்துக் கொண்டிருந்தது. மர்சாண்டிஸ் ரயில் நிலையத்தைக் கடந்து சென்றபோது,திடீரெனநடைமேம்பாலத்தின்மீதுகுறித்தரணில்மோதியது. இதனால் இரும்பால் அமைக்கப்பட்டஅந்தமேம்பாலம்உடைந்தது. அதில் ரயில் பெட்டிகள் சிக்கி உருக்குலைந்தன. 2 பெட்டிகள் தடம்புரண்டன.

விபத்துக்குறித்துத் தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து சென்றுமீட்புபணியில்ஈடுபட்டனர். யில் பெட்டிகளில், இடிபாடுகளில் சிக்கிஉயிருக்குப்போராடியவர்கள் வெளியேற்றப்பட்டு மருத்துவமனைகளுக்குஅனுப்பிவைக்கப்பட்டனர். இந்த விபத்தில் 4 பேர் சாவடைந்திருப்பதாகவும், 43 பேர் படுகாயம் அடைந்து உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

## கானாவில் காந்தி சிலை அகற்றம்

அக்ரா.டிசெ.14



கானாநாட்டின்தலைநகரில் நிறுவப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் சிலை, விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் போராட்டம் காரணமாக அகற்றப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா நாடான கானாவுக்கும்இந்தியாவுக்கும் உள்ள நட்புறவுக்குஅடையாளமாக, கானாவின் தலைநகர் அக்ராவில் இந்தியாவின் தேசத் தந்தை மகாத்மா காந்தியின் சிலை நிறுவப்பட்டது. கானா அரசுபல்கலைக்கழகவளாகத்தில் இந்தச் சிலையை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய இந்திய அதிபர் பிரணாப் முகர்ஜி திறந்து வைத்தார். ஆனால் மகாத்மாகாந்திகறுப்புஆபிரிக்கர்களுக்குஎதிரான இனவாதி என விரிவுரையாளர்கள் பலரும் முறைப்பாடு கூறினர். காந்தி சிலையை அகற்ற வேண்டும்என்றும்தொடர்ந்து வலியுறுத்தினர். இது தொடர்பாகமாணவர்கள்போராட்டம் நடத்தினர்.

உள்நாட்டுத் தலைவர்களும் விமர்சனங்களைமுன்வைத்தனர். இதனால் சிலையை அகற்றுவதற்குக் கானா அரசு முடிவு செய்தது. காந்தி சிலை அகற்றப்பட்டது.இதுதொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகிகள் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இதுபல்கலைக்கழகம் எடுத்த முடிவு எனக் கானா உள்துறை தெரிவித்துள்ளது. மகாத்மா காந்தி, 1893ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா சென்றார். அங்கேயே 20ஆண்டுகளுக்கும் மேலாக வசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவுக்குத் தனியான கூகுள் தேடல் பொறி இல்லை

வோஷிங்டன்.டிசெ.14



சீனாவுக்குத் தனியாக கூகுள் தேடு பொறி சேவையைஅறிமுகம்செய்யும் திட்டமில்லை என்று கூகுள் நிறுவனத் தலைமைச்செயல்அதிகாரிசுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார். சீனாவின்தணிக்கைமுறைகளுக்கு ஏற்ப சேவைகளை அளிப்பதில் கூகுள் நிறுவனம் உடன்பாடு செய்து கொள்கிறது என அமெரிக்க நாடாளுமன்ற விசாரணைக் குழுவில் முறைப்பாடுஅளிக்கப்பட்டிருந்தது. விசாரணைக்கு நேரில் முகங்கொடுத்த சுந்தர் பிச்சை, சீனாவுக்கான சேவைகளை அளிப்பதில் வெளிப்படையாக இருப்போம்என்றார். சீனாவில் அறிமுகம்செய்வதற்குத்திட்டம் எதுவும் இல்லை. அனைவரும் தகவல்களைப் பெற வேண்டும், அனைவரும் அனைத்துத் தகவல்களையும் பெற வேண்டும், இது மனித உரிமை என்ற கொள்கையில் மாற்றமில்லை என்று சுந்தர் பிச்சை அமெரிக்க நாடாளுமன்ற விசாரணையில் தெரிவித்தார். 2010ஆம் ஆண்டில் கூகுள் சீனாவிலிருந்து வெளியேறியதற்குஜனநாயகமதிப்புகளைக் காப்பதாகவும் இலாப நோக்கில் செயல்படவில்லை என்பதற்காகவும் கூகுள் நிறுவனம் அதிகளவு பாராட்டுகளை அமெரிக்காவில் பெற்றது. சீனாவில் கூகுள்.தேடல் தரவுகளைத் தணிக்கை செய்து, மக்கள் எதைத்தேடுகிறார்கள் என்பதைச் சீன அரசு கண்காணித்தது. இதற்கு அமெரிக்க நாடாளுமன்ற அளவில் மட்டுமல்லாமல் கூகுள் ஊழியர்களிடையேயும்பலத்த எதிர்ப்பு இருந்தது.

இன்னும் இந்த எதிர்ப்பு மறையவில்லை. சீனாவில் இணையச்செயற்பாடுகடும்கட்டுப்பாடுகள் உள்ளது. இதனால் கூகுள் 2010ஆம்ஆண்டில்சீனாவிலிருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்பின் முன்னாள் சட்டத்தரணிக்கு தேர்தல் முறைகேட்டால் மூன்றாண்டுகள் சிறை

வோஷிங்டன்.டிசெ.14



"டிரம்புக்காக நான் துப்பாக்கித் தோட்டாக்களையே எதிர்கொள்வேன்," என்று ஒரு காலத்தில் கூறிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முன்னாள் சட்டத்தரணி மைக்கல் கோஹென், தற்போது "ட்ரம்ப்செய்த மிகவும் மோசமான செயல்களை மூடி மறைக்க வேண்டியது என்னுடை கடமை என நினைத்தேன்," என்று கூறியுள்ளார். 2016ஆம் ஆண்டில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக நடத்தப்படும் விசாரணையில் இவருக்கு 36மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் மார்ச்மாதம் முதல் சிறையில்கழிக்கவேண்டும்.ட்ரம்பின்தேர்தல் பரப்புரைக்கானநிதியை,ட்ரம்ப்உடன்உறவில் இருந்த பெண்களுக்கு முறைகேடாக மாற்றம் செய்தது, வரிஏய்ப்புஉள்ளிட்டகுற்றங்களுக்கு அவருக்கு இந்த மூன்றாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## இரண்டு நாள்கள் கழித்து மீட்கப்பட்ட இளைஞர்

நியூயோர்.டிசெ.14



கலிபோர்னியாவில் உள்ள சீன உணவகம் ஒன்றிலிருந்து எண்ணெய்க் கழிவுகள் வெளியேற்றப்படும் குழிக்குள் சிக்கியிருந்த 29 வயதுடைய நபர் ஒருவர் இரண்டு நாள்களுக்குப் பிறகு மீட்கப்பட்டுள்ளார். தற்போது சிகிச்சையளிக்கப்பட்டு வரும் அந்த நபர், கடையில்திருடும்நோக்கில் எண்ணெய்க் குழிக்குள் புகுந்துஒளிந்திருக்கமுற்பட்டபோது அதற்குள் மாட்டிக்கொண்டாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்து வருகிறார்கள்.



## கஞ்சாவுடன் விரைந்த சொகுசு வான் களுவாஞ்சிக்குடியில் மடக்கிப் பிடிப்பு

மட்டக்களப்பு,டிசெ.14

வான் ஒன்றுக்குள் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட ஒரு தொகைக்கஞ்சாவை மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடிப் பகுதியில் வைத்துப் பொலிஸார் கைப்பற்றினர். அதைக்கொண்டு சென்ற நான்கு பேரைக் கைதுசெய்தனர்.

நேற்றுப் பகல் காத்தான்குடியில் இருந்து அக்கரைப்பற்றுக்குச் சொகுசு வானில் கொண்டுசெல்லப்பட்ட நிலையிலே இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சொகுசுவானுக்குள்மிகவும்நுட்பமானமுறையில்மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பொதிகளில் இருந்து சுமார் ஐந்து கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சா மீட்கப்பட்டதாகக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிதெரிவித்தார்.

மட்டக்களப்பின்புதுக்குடியிருப்புமற்றும்கிரான்குளம்பகுதிகளில்கடமையிலீடுபட்டிருந்த போக்குவரத்துப்பொலிஸாரின் நிறுத்தல் கட்டளைக்கு இணங்க வானை நிறுத்தாமல் விரைந்த காரணத்தால் களுவாஞ்சிக்குடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, வீதித் தடை ஏற்படுத்தப்பட்டு குறித்த வான் மடக்கிப்பிடிக்கப்பட்டு, அதிலிருந்துகஞ்சாகைப்பற்றப்பட்டதாகக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (222)

# வீட்டில் நின்ற சந்தன மரத்தை தறித்த நபர் வெட்டிக் கொலை

### வழிந்தோடும் குருதி படிந்த கத்தியோடு உரிமையாளர் சரண்

**பதுளை,டிசெ.14**

**தனது வீட்டில் பொத்திப் பொத்தி வளர்த்து வந்த வெண் சந்தன மரத்தைக் களவாக வெட்டி எடுத்துச் செல்ல முயன்றார் எனக்கூறப்படும் நபர் ஒருவரை வெட்டிக்கொன்றுவிட்டு அதற்குத் தான் பயன்படுத்திய கத்தியில் குருதி சொட்டச் சொட்ட ஒருவர் தம்மிடம் நேற்றுச் சரணடைந்தார் என்று பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.**

பதுளை-சொரணாதொட்டைஎன்ற இடத்திலேயே இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் இடம்பெற்றது. சந்தனமரத்தைவெட்டுவதற்குமுயன்றார் என்று கூறப்படும் தம்மிக்க ரணதுங்கவின்சடலத்தைவெட்டுக் காயங்களுடன்குருதிவெள்ளத்தில் இருந்து பொலிஸார் மீட்டனர்.

ரணதுங்கவைத் தானே வெட்டிக் கொன்றேன் என்று கூறும் சந்தன மர உரிமையாளரைப் பொலிஸார் பதுளைநீதிவானிடம்முற்படுத்தினர். அவரைப்14ஆம்திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுநீதிவான் உத்தரவிட்டார்.

மர உரிமையாளருக்கும் ரணதுங்கவுக்கும் இடையிலான பிணக்கு என்ன என்பது தொடர்பிலும், சம்பவம்எப்படிநிகழ்ந்ததுஎன்பதுதொடர்பிலும் பதுளைப் பொலிஸார் தொடர்ந்துவிசாரணைகளைநடத்தி வருகின்றனர்.

இந்தக்கொலைபதுளையில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## தொண்டமானுக்கு எதிரான கோசங்களுடன் தொடர்கின்றன தொழிலாளர் போராட்டங்கள்

ஆயிரம்ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரிய மலையகத்தொழிலாளர்களின்போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அப்புத்தளை-தம்பேதன்னைபெருந்தோட்டத்தின் ஐந்து பிரிவுகளிலுள்ள கிட்டத்தட்ட 2ஆயிரம் தொழிலாளர்கள், தமது தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக நேற்றைய தினம் மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அனைத்துத் தோட்டத் தொழிற்சங்கங்களைச்சார்ந்தவர்களும்கட்சி, தொழிற்சங்கப் பேதமின்றி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும்இலங்கைத்தேசியதோட்டத்தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் வடிவேல் சுரேஸ் ஆகியோரை விமர்சித்துக் கோசங்களை எழுப்பினர்.

"ஏமாற்றாதே, ஏமாற்றாதே, தோட்டத்தொழிலாளர்களை ஏமாற்றாதே", "அரச தலைவருக்கு இருக்கின்ற பிரச்சினையில் அவர் எப்படித்தொழிலாளர்களின்பிரச்சினைகளைத் தீர்ப்பாராம்?"

"ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்காமல்எந்தஅரசியல், தொழிற்சங்கவாதிகளும் தோட்டத்துக்குள் வரவேண்டாம்" போன்ற கோசங்களை எழுப்பிய வண்ணம் தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் வரை போராட்டம் நீடிக்கும் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.



**பின்னணி**

ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக்கோரி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக்குரல்கொடுக்கின்றனர். இதற்கு இதுவரை எந்தத் தரப்பினரும் செவி சாய்க்கவில்லை. தற்போது தொழிலாளர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள். மலையகத்தின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நடக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பானதுகைவிடப்பட்டுள்ளதாகவும் (கடந்த செவ்வாய்க் கிழமை இரவுடன்) போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்புமாறும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். போராட்டத்தைக்கைவிடுமாறு பணித்தார். இதனால், கோபமடைந்ததொழிலாளர்கள் தங்களுடைய போராட்டங்களை ஆறுமுகன்தொண்டமானுக்குஎதிராகமுன்னெடுத்தனர். 'தொழிலாளர்களின்குருதியை உறிஞ்சும் இராட்சத அட்டை' என ஆறுமுகன் தொண்டமான் வர்ணிக்கப்பட்டார். அவரது உருவப் பொம்மைக்குத் தீ மூட்டப்பட்டது.

## காட்டுத் தீயை அணைக்க உலங்குவானூர்தி உதவி


*மஸ்கெலியவில் சம்பவம்*

மஸ்கெலியா - நல்லதண்ணிவனப்பகுதியில்தீ பரவியுள்ளதால், உலங்குவானூர்தி கொண்டு அதை அணைக்கும் முயற்சி தொடர்ந்தது. தீ வைத்துச் சென்ற இனந்தெரியாத நபர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நல்லதண்ணிப்பிரதேசப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். வாழைமலை வனப்பகுதியில் கடந்த புதன்கிழமையன்றுவைக்கப்பட்ட தீ அங்கிருந்துநல்லதண்ணிவனப்பகுதிவரை பரவியுள்ளதாக நல்லதண்ணிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணிப் பொலிஸார் பொதுமக்கள் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவதற்கு முயற்சித்த போதும் அது முடியாமல் போனது. இதனால், தீயை அணைப்பதற்கு உலங்குவானூர்திவரவழைக்கப்பட்டுள்ளது.











## அரச தலைவர் கையளிக்கின்ற கலாபூஷண விருது வேண்டாம் மூத்த கலைஞர் ஒருவர் மறுப்பு

கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருதை, அரச தலைவரின் கையால் பெறமாட்டேன் என மூத்த சிங்களக் கலைஞர்களில் ஒருவரான டப்ளிவ் ஜெயசிறி என்பவர் வெளிப்படையாக அறிவித்தார். தனது முகநூல் பக்கத்தில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார். 2018ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவிருந்த இந்த நிகழ்வில், மூத்த கலைஞர்கள் கலாபூஷணம் விருது வழங்கி மதிப்புறுத்தப்படுவார்கள்.

2018ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்காக ஜெயசிறியும்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதற்கான அழைப்பிதழ் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, நேற்றுத்தனதுமுகநூல்பக்கத்தில்ஜெயசிறி இதுதொடர்பான பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், அரச தலைவரின் கையால் இந்த விருதைப் பெறமாட்டேன் என்றும், ஜனநாயகத்தைக் காப்பாற்றும் போராட்டத்தில் விசுவாசமாக இருப்பதால், இந்த நிகழ்வைப் புறக்கணிப்பதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாளைய தினம் நடைபெறுவதாக ஏற்பாடாகியிருந்த 2018ஆம் ஆண்டுக்கான கலாபூசண விருது வழங்கும் நிகழ்வு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதாகக் கலாசாரத் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வரலாற்றுச் சிறப்புமிக்க உயர் நீதிமன்றத் தீர்ப்பு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்துக் கடந்த மாதம் 9 ஆம் திகதி விடுத்த அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்று நேற்றுத் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது உயர் நீதிமன்றம். 7 நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் ஏகமனதாக இந்தத்தீர்ப்பைவழங்கியிருக்கிறது. பிரிட்டிஷ் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தீர்ப்பு இது என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.


அத்தோடு, மகிந்தராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறையின் மீது படிந்திருந்த மாசுக்களையும் துடைத்தெறிந்து நீதியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் தீர்ப்பாகவும் இது இருக்கின்றது. மக்களாட்சியை நிலை நிறுத்துவதற்குப் பாடுபட்டவர்களுக்குக்கிடைத்திருக்கக் கூடிய மிகப் பெரிய வெற்றி இது என்பதிலும் சந்தேகம் இல்லை.

உயர் நீதிமன்றத்தின் 7 நீதியரசர்கள் ஆயத்தில் முன்பாக இந்தவிசாரணையின்தீர்ப்புவந்தபோது, அரசதலைவரின் செயல் அரசமைப்புக்கு முரணானது என்பதில் அனைவருமேஏகமனதானமுடிவைக்கொண்டிருந்தனர். தலைமை நீதியரசரான நளின் பெரேராவின் தீர்ப்பை ஏனைய நீதியரசர்களான பிரசன்ன ஜெயவர்த்தனே, பிரியந்த ஜெயவர்த்தனே, விஜித் கே.மலால்கொட, புவேனகா அலுவிகார, முர்து பெர்னான்டோ ஆகிய ஐவரும் அப்படியே வழிமொழிந்தனர். அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தமை சட்டத்துக்கு முரணானது என்பதுடன் தனது எல்லையை மீறி அவர் செயற்பட்டிருக்கிறார் என்று தமது தீர்ப்பில் தெரிவித்திருந்தனர். 7ஆவது நீதியரசரான சிசிர டி ஆப்ரூவும் தலைமை நீதியரசரின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார் எனினும் அரச தலைவரின் செயலில் உள்ள மேலும் பல தவறுகளைச் சுட்டிக்காட்டும் வகையில் தனியாகவும் அவர் ஒரு தீர்ப்பை வழங்கினார்.

அரசதலைவர் அரசமைப்பைமீறிச்செயற்பட்டார் என்பது இப்போது உறுதியாகிவிட்டது. எனவே அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் நீதிமன்றத் தீர்ப்போடு இந்தப் பிரச்சினை முடிவுக்குவந்துவிடாது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தரணில்விக்கிரமசிங்கவைத்தலைமைஅமைச்சராக நியமிக்கவேண்டும் அரசதலைவர் சிறிசேன. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமை அமைச்சர் வேட்பாளராக முன்மொழியப்பட்டுள்ள ரணில் விக்கிரமசி ங்கவுக்கு எக்காரணத்தைக் கொண்டும் தலைமை அமைச்சர் பதவியைக் கொடுக்க மாட்டேன் என்று மைத்திரிபால சிறிசேனநேற்றும்திட்டவட்டமாகத்தெரிவித்திருக்கிறார். ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அழுத்தம் கொடுத்தபோதும் ரணிலை மீண்டும் தலைமை அமைச்சராக்குவதற்கு சிறிசேன இணக்கம் தெரிவிக்கவில்லை என்பது பிரச்சினை இன்னும் சிறிது காலத்துக்கு இழுபடப்போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறுகின்றது. அதேநேரத்தில் அரச தலைவரால் இந்தப் பிரச்சினையை இனி அதிக நாள்களுக்கு இழுத்துச் செல்ல முடியாது என்பதும் திண்ணம்.

எப்படியிருந்தாலும் நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறையின்கீழும் அரசதலைவரின் முடிவுக்கு எதிராக வரலாற்றுச்சிறப்புமிக்க தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியிருப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். சட்டவாக்கத்துறையின் சுயாதீனத்தை அனுமதித்த தலைவர்கள், அதே மதிப்புடனும் மாண்புடனும் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



**கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நள்ளிரவில் அரச தலைவரால் மேற்கொள்ளப்பட்ட தலைமை அமைச்சர் மாற்றத்தைத் தொடர்ந்து இலங்கையின் நாடாளுமன்றத்தையும் கலைப்பதான அரசிதழ் அறிவிப்பில் அவர் கையெழுத்திட்டார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை 19ஆம் திருத்தத்துக்கு விரோதமானது என 16பேர் வரையில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்குகளின் தீர்ப்பு நேற்றைய தினம் வெளி வந்திருந்தது. இதன் நிமித்தம் வழக்குத் தாக்கல் செய்தவர்களில் ஒருவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரத்தினஜீவன் எச் ஹூல். அவருடனான செவ்வி இது.**

# “இன அடிப்படையில் அணுகாத வழக்குகளில் நீதித்துறை சரியான தீர்ப்பை வழங்குகின்றது”

ந.லோகதயாளன்.

**கேள்வி** - நீங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக இருக்கின்ற நிலையில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளீர்கள். உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைக்காவிட்டால், ஆணைக்குழு உறுப்பினர் பதவியைத் தொடர்வது கேள்விக்குட்பட்டதாக இருக்கலாம். எதன் அடிப்படையில் இந்த வழக்கைத் தாக்கல் செய்தீர்கள்?

**பதில்** - அந்த விடயத்தை நான் ஏற்கவில்லை. வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியது எனது கடமை. என்னோடு பதவியிலிருக்கின்ற ஏனைய இரண்டு அங்கத்தவர்களும் நிரந்தர அரச ஊழியர்களாகப் பணியாற்றுவதால் அரசுக்கு எதிராகச் செயல்படுவது அவர்களுடைய அரச பணிக்காலத்தில் சாதாரணமான விடயம் இல்லை. ஆனால், அரச தலைவரின் செயல் தவறு என்பதை அவர்களும் உறுதியாக ஆணைக்குழுவின் கூட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டினர். அதேவேளை, எனது அனுபவத்தின் படி தர்க்க ரீதியான விவாதத்தைச் சரியாயின் சரியெனவும், பிழையாயின் பிழையெனவும் வெளிக்கொணர்வதே மரபாகும்.

மேலும் அரச தலைவரின் உத்தரவு பிழையானது என்பதை அரசமைப்பு மிகத் தெளிவாகக் காட்டியது. ஆகவே சட்ட ரீதியாக உச்ச நீதிமன்றத்தால் வேறு தீர்ப்பை வழங்க முடியாது எனத் திடமாக நான் நம்பினேன்.

**கேள்வி** - அரச தலைவர் முன்னெடுத்த நடவடிக்கைக்கு இடைக்கால உத்தரவு வழங்கப்பட்ட காலத்துக்கும் தீர்ப்பு வழங்கப்பட்ட காலத்துக்கும் இடையில் இடம்பெற்றிருக்கக்கூடிய செயல்பாடுகள் தொடர்பில் என்ன கருதுகின்றீர்கள்?

**பதில்** - ஒருவருக்குத் தெளிவாக இருக்கின்ற விடயங்க ளைக் கொண்டு மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்பதைத் தெரிந்துகொண்டேன். உதாரணமாகத் தேர்தல்களை நடத்துவது நல்ல விடயம். ஆனால் தேர்தல்களுக்கும் அரசமைப்பின் பிரகாரம் சரியான ஓர் இடம் உண்டு. ஓர் அரசை வாக்குகள் மூலம் தெரிவு செய்த பின்பு எமது அரசமைப்பு உட்படப் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசமைப்புக்கள் நாடாளுமன்றுக்குக் குறிப்பிட்டளவு காலத்தை வழங்குகின்றன. இதற்குக் காரணம் புதிய அரசுக்கு நீண்ட காலத்தில் நன்மை தரக்கூடிய ஆனால் மக்களுக்குச் சில சிரமங்களை (இறக்குமதிக் கட்டுப்பாடு) அல்லது அச்சத்தை (அதிகாரப் பகிர்வு) ஏற்படுத்தும் காரியங்களைச் செய்து தமது இறைமையையும், வழிகாட்டலுக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். இதை மறைத்தே அரசமைப்புக்கு எதிராகத் தேர்தலை நடத்துங்கள் எனக் கூறுகிறார்கள். மக்களும் இலகுவாக இதற்கு இசைகின்றனர். அரச



தர்க்க ரீதியான விவாதத்தைச் சரியாயின் சரியெனவும், பிழையாயின் பிழையெனவும் வெளிக்கொணர்வதே மரபாகும்.
மேலும் அரச தலைவரின் உத்தரவு பிழையானது என்பதை அரசமைப்பு மிகத் தெளிவாகக் காட்டியது. ஆகவே சட்ட ரீதியாக உச்ச நீதிமன்றத்தால் வேறு தீர்ப்பை வழங்க முடியாது எனத் திடமாக நம்பினேன்.

மைப்போவாக்களிக்கும் உரிமையை வழங்குகின்றது. இந்த நிலையில் அதை முறித்துத் தேர்தல் உரிமையை மட்டும் பேச முடியாது.

**கேள்வி** - நீங்கள் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர். இந்த ஆணைக் குழுவே முன் வந்து குறித்த வழக்கு விடயத்தில் நீதிமன்றை நாடியிருக்க வேண்டும் எனக் கருதுகின்றீர்களா?

**பதில்** - ஆம் நாடியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

**கேள்வி** - தற்போது கிடைத்த தீர்ப்புத் தொடர்பில் என்ன கருதுகின்றீர்கள்?

**பதில்** - நீதிமன்றம் சுதந்திரமாக இயங்குகின்றது. சட்ட ரீதியிலான தீர்ப்பை வழங்கியிருக்கின்றமை மெச்சத்தக்கது.

**கேள்வி** - இந்த நாட்டில் நிறைவேற்று அரச தலைவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்காளர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பும் பெறப்பட்டிருக்கிறது. இலங்கையில் இறுதிப்போரின்போது இடம்பெற்ற இன அழிப்புக்குப் பன்னாட்டு நீதிமன்றைக் கோர முடியாத நிலையை இந்த விவகாரம் ஏற்படுத்தியிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்** - இலங்கையில் இனவாதம் சகல தரப்பிலும் பெரியளவில் நிரம்பியுள்ளது. இந்த வழக்கில் சகல சமூகங்களின் உரிமையும் கேள்விக்கு உட்பட்டிருந்தது. ஆகவே இந்தத் தீர்ப்பில் இனவாதக் கருத்துக்கள் எடுபடவில்லை. இதுவே இந்த நீதியான தீர்ப்புக்குக் காரணம். ஆனால் நீங்கள் குறிக்கும் இன அழிப்பு விடயத்தில் நீதியைப் பெறுவதற்குச் சகல இலங்கையர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்ப முடியாது.

**கேள்வி** - குறித்த தீர்ப்பின்படி இலங்கையின் நீதித்துறை தற்போது பலமாக உள்ளது எனக் கருதுகின்றீர்களா?

**பதில்** - இன அடிப்படையில் அணுகப்படாத வழக்குகளைப் பொறுத்த மட்டில் நிச்சயமாக நீதித்துறை தற்போது பலமாக உள்ளது.

**கேள்வி** - இந்த வழக்குத் தோல்வியடைந்திருந்தால் உங்கள் நிலை என்னவாக இருந்திருக்கும்?

**பதில்** - எனது நிலை மட்டுமல்ல, இலங்கையின் சகல மக்கள் ஜனநாயக அமைப்புகளுக்கும் மிகக் கஸ்ரமான நிலையே ஏற்பட்டிருக்கும். அது உங்களைப் போன்ற செய்தியாளர்களையும் விட்டுவைக்காது என்பது எனது எண்ணம்.

**கேள்வி** - இந்த நாட்டில் நாடாளுமன்றக் கலைப்பு, அமைச்சரவைத் தெரிவு உட்படச் சகல விடயங்களுக்கும் நீதிமன்றம் சென்றுதான் முடிவைப் பெற வேண்டிய நிலமையிருக்கிறது. இது இட்டுச் செல்லும் விளைவுகள் எப்படியிருக்கும் எனக் கருதுகின்றீர்கள் ?



> இலங்கையில் இனவாதம் சகல தரப்பிலும் பெரியளவில் நிரம்பியுள்ளது. இந்த வழக்கில் சகல சமூகங்களின் உரிமையும் கேள்விக்கு உட்பட்டிருந்தது. ஆகவே இந்தத் தீர்ப்பில் இனவாதக் கருத்துக்கள் எடுபடவில்லை. இதுவே இந்த நீதியான தீர்ப்புக்குக் காரணம். ஆனால் நீங்கள் குறிக்கும் இன அழிப்பு விடயங்களில் சகல இலங்கையர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்ப முடியாது.

**பதில்** - நீதியைப் பெறுவது கஸ்ரமானதும் கடினமானதும் என்பதோடு அதிக செலவையும் ஏற்படுத்தும். பணம் படைத்தவர்களுக்குத்தான் நீதி, செல்வாக்கு உடையவர்களுக்கு மட்டுமே தீர்வு என்கிற நிலையை ஏற்படுத்தும். நடந்த சம்பவத்தில் சபாநாயகர் மேற்கொண்டது அனைவருக்கும் முன்மாதிரியாகும். அதேநேரம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் நடுநிலையைப் பேணும் பெயரில் சபாநாயகருக்குக் கீழ்ப் படியாமல் விட்டதும், தேர்தல் ஆணைக்குழு நடு நிலையைப் பேணும் பெயரில் அரச தலைவரின் சட்டத்துக்கு எதிரான கட்டளைக்கு அமையத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தமையும் தவிர்க்கக் கூடிய வழக்குகளுக்கு இடமளிக்கின்ற உதாரணங்கள்.



**கேள்வி** - நாடாளுமன்றை அரச தலைவர் கலைத்தமை அரசமைப்புக்குவிரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தமையின் பிரகாரம் அரச தலைவர் தவறு இழைத்தமை உறுதி செய்யப்படுகின்றது. எனவே அவருக்கு எதிராக, அவர் அந்தப் பதவியை வகிக்க முடியாது என வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா?

**பதில்** - அரசமைப்பின் பிரகாரம் அரச தலைவருக்கு எதிராக வழக்குத் தொடரமுடியாது. ஆனால் நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர முடியும். இதை மிகத் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தும் அரச தலைவர் அரசமைப்புக்கு எதிராகத் தொடர்ந்தும் செயல்படுகின்றார். அவரது பிடிவாதக் குணத்தால் இத்தனை வருடங்கள் பேணி வந்த ஜனநாயகத்தை அவமதித்து நாட்டைக் குழப்பி விட்டார். நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்ற 225நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ரணில் விக்கிரமசிங்காவைத் தலைமை அமைச்சராக்குமாறு கோரினாலும் மறுப்பேன் எனக் கூறி மக்களின் வாக்குரிமைக்கு மதிப்பளிக்காத தனது ஏகாதிபத்தியத் தன்மையைக் காட்டுகின்றார்.

எமக்கு ரணில் விக்கிரமசிங்காவைப் பிடிக்குமோ பிடிக்காதோ 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைத் தலைமைஅமைச்சராகநியமிக்கும்படி வேண்டினால்நியமிக்க வேண்டியதே ஜனநாயகம். எனது பார்வைக்கு அரச தலைவர் தொடர்ந்தும் இப்படியான செயல்களில் ஈடுபட்டு நாட்டைக் குழப்பிக்கொண்டு இருப்பார் போன்றே தெரிகின்றது. நாடாளுமன்றைக் கலைத்துத் தேர்தலை நடத்தி மக்களிடம் தீர்வைக் கேட்போம் என்று கூறிய அரச தலைவர், இப்போது தானே தனது பதவியிலிருந்து விலகி மக்களிடம் தனக்கு மீண்டும் வாக்களிக்குமாறு கோருவதே நல்ல செயல் எனக் கருதுகின்றேன்.

## ஆசிரியருக்கான கடிதம்

# அநீதிகளைக் களைவதற்கு அரசும் அதிகாரிகளும் முன்வரவேண்டும்!

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் போக்குவரத்துக் கட்டணங்களில் எந்தவிதமான மாற்றமும் மேற்கொள்ளப்படாமையும்,
அதேபோன்று, கடந்த முறை எரிபொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டபோது போக்குவரத்துக் கட்டணங்கள் உடனடியாகவே அதிரிக்கப்பட்டமையும் கண்டிக்கத்தக்கது.
இந்தச் சந்தர்ப்பத்திலே சில இடங்களுக்குரிய போக்குவரத்துக்கட்டணங்கள் மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதிலும் மீதி இரண்டு ரூபா சில்லறைத் தட்டுப்பாட்டைக் காரண மாகக்கூறி வழங்கப்படுவதில்லை.
இதனால் தினமும் பயணங்களை மேற்கொள்பவர்கள் இருவழிப் போக்குவரத்துக் கட்டணத்தில் இருந்து நான்கு ரூபாவை இழக்கின்றனர். இந்த நிலையில்தான் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன என்பது அவதானத்துக்குரியது. ஆனால் முன்னைய கட்டணங்களில் மாற்றம் எதையும் மேற்கொள்ளாது போக்குவரத்து நிறுவனங்கள் பயணிகளை ஏமாற்றி வருகின்றன.
உணவகங்களின் தற்போதைய நிலையும் இது விதமாகவே காணப்படுகின்றது. பொருள்களின் விலைகளில் ஏற்றம் ஏற்படும்போது தமது தயாரிப்புக்களுக்கும் விலைகளை அதிகரித்து விடுகின்றனர். ஆனால் விலைகள் குறைக்கப்படும் போது உணவுகளின் விலைப் பெறுமதியில் மாற்றங்களைக் கண்டுகொள்ள முடியவில்லை. இதனால் உணவகங்களுக்குச் செல்பவர்கள் அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது.
இந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்துச் செயலாற்ற வேண்டும். இத்தகைய அநீதியான செயற்பாடு களைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்வர வேண்டும். உணவு வழங்கலும், போக்குவரத்தும் முக்கிய துறைகளாக இருப்பதால், அரசு இத்துறை சார்ந்து இழைக்கப்படுகின்ற அநீதிகள் குறித்து நடவடிக்கைகளை உடனடி யாகவே மேற்கொள்ள முன்வரவேண்டும்.

*சி.நிசாந்தன்,*
*தெல்லிப்பழை.*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்






# அணிற் பிள்ளை

கத்திக் கத்தி மரத்திலேறும் அணிற் பிள்ளையே
கனி தருவேன் வா வா வா அணிற் பிள்ளையே
மெத்த உயரக் கொப்பிலேறும் அணிற் பிள்ளையே
முதுகில் கோடு போட்டதார் சொல்லு அணிற் பிள்ளையே
காய் கனியை விரும்பி உண்ணும் அணிற்பிள்ளையே
கிட்ட ஓடி வந்திடுவாய் அணிற் பிள்ளையே

நாய் பூனை பிடித்திடாமல் அணிற் பிள்ளையே
நான் வளர்ப்பேன் நீ வருவாய் அணிற் பிள்ளையே
கொய்யாப்பழம் தருவேன் அணிற் பிள்ளையே
கூடவே சோறும் தருவேன் அணிற் பிள்ளையே
மெய்யாய் அடித்து வருத்தமாட்டேன் அணிற்பிள்ளையே
மிக விரைவாய் வந்திடுவாய் அணிற்பிள்ளையே

# நடப்பதும் நடக்காததும்





எண்ணியது நடக்காத போது நாம் ஏமாற்றத்தக்கு உள்ளாகிறோம். வாழ்க்கை என்பது ஒரே போக்கில் எப்போதும் அமைவதில்லை. நாம் எதிர்பார்க்கின்ற விடயங்கள் நடப்பதும், வேறு சில விடயங்கள் நடக்காமல் போவதும் இயற்கையே. எண்ணியது நடக்கும்போது மகிழ்ச்சி அடைகிறோம். நடக்காதபோது வருத்தம் அடைகிறோம். அதுவரையில் சரி, அதற்காக நடக்காததைப் பற்றியே எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் அது நேரத்தை வீணாக்குமே தவிர எந்தவிதமானபயனையும் எமக்கு அளிக்கப் போவதில்லை. சிலர் நடந்து போனதை எண்ணியே கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். நடக்கப் போவதைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். இது ஒரு தவறான பழக்கம். நம்பிக்கை முன்னேற்றத்தை தடை செய்யும் பழக்கம். கடந்த காலம் மீண்டும் நிகழப் போவதில்லை. எதிர்காலம் மட்டுமேஎமக்குச்சொந்தமானவை. அதனால்கடந்தகாலஅனுபவங்களிலிருந்துபாடம்பெற்று எதிர்காலத்தைதிட்டமிடலாமேதவிரகடந்தகாலத்தைப்பற்றிக்கவலைப்பட்டுநிகழ்காலத்தை கைவிட்டுவிடக் கூடாது.

ஆராய்ந்து பார்த்தால் எம்முடைய மனதை நாம் பலவீனமாக வைத்துக் கொண்டிருப்பதால் கடந்த கால அனுபவங்கள் எம்மைப் பயமுறுத்தத் தொடங்குகின்றன. எதிர்காலமும் கடந்த காலம்போல் ஆகிவிடுமோ என்கிற அச்சத்தில் நாம் செயலிழந்து போகிறோம். இது தேவை தானா என்று நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

இன்பத்தையும்துன்பத்தையும்சமமாகபாவிக்கவேண்டும்என்றுஞானிகள்சொல்கிறார்கள். இது அவர்களுக்கு மட்டும்தான் சாத்தியம் என்று நாம் எண்ண வேண்டியது இல்லை. இன்பத்தால் மகிழ்ச்சியும் துன்பத்தால் துயரமும் ஏற்படுகின்றபோது இரண்டையும் சமமாகப் பாவிப்பது எவ்வாறு சாத்தியம் ஆகும் என்கிற எண்ணம் தோன்றலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சிறிய உதாரணத்தைப் பார்க்கலாம். ஒரு வேலைக்கு விண்ணப்பம் செய்கிறோம். அந்த வேலைகிடைக்கும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. கிடைக்காத போது ஏமாற்றம் ஏற்படுகிறது. அதன் விளைவாக கவலையும் உண்டாகிறது. உணர்ச்சி நிலையை பொறுத்தவரையில் இரண்டும் ஒன்றல்ல.

மகிழ்ச்சிக்குமாறுபட்டதுதான்கவலை. ஆனால் வேலைக்குவிண்ணப்பிக்கும்போது வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தமை சரிதான். வேலை கிடைக்காமலும் போகலாம் என்கிற எண்ணமும் விண்ணப்பிக்கின்றபோது இருந்திருக்க வேண்டும் அல்லவா? அப்படி ஒருநிலையும் இருப்பதைகவனத்தில்கொண்டிருந்தால்வேலைகிடைக்காதபோதுஏமாற்றம் அடைய வேண்டிய அவசியமும் இருந்திருக்காது.




# குரங்குகளுக்கு வந்த பேராசை



அருகில் உள்ள பழத் தோட்டத்துக்கு சென்ற நான்கு குரங்குகள் அங்கே பறித்து வைத்திருந்த பழங்களை கூடையோடு தூக்கிக் கொண்டுதங்கள்வசிப்பிடம்நோக்கிச் சென்றன.

அவைகள்திருடியபழக்கூடையைஆளுக்கு சிறிது நேரமாகத் தலையில் சுமந்தபடி சென்று கொண்டிருந்தன. அந்த வழியில் ஒரு மரத்தடியில் பஞ்சுமிட்டாய் விற்பவன் படுத்திருந்தான். அவன் தலைக்குப் பக்கத்தில்கூடைநிறையபஞ்சுமிட்டாய்இருந்தது. பஞ்சுமிட்டாய்வியாபாரிபிரயாணக்களைப்பில்நன்றாகத்தூங்கிவிட்டான். பழக்கூடையைத் தூக்கிவந்து பின்பு பஞ்சுமிட்டாயைப் பார்த்ததும் அதையும் சாப்பிட வேண்டும் என்றுஆசைவந்தது. "அந்தப்பஞ்சுமிட்டாய் மிகவும் இனிப்பாக இருக்கும். எனக்கு அதை சாப்பிட ஆசையாக இருக்கிறது" என்றது ஒரு குரங்கு.

"ஆமாம்... ஆமாம் எத்தனை நாளுக்குத் தான்நாமும்பழங்களையேதின்பது. இன்று பஞ்சுமிட்டாய் சாப்பிடுவோம்'' என்றது இன்னொருகுரங்கு. "அந்தப்பஞ்சுமிட்டாய் விற்பவன்நன்றாகத்தூங்குகின்றான். நாம் அப்படியேஅந்தபஞ்சுமிட்டாய்கூடையைத் தூக்கிச் சென்றுவிடலாம்'' என்றது இன்னொரு குரங்கு.

"நாம்முதலில்இந்தப்பழங்களைநம்இருப்பிடம் கொண்டு சென்று விடுவோம். பிறகு வாய்ப்புக் கிடைத்தால் பஞ்சுமிட்டாயை திருடலாம். அவன் அருகிலேயே படுத்திருக்கிறான். நாம் பிடிபட்டால் அவன் நம்மைத் தொலைத்துவிடுவான்"என்றதுஇன்னொரு குரங்கு.

"நீ சொல்வதும் சரிதான். நாம் பழங்களை நம்முடைய இடத்தில் வைத்துவிட்டு வருவோம் என்றது" முதல் குரங்கு. "இல்லை இல்லை அவன் நன்றாகத் தூங்குகிறான். இப்போதே பஞ்சுமிட்டாயை எடுத்துவிட வேண்டும் " என்று பிடிவாதம் பிடித்தது இரண்டாவது குரங்கு. அதை மூன்றாவது குரங்கும்ஆமோதித்தது. அவை இரண்டும் பஞ்சுமிட்டாய் கூடையை நெருங்கி அவற்றைத் தூக்கிக் கொண்டு ஓடின. மற்றைய குரங்குகள் தாங்கள் கொண்டு வந்த பழக் கூடையை சுமந்து கொ்டு சென்றன. சில நிமிடங்களில் கண்விழித்துப் பார்த்த பஞ்சுமிட்டாய் வியாபாரி பஞ்சுமிட்டாய் கூடை காணாமல் போயிருப்பது கண்டு அதிர்ச்சி அடைநதான்.பதற்றத்தில்பஞ்சுமிட்டாயைத் தேடி அங்கும் இங்கும் ஓடினான். தூரத்தில் குரங்குகள் பஞ்சுமிட்டாய் கூடையைக் கொண்டுசெல்வதைக்கண்டான். "ஏய்திருட்டுக் குரங்குகளா என் பஞ்சுமிட்டாயைத் திருடிச்செல்கிறீர்கள். உங்கள்மண்டையை உடைக்கிறேன்பாருங்கள்"என்றுகற்களை எடுத்து அவைகள் மீது வீசி எறிந்தான்.


கல்லடிபட்டகுரங்குகள்இருகூடைகளையும் போட்டுவிட்டு பிழைத்தால் போதும் என்று அலறிக் கொண்டே ஓடின. பஞ்சுமிட்டாய் வியாபாரிகுரங்குகளால்எனக்குஒருகூடை பழம் இலாபம் என்று கூறியபடி பழக்கூடையுடன் பஞ்சுமிட்டாயையும் தூக்கிச் சென்றான். "நான்அப்பவேசொன்னேன்இருக்கிறதைவிட்டு விட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படக்கூடாதெண்டு இப்போது நாம் கொண்டு வந்த பழக் கூடையும் போச்சே" என்றது நான்காவது குரங்கு. சரிதான் பேராசைப் பட்டோம். பெரு நஷ்டம் அடைந்தோம் என்றன மற்றைய குரங்குகள்.

# ‘96’ பட மறுதயாரிப்பில் பாவனா

விஜய் சேதுபதி, திரிஷா நடிப்பில் வெளியான '96' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப்பெற்றது. வெளியாகிஒருமாதத்தில் இந்தப் படத்தைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய போதும் திரையரங்குகளில் படத்துக்கான வரவேற்பு என்பது குறையவில்லை. இதனால் இந்தப் படத்தின் மறுதயாரிப்பு உரிமைகளுக்கு நல்லபோட்டி இருந்தது.
படத்தைத்தெலுங்கில்மறுதயாரிப்புச்செய்யும் பணிகள் தொடங்கி நடந்து வரும் நிலையில், கன்னடம் மற்றும் இந்தி மொழிகளிலும் மறுதயாரிப்புச்செய்யப்படுகிறது.
கன்னட இயக்குநர் பிரீதம் குபியும், நடிகர் கணேஷும் இணைந்து கன்னடத்தில் இந்தப் படத்தைஎடுக்கத்திட்டமிட்டுள்ளனர். '99'எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் திரிஷா நடித்த ஜானு கதாபாத்திரத்தில் நடிக்க பாவனா ஒப்பந்தமாகியுள்ளார். விஜய்சேதுபதிகதாபாத்திரத்தில்கணேஷ்நடிக்கிறார். அர்ஜூன்ஜன்யா இசையமைக்கிறார்.








முதியோன்@laksh_kgm



ஒருவர் நிழலில் வாழவேண்டுமெனில், அவர் நகர்வுக்கு ஏற்ப நாம் நடந்தாக வேண்டும்!

செங்காந்தள்@kumarfaculty



கல்வி கற்க புத்தகங்களை விட 'நோட்டுக்களே' அதிகம் தேவைப்படுகின்றன!

ச ப் பா ணி@manipmp



அகப்படாத வாய்ப்புகள் எப்போதுமே வாழ்க்கைப் பயணத்தை நீளமாக்கி விடுகின்றன!






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தனித்திறமை செயல்களில் பிரதிபலிக்கும். தொழில், வியாபார வளர்ச்சி வியத்தகு முன்னேற்றம் பெறும். அதிக பணவரவினால், சந்தோஷம் கொள்வீர்கள்.

**இடபம்:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். துவங்கிய பணிகள் தாமதமின்றி இனிதே நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய பரிமாணம் ஏற்படும்.

**மிதுனம்:** விருப்பங்களை நிறைவேற்றுவதில், அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, சில மாற்றங்களை பின்பற்றுவது அவசியம்.

**கடகம்:** சிலர் தந்த வாக்குறுதியை மீறி நடந்து கொள்வர். வாழ்வியல்நடைமுறையைசரிசெய்வீர்கள். உடல்நலத்திற்கு தகுந்த சிகிச்சை உதவும்.

**சிங்கம்:** சொந்த நலன்களை தியாகம் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான போட்டி குறையும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** எண்ணமும், செயலும் சிறந்து வெற்றியை தரும். குடும்ப உறுப்பினர் மனதார வாழ்த்துவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

**துலாம்:** மன அமைதியை பாதுகாப்பது அவசியம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பர் உதவுவார். தவிர்க்க இயலாதபடி செலவு அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**தனுசு:** செயல்களில் நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். உறவினர் உதவி கிடைக்கும்.

**மகரம்:** சிலர் அதிருப்தியுடன் பேசுவர். பொது இடங்களில் வாக்குவாதம் தவிர்க்கவும். சத்தான உணவு உண்பதால் உடல் ஆரோக்கியம் பெறும்.

**கும்பம்:** புதிய சிந்தனையுடன் செயல்படுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழிலில் தாராள உற்பத்தி, விற்பனை உண்டாகும்.,

**மீனம்:** நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம். மன அமைதியை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு உதவும்.







# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 9 |
| | | | | 9 | 8 | 6 | 5 | |
| | 2 | | | 4 | 6 | | | |
| | | 8 | | | 1 | | 3 | 6 |
| 7 | | | | | 4 | | | |
| | | 4 | | | 3 | | 1 | 2 |
| | 5 | | | 6 | 7 | | | |
| | | | | 3 | 9 | 2 | 8 | |
| | | | | | | | | 5 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 1 | 3 | 6 | 2 | 8 | 9 | 7 |
| 6 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 1 | 3 |
| 9 | 3 | 8 | 1 | 7 | 4 | 6 | 2 | 5 |
| 7 | 8 | 9 | 2 | 4 | 1 | 3 | 5 | 6 |
| 2 | 6 | 3 | 7 | 5 | 9 | 1 | 4 | 8 |
| 4 | 1 | 5 | 6 | 8 | 3 | 2 | 7 | 9 |
| 1 | 5 | 4 | 9 | 3 | 6 | 7 | 8 | 2 |
| 3 | 2 | 7 | 5 | 1 | 8 | 9 | 6 | 4 |
| 8 | 9 | 6 | 4 | 2 | 7 | 5 | 3 | 1 |

நாளிதழைப் பார்த்துக்கொண்டே
தேநீர் குடித்தால் தாத்தா

தொலைக்காட்சியைப்
பார்த்துக்கொண்டே
தேநீர் குடித்தால் அப்பா

கைபேசியைப் பார்த்துக்கொண்டே
தேநீர் குடித்தால் பையன்.



# இருளில் ஓர் ஒளிக்கீற்று

வானொலி நிகழ்ச்சி

தென்றல் FM
THENDRAL 104.7 104.9

செங்கோலோச்ச விழையும் பெண்கள் தமது அனுபவங்களை உங்களுடன் பகிர்வதற்கான ஒரு மக்கள் களம்

## கேட்கத் தவறாதீர்கள்!

தென்றல் அலைவரிசையில்
பிரதி சனிக்கிழமை தோறும்
காலை 9.30 மணிக்கு

Spectrum Media

VILUTHU

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
பெருமையுடன் வழங்கும்
'இருளில் ஓர் ஒளிக்கீற்று'
வானொலி நிகழ்ச்சி

விளம்பர அனுசரணை

ZOA
RELIEF | HOPE | RECOVERY



# After O\L

புதிய பிரிவு ஆரம்பம்
17/12/2018 (Mon) 9:30 a.m. or 3:30 p.m.
20/12/2018 (Thu) 9:30 a.m. or 3:30 p.m.

DMI
COMPUTER EDUCATION

IT + ENGLISH DIPLOMA

## Professional IT Courses

- Diploma in PC Application
- Diploma in Office Automation
- Diploma in Web Designing & Development
- Diploma in Computerized Accounting
- Diploma in Business Management
- Adv. Diploma in Hardware & Networking
- Diploma in Video Production & Multimedia
- Diploma in AutoCAD
- JAVA , C#, C++ , PHP

DiTEC

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑இலகு தவணைக்கட்டண வசதிகள்

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

DIPLOMA IN ENGLISH (PART 1 + PART 2)

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

DIPLOMA IN ENGLISH
Spoken English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் — Reading Writing Speaking Listening

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. | சுன்னாகம் Mon,Wed,Fri 11:00 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 2:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS
- Unique Test Tips
- Latest course Materials

IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |



திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி

**10%-50% வரை விலைக்கழிவு**



### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500~~/= | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000~~/= | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000~~/= | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000~~/= | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500~~/= | 1000/= |



லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றை கொள்வனவு செய்து 5000/= பெறுமதியான சாறி ஒன்றை **இலவசமாக** பெற்றிடுங்கள்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 14.12.2018 - 31.12.2018 வரை**

# பிரமாண்டமான திறப்புவிழா

TS

சுன்னாகம் சந்தியில் 4 மாடிகளில்
கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது

## TS TELESOON & JEYLING

இன்று **14.12.2018 வெள்ளிக்கிழமை**
**காலை 9.00 மணிமுதல் 10.30** அளவிலான சுபவேளையில்
கார்கில்ஸ் வங்கியின் வடமாகாண பொறுப்பதிகாரி
**திரு.பிரகலாத்** தலைமையில்
பேராசிரியர் **க.தேவராஜா** (முன்னாள் பீடாதிபதி வணிகபீடம்.
சுற்றுலாத்துறை தலைவர் வடமாகாணம்) அவர்களினால்
கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை
**Telesoon & Jeyling** நிறுவனம் அறியத்தருகின்றார்கள்.

**எமது நிறுவனத்தில் பின்வரும் வியாபார நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.**

Phone & cctv Camera



Sports Items



- **Phone**
- **Sports**
- **Textiles**
- **Toys For Kids**
- **Electronic**
- **Furniture**
- **CCTV Camera**

Textiles & Footwear



Toys & Teddy Bear



அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

## வரவேற்பாளர் தேவை

யாழில் இயங்கும் தனியார் கட்டட நிர்மாணத்துறை காரியாலயத்திற்கு பெண் வரவேற்பாளர்தேவை.
20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட வரவேற்பாளர் தேவை.
(யாழ். நகரில் இருந்து 5 km வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
இல. 81, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 077 7865 347

## பெயர் மாற்றம்

நெசவு நிலைய வீதி வளலாய் அச்சுவேலியைச் சேர்ந்த **துரைசிங்கம் புனிதவளவன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **துரைசிங்கம் புனிதன்** எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறு கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- துரைசிங்கம் புனிதன் -

(CS/2170)(11.17)




இறக்குமதியாளர் | புதிய வருகை

## NEW WORLD INTERNATIONAL BUSINESS (PVT) LTD.

நிகழும் விளம்பி வருடத்தில் இன்று **(14.12.2018) 9.30 - 10.40** இற்கு இடைப்பட்ட நேரத்தில் சதய நட்சத்திரமும் ஸப்தமி திதியும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும்

**SUNJEYS HOLDINGS நிறுவனத்தினரின்**
(இல.98, அரசடி வீதி, யாழ்ப்பாணம், யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)

நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மதிப்புக்குரிய சட்டத்தரணியும் யாழ் மாவட்ட இறைவரி ஆணையாளருமாகிய **பந்துல ஹப்புதந்திரிகே** அவர்களும், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமாகிய **உயர்திரு. இ.இளங்கோவன்** அவர்களும் கலந்துகொள்வார்கள். இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:**
**உரிமையாளர் : Lion அருள் ஜெயந்திரன்**
**SUNJEYS HOLDINGS, இல.98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 3864 077, 0777 474 111**

நம்பமுடியாத விலையில் மாபெரும் விலைக்கழிவு
உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்.
**75,000 ரூபா மட்டுமே.**

100% இயந்திர மோட்டார்



பெட்ரோல் தேவையில்லை.
சூழல் மாசடையாது.
எண்ணெய் மாற்றத் தேவையில்லை.
புகை பரிசோதனை தேவையில்லை.

**DESCRIPTION OF BIKE**

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

**No.72, Messenger Street Colombo 12.**
**Tel: 0112 433 153 Fax: 0112 433 129**
**E-mail : info@nwilk.com**

**#0.30/- சதம் 1 Km இயங்கும் செலவு.**

கணபதி துணை

## வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி!

யாழ். நகரில் முதல் முறையாக அனைவரின் தேவை கருதி இன்றில் இருந்து 24 மணித்தியால சேவையை எமது நிறுவனம் வழங்குவதுடன் இன்றில் இருந்து மூன்று நாள்களுக்கு 3000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்தால் 10 %விலைக்கழிவும் 5000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்தால் 10 % விலைக்கழிவுடன் எமது நிறுவனத்தில் இருந்து 6 Km சுற்றளவுக் குள் வசிப்பவர்களுக்கு இலவசமாக பொருள்கள் விநியோகிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு :**
தொலைபேசி மூலமாகவும் பொருள்களை ஓடர் செய்யலாம்.
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.) அங்கர் மாவு, சீனி, தவிர்ந்த...

SUNJEYS
**A to Z SUPER MART**
**No. 100, Arasady Road, Jaffna.**
**இந்து மகளிர் கல்லூரி அருகாமையில்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி
Best Wishes | Best Wishes
**பிரேமலதா சண்முகம்**
BA. Dip in E.D M.A (TAMIL)
அவர்கள் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினரால் வழங்கப்படும் 2018 ஆம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருதான **"குரு பிரதீபா பிரபா"** விருதினை இன்று (14.12.2018) பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் சாதனைகள் பல பெறவும் வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச்சமூகம்,**
**யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com,
021 493 1111

## MAJESTIC CINEPLEX




Jaffna Bronze
10.30AM | 1.30PM 4.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)




Jaffna Silver | 1.45PM




Jaffna Silver
4.45PM|7.45PM|10.30PM (Fri/Sat)




Jaffna Silver
10.45AM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களை முற்றாக குணப்படுத்த

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக
**பரந்தனில் - 15.12.2018 நாளை)**
**யாழ்ப்பாணத்தில் - 22.12.2018**
**தொடர்பு - 077 444 1082**

## பணியாளர் தேவை

முழங்காவிலில் உள்ள ICE Factory ஒன்றுக்கு இயக்குநர்(Operator) தேவை.
(வெல்டிங் வேலை அறிவு விரும்பத்தக்கது)

(CS 0021662)(4.17)

**தொடர்பு : 077 232 6003**
**076 295 8828**

**இன்று முதல்**
**RIO FILMS Proudly presents**




**வடக்கு, கிழக்கு**

| | |
|---|---|
| Majestic Jaffna. 10.00, 7.30, 10.30 pm [021 222 7712] | Chelva Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7973] |
| Raja 1 Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7332] | Salu Cinema Point Pedro. 10.30, 2.30, 6.30 pm [021 226 5000] |
| Saraswathy Trinco. One Show [026 222 2221] | Nahams Chunnaham. 10.30, 2.30, 6.30 pm [0772 186 646] |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

**தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் கா.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கா தோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

Field Assistant Agriculture (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறிகள்)

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி)
   தகைமை கா.பொ.த சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16 -24 வயதுக்குட்பட்டவராக இருத்தல்
2. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப்பயிற்சி நெறி)
   தகைமை NVQமட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16 -26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சிக்கட்டணம் இலவசம்**


பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **20.12.2018 காலை 9.00 மணிக்கு** எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

**மேலதிக விவரங்கள்**
**அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம், சுன்னாகம்.** **தொலைபேசி: 077 240 6625**
E.Mail: jcinstituteofagriculture@gmail.com

(c/8692)

## மரண அறிவித்தல்கள்

# பொன்னம்பலம் அருமைநாயகம்



கௌதாரிமுனை பூநகரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அருமை நாயகம் 11.12.2018 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2018) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கௌதாரிமுனை இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**கௌதாரிமுனை, பூநகரி.**

# திருமதி கிளமென்ற் திரேசம்மா



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிளமென்ற் திரேசம்மா கடந்த (11.12.2018) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் வரோணிக்கா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான எஸ்தாக்கி அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிளமென்றிரின் அன்புமனைவியும் சவரிமுத்து, பேதுருப் பிள்ளை, லூர்த்தம்மா காலஞ்சென்றவர்களான பாவிலுப் பிள்ளை, சூசைமுத்து, அந்தோனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயா, ஜெயம், ஜெயக்குமார் காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் அன்புத்தாயும் செல்வரத்தினம், பெனடிற், மேரிகிறிஸ்ரினா ஆகியோரின் அன்புமாமியும் ஜெகன் -சில்வியா, நிரூஜன் - ஜெனா, ஜெடின் -மேரிகொன்சலா, ஜென்சி, ஜெனன் - தர்சிகா , ஜெலா, யூலியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுவீர்தன், சாம்தன், ஜெரூஷா, ஜெறோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம், ஆனைக்கோட்டை.**
**021 221 3339**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# முருகுப்பிள்ளை கதிர்காமநாதன்

*(சட்டத்தரணி)*



தோற்றம் 05.02.1943 மறைவு 13.12.2018

யாழ். கலைநகர் வட்டு. வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட முருகுப் பிள்ளை கதிர்காமநாதன் நேற்று (13.12.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான முருகுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா செல்வ மணி தம்பதிகளின் அன்பு மரு மகனும் கிருஷ்ணமனோரஞ்சிதத் தின் அன்புக் கணவரும் Dr. இராஜ சுதர்சன் (வைத்திய நிபுணர், ஆஸ்தி ரேலியா), துஷ்யந்தி, அகல்யா, பிருதிவிராஜ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வினா, உதயகுமார், சுதர்சன் சிவசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ஜுன், ஆதித்யாஅசோக், ராஜகரன், பிருந்தாகரன், மேருகன், சுசாங்கன், லக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்லம்மா, விநாயகமூர்த்தி, திருப்பதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம், பரநிருபசிங்கம் மற்றும் சுந்தரலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ் சென்றவர்களான மயிலுப்பிள்ளை, கந்தையா, சிவபாக்கியம், மயிலேறும் பெருமாள், இராசாத்தியம்மா, பாலசுப்பிரமணியம் மற்றும் பாக்கியலட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன், கிருஷ்ண தேவி, சத்தியபாமா மற்றும் ராதா கிருஷ்ணன் மாவல்லி (இந்திரா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருவேரகம், வட்டு. வடக்கு, சித்தன்கேணி.**
**வீடு : +94 (0) 21225 0951,**
**Dr. இராஜசுதர்சன் + 61431305338,**
**பிருதிவிராஜ் + 61431642744**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**கந்தரோடை சுன்னாகம்**


அமரர்களான

## லயன் மகாதேவா - பூமாதேவி

ஆகியோரின்



**ஓராண்டு நிறைவும் ஞாபகார்த்த கட்டட திறப்பு விழாவும்**



| | | |
|---|---|---|
| காலம் | : | 14.12.2018 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி |
| இடம் | : | கல்லூரி வளாகம் |
| தலைமை | : | ஸ்கந்தவரோதயன் லயன் மு.செல்வஸ்தான் (கல்லூரி முதல்வர்) |

**பிரதமவிருந்தினர்:**

**ஸ்கந்தவரோதயன் கௌரவ**
**த. சித்தார்த்தன் (நா.உ)**

**சிறப்பு விருந்தினர்**

**லயன் தேவா பீற்றர் (மாவட்ட ஆளுநர் - லயன்ஸ் கழகம்)**

**ஆசியுரை:** கலாநிதி ஆறு.திருமுருகன் (ஓய்வுநிலை அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**மண்டபத் திறப்பு :** அமரர்களின் புதல்வர் களான ம.பிருந்தாபன் (லண்டன்), லயன் ம.பிரிதிவிராஜா (லண்டன்)

**ஞாபகார்த்த நூல் வெளியீடு :** கௌரவ த.சித்தார்த்தன்

**அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

கந்தரோடை.

லயன் மகாதேவா குடும்பம்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1526 சீட்டிழுப்பு திகதி 13.12.2018
வெற்றி இலக்கங்கள் 34 46 51 55 ஆங்கில எழுத்து F
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ 22, 883, 972/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சங்வர்தன வாசனாவ
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 203
சீட்டிழுப்பு திகதி 13.12.2018 நீலம்
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 08 09 15
விதி எண் 02
அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,097,568 /=
2018.12.15 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

கா.பொ.த (சாதாரண) பரீட்சையில் தோற்றிய மாணவர்களிற்கு
என விஷேட aat வகுப்புகள் ஆரம்பம்
இவ்வகுப்புகளின் விஷேட அம்சங்கள்:
. aat நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தினால் நடத்தப்படுகிறது.
. கா.பொ.த (சாதாரண) மாணவர்களினை தொழில் சார் கற்கை நெறி பரீட்சைக்கு தயார்படுத்தும் திறன் கொண்ட விரிவுரையாளர்.
. அதிக சித்தி வீதம் கொண்ட நிறுவனத்தினால் நடத்தப்படல்.
. இலகுவில் அடையக்கூடிய முறையில் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.
. இலகுவான கொடுப்பனவு முறை
. விரிவான இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய கற்பித்தல் மற்றும் குறிப்புக்கள்
. கடந்தகாலங்களில் இலங்கையில் கா.பொ.த (உயர்தர) பரீட்சையில் 1ம் மற்றும் முதல் 10 இடங்களை பெற்ற மாணவர்கள். கா.பொ.த (சாதாரண) பரீட்சையின் பின் aat கற்கை நெறியினை பயின்று உயர்தர பரீட்சைக்கு முன் பூர்த்தி செய்தவர்கள்.
. aat முடித்தவர்கள் பட்டயக்கணக்காளர் பரீட்சையில் விளக்கக்களிப்பு பெறுவர்.
ஏன நீங்களும் ஒரு தொழில் சார் தகமையை உயர்தர பரீட்சையின் முன் பெறக்கூடாது.
IBM
Institute of Business Management,
No.1, 2nd Lane, Power House Road Jaffna
Tel No : 0212227770, 0766721010, 0777633915

## ஆறாத காயங்களுடன் எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மயில்வாகனம் சுந்தரலிங்கம்**
(கிராமசேவையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.03.1953 | 14.12.2010 |

அப்பா!
மறைந்து போனாலும் மறந்து போகா அன்பை
காட்டீச் சென்றீர் ஆண்டெட்டு ஆயிற்று
ஆனாலும் காயங்கள் ஆறவில்லை - அவ்வப்போ
விழியோரம் கசியும் கண்ணீர்
ஆங்காங்கே உங்கள் நினைவுகளை தூவிச் செல்லும்
எமை மௌனமாக்கும் உங்கள் பெயர் ஒன்றே போதும்
எமைப்பற்றி நாம் சொல்ல........
இறைவனிடம் கேட்கின்றோம்
எம் பெற்றோர் நலம் தானே???

94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். 021 222 7075 (சு.21786)(13)
பிரிவால் கலங்கி நிற்கும் பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை
ஆசிரியர் திரு. மே. நெல்சன்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி
**புஸ்பதேவி (கமலா) பூதத்தம்பி**
காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
பாடசாலை நலன்புரிச்சங்கம்,
மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, மிருசுவில்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 463
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.12.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,648,945/-
வெற்றி இலக்கங்கள் 12 49 51 53 ஆங்கில எழுத்து A
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT A என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்கள்

### துரைராஜா மகேந்திரராஜா



யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Wuppertal ஐ வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா மகேந்திரராஜா 08.12.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் ரட்னேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா (முகாமையாளர் MPCS) காலஞ்சென்ற பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அனுசலாதேவியின் (அனுசா) பாசமிகு கணவரும் சிந்து, நிசாந், சௌமிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் டிலாந்தியின் அன்பு மாமனாரும் சந்திரன்(கனடா), இந்திரன்(கனடா), விமலராணி(கனடா) காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் புனிதவதி(ஜேர்மனி),கௌசலாதேவி (சுவிஸ்), சித்திரா (ஜேர்மனி) கோமதி(நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 - பி.ப. 1.00 ஜேர்மன் நேரப்படி Wittener Str - 146 - 148, 42279 Wuppertal, Germany எனும் இடத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 18584) (14,17)
தகவல்: R.கோமதி.
077 309 9122



### திருமதி இராசமலர் நடராசா

**(இயக்குநர் - முத்தமிழ் பேரவை, விளானை களபூமி, காரைநகர்)**

யாழ்ப்பாணம், காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் நடராசா (இயக்குநர் - முத்தமிழ் பேரவை) நேற்று (13.12.2018) வியாழக்கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் நடராசாவின் (ஸ்தாபகர் முத்தமிழ் பேரவை, முன்னாள் இராசமலர் களஞ்சியம் உரிமையாளர், முன்னாள் தமிழ் உலகம் பத்திரிகையின் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற A.S. ஆறுமுகம் (A.S. சங்கரப்பிள்ளை & பிறதேர்ஸ்) - அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், இராசலிங்கம் (ஞானமலர் ஸ்ரோர்ஸ் - கொழும்பு), பாலாம்பிகை (ஆஸ்திரேலியா) , பாலேந்திரன் (கொழும்பு), இந்திராதேவி (லண்டன்), வசந்திராதேவி (கொழும்பு), காலஞ்சென்ற ரஞ்சினிதேவி மற்றும் தயாபதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரமதி, கணநாதா, சாரதாமணி, Dr.ஆனைமுகன், நேசேந்திரன், கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சிவசங்கர், Dr.சிவகுமார், Dr.காண்டீபன், சசிவர்ணா, Dr.காயத்திரி, கஜமுகவர்ணன், சண்முகவர்ணன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செந்தாமரை, அறிவழகன், அருள்மொழி (கவிதா), அருட்செல்வி (கல்பனா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை, களபூமி,
காரைநகர்.
(C/32302)(11,17)
தகவல்: குடும்பத்தினர்.
077 730 7283

பளைப்பிரதேசமருத்துவனையில்

## புதிய நுழைவாயில் திறப்பும் கட்டடங்கள் திறந்து வைப்பும்



கிளிநொச்சி, டிசெ. 14

பளைப் பிரதேச மருத்துவமனையின் வருட இறுதி ஒன்றுகூடலும், மதிப்பளிப்பும், புதிய கட்டடங்கள் திறந்து வைக்கும் நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி சி. சிவரூபன் தலைமையில் இறுதி ஒன்றுகூடலும், மதிப்பளிப்பும் இடம்பெற்றன. அதன் பின்னர் பளையில் பண்ணை உரிமையாளர் ஒருவர் அமைத்த கொங்கிறீட் வீதியும் பளை பிரதேசத்தை சேர்ந்த நலன் விரும்பிகள் அமைத்த முதன்மை நுழைவாயிலும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்கிய சிரம சக்தி வேலைத்திட்டத்தில் பளை சிறீபதி இளைஞர் விளையாட்டுக்கழகத்தினரால் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையும், நோயாளர் காவுவண்டி தரிப்பிடம் போன்றவையும் திறந்து வைக்கப்பட்டன. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் சி.வி. வின்னேஸ்வரன் மற்றும் மதிப்புறு விருந்தினர்கள் அவற்றைத் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து மதிப்பளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. தாதியர்கள் ஊழியர்கள், சாரதிகள், சிறீபதி விளையாட்டுக் கழக இளைஞர் கழகத்தினர் மதிப்பளிக்கப்பட்டனர். விருந்துபசாரத்துடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. இந்த நிகழ்வில் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சி. குமாரவேல், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப. அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் த. காண்டீபன், பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மருத்துவர்கள், தாதியர்கள், பொதுமக்கள் விளையாட்டுக்கழக வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(4,6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 13.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது தந்தை

**அமரர் செல்லையா பஞ்சலிங்கம்**

அவர்களின் 31 ஆம்நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.772, கோயில் வாசல், இணுவில் சந்தி,
இணுவில் மேற்கு, இணுவில்.
021 205 4403
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.11.2018 அன்று சிவபதமடைந்த எமது அன்புச்செல்வன்

**அமரர் கோபாலகிருஸ்ணன் சாரங்கன்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (15.12.2018) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



**Dr. அம்பலவாணர் ரகுபதி**

(MBBS (SL), MD (COL), MRCP (UK), MRCPE)

(பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செஞ்சோலை (கிளிநொச்சி), அன்பு, பாரதி (முல்லைத்தீவு) சிறுவர் இல்லங்கள்.

## வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் முன்னணி நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*அலுவலக உதவியாளர்
*பாதுகாப்பு ஊழியர் / காவலாளி

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை 15.12.2018 அன்று காலை 9.30 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு நேரில் வருமாறு வேண்டப்படுகின்றார்.

இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## வங்கியில் அடகு வைத்த நகைகள் மீட்டுத்தரப்படும்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை வட்டி முதலுடன் நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

(CS/21784)(11.17)

**077 015 7609**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



**அமரர் இராஜசிறி மாலினி**

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி)

கடந்த (14.11.2018) ஆம் திகதி புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு இராஜசிறி மாலினி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(C 5602/15)
குடும்பத்தினர்.

## பூப்பந்தாட்ட தொடர் முடிவுகள்

மன்னார், டிசெ. 14

மன்னார் மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு - கிழக்கு மாகாணரீதியாக நடத்தப்படும் முரளிதரன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான தொடரில், 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஹன்றி பீரிஸ் வெற்றி பெற்றுள்ளார்.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இந்த ஆட்டம் நடைபெற்றது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஹன்றி பீரிஸ், ஜெருசன் இருவரும் மோதினர். கென்றி பீரிஸ் ஜெரூசனை 21:18, 21:14 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டார்.

14வயதுப் பிரிவு பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த வீராங்கனைகளான எம்.நாவல், ஒலிவியா இருவரும் மோதினர். முதலாவது செற் ஆட்டத்தில் நாவல் 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது செற் ஆட்டத்தில் ஒலிவியா 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெற்றி பெற்றார். தீர்க்கமான மூன்றாவது செற் ஆட்டத்தில் நாவல் 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். ஆட்ட முடிவில் நாவல் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது.

(5,23)

## தரம் 5 வகுப்பு

தரம் 5 மாணவர்களுக்கு ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து பரீட்சைகளுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும். யாழ். நகர், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் வசிப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 077 248 7080

# Invitation for Bids (IFB)

## Democratic Socialist Republic of Sri Lanka
## Northern Provincial Council
## Nallur Pradeshiya Sabha, Kokkuvil.
### Procurement of Tractor Trailer & Water Bowser (Trailer Model)

1. The Chairman **Procurement Committee** (PC) of Nallur Pradeshiya Sabha, Kokkuvil invites sealed bids from eligible and qualified bidders as in table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Secretary, Nallur Pradeshiya Sabha, Kokkuvil.TP:-021-222-2700, Fax: 021-222-0138 Email- npsnallur@gmail.comOffice hours from 09.00 hrs to 16.00 hrs
5. A complete set of Bidding Document is English language could be purchased by interested bidders from the address given below from 14th **December 2018 until 27th December 2018 from 09.30 hrs to 14.30 hrs** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs 1,000/= the payment method will be cash or bank draft drawn in favour of **Secretary Nallur Pradeshiya Sabha, Kokkuvil.**
6. Bids must be delivered to the address given below on or **before 28th December 2018 at 2.00pm** bid number must be written on the top of the envelope. Late bids will be **rejected.** Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend at the address given below. **All bid must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. The address referred to above is **Chairman ,Pradeshiya Sabha , Nallur**

| Ser. No | Bid No | Name of Item | Period of Contract | Bid validity period upto from date of opening | Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required period upto |
| 01 | NP/14/41/(10)/Acc /Proc/Tractor Trailer -2018 | Tractor Trailer | 02 months | 15.02.2019 | 10,000.00 | 15.03.2019 |
| 02 | NP/14/41/(10)/Acc /Proc/Water Bowser -2018 | Water Bowser | 02 months | 15.02.2019 | 10,000.00 | 15.03.2019 |

Chairman,
Procurement Committee,
Pradeshiya Sabha, Nallur.

14.12.2018

## 22 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர்

**வி.எஸ்.குணசிங்கம்**

(ஓய்வுபெற்ற வனபரிபாலன திணைக்கள எழுதுநர்)

உறவாக 05.02.1931 — நினைவாக 16.12.1996

திதி:- 14.12.2018

காற்றை மிஞ்சும் காலவோட்டம்...
நினைப்பதற்கும்... பகிர்வதற்கும்...
நேரம் ஒதுக்கா சூழ்நிலை - இருந்தும்
எம்மை வழிநடத்தும் விம்பமான
உங்களின் நினைவுகளை
மீள... மீள.... உயிர்ப்பிக்கும் இந்நாள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இல.03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/21783)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

குகேசன் மல்ரி சொப் உரிமையாளர் திரு.வே.திருப்பதிநாதனின் அன்புத் தாயார்



**திருமதி பாக்கியம் வேல்விநாயகம்**

அவர்கள் 10.12.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/8693)(11,17)

வர்த்தகர் சங்கம்,
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்:

# இராணுவத்தளபதியை விசாரிக்காமல் இலங்கை அரசு காலம் கடத்துகின்றது

## சீறுகின்றன பன்னாட்டு அமைப்புக்கள்

**கொழும்பு, டிசெ. 14**

**இறுதிப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாள்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்த 500 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் சரணடைவுக்குப் பொறுப்பாக இருந்த 58ஆவது படைத் தளபதியிடம் இலங்கை அரசு இன்னமும் விசாரணை நடத்தவில்லை. இவ்வாறு பன்னாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் விசனம் வெளியிட்டுள்ளன.**

ஜஸ்மின் சூக்கா தலைமையிலான பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம், மனித உரிமை தர ஆய்வுக் குழு ஆகிய இரண்டு அமைப்புக்களுமே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

'ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் 500 பேர் காணாமல் போன்மை முக்கியமான விடயம்" என்று இரண்டு அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

'2009ஆம் ஆண்டு சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனாலும் அது நடைபெறவில்லை. 58ஆவது படைப் பிரிவின் தளபதியாக இருந்தவரிடம் இலங்கை அரசு விசாரணை நடத்தவில்லை" என்று ஜஸ்மின் சூக்கா தனது அமைப்பின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் சரணடைந்தபோது 58ஆவது படைப் பிரிவின் தளபதி அந்த இடத்தில் நின்றிருந்தார் என்பதற்கான கண்கண்ட சாட்சியங்கள் இருக்கின்றன என்றும் சூக்கா தெரிவித்துள்ளார்.

'58ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா ஜெனரல் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அவர் இராணுவத்தின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசு செய்யும் அவமரியாதை" என்றும் பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் சரணடைந்தவர்கள் தொடர்பாக 2011ஆம் ஆண்டு 20 பேரின் விவரங்கள் கிடைக்கப் பெற்றன. 2014ஆம் ஆண்டு அது 103ஆக அதிகரித்தது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் 280 ஆக அதிகரித்தது. தற்போது அது 500ஐயும் தாண்டியுள்ளது" என்று மனித உரிமை தர ஆய்வுக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

### நாடாளுமன்றக்...

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை ஆதரவை மைத்திரி - மகிந்த கூட்டணியால் உடைத்துவிட முடியவில்லை. இதனால் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அவர்களுக்குப் பெரும் சிக்கல் இருந்தது. இத்தகைய பின்னணியில் நவம்பர் மாதம் 9ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்ற அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டார் மைத்திரி.

அரச தலைவரின் அறிவிப்பு சட்டவிரோதமானது என்று வலியுறுத்தி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் மீதான விசாரணைகள் தலைமை நீதிபதி நளின் பெரேரா தலைமையிலான 7 நீதிபதிகளைக் கொண்ட குழுவால் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை நான்கு நாள்கள் முன்னெடுக்கப்பட்டன. தீர்ப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போன்று நேற்று மாலை வெளியானது. அதில், "நாடாளுமன்றின் ஆயுட்காலம் நான்கரை வருடங்களை முழுமை செய்வதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை. குறித்த காலப் பகுதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடனேயே அதைச் செய்யமுடியும்'' என்று ஏழு நீதிபதிகளும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர். (ம)

### வெடி...

பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடப்பட்டன.

வவுனியா கொரவப்பொத்தான வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் பொதுமக்களும் இணைந்து பல மணிநேரங்களாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-110)

### உயர்...

பட்டாசு வெடித்துக் கொண்டாடப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான சில நிமிடங்களிலேயே ஊடகங்களின் வாயிலாகவும், சமூக ஊடகங்களின் வாயிலாகவும் காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவியது. இதையடுத்து மாலை 6.20 மணியளவில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில இடங்களில் பாட்டாசு வெடித்துக் கொண்டாடப்பட்டது. (ம)

### நீதிமன்றத்தின்...

மணியில் இருந்து இரவு 8.30 மணி வரையிலான நிலவரப்படி இலங்கையில் உள்ள கீச்சகக் கணக்குகளில் அதிகமாகப் பேசப்பட்ட அல்லது தகவல் பரிமாறப்பட்ட பட்டியலில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முதலிடத்தில் இருந்தது. இலங்கை நாடாளுமன்றம் தொடர்பான தகவல்களும் அரச தலைவர் தொடர்பான தகவல்களும் அதற்கு அடுத்தடுத்த இடங்களைப் பிடித்திருந்தன. (ம)

### 19ஆவது...

மிக்க தீர்ப்பை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து கடந்த மாதம் 9ஆம் திகதி வெளியிட்டிருந்த அரசிதழுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியானது. மைத்திரியின் செயற்பாடு அரசமைப்புக்குப் புறம்பானது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்தது. இது தொடர்பில் உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தச்சட்டத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைக்கக் கூடிய அதிகாரம் அரச தலைவருக்கு இருந்தது. ஆனால், 19ஆவது திருத்தச்சட்டத்தில் நான்கரை வருடங்களின் பின்னர்தான் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியுமெனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் அரச தலைவர் மூன்று வருடங்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். அரச தலைவரின் செயலை முதல் தடவையாக சவாலுக்கு உட்படுத்திய வழக்காக இது உள்ளது. 19ஆவது திருத்தச்சட்டத்தின் பின்னர்தான் அதனையும் செய்ய முடிந்துள்ளது - என்றார். (ம)

### அரச...

கிறது என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டன.

நாடாளுமன்றத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலைத்தமை அரசமைப்புக்குப் புறம்பானது என்று உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது. இதனால் அரசமைப்பை மீறிச் செயற்பட்டார் என்ற அடிப்படையிலேயே மைத்திரிக்கு எதிராகக் குற்றவியல் தீர்மான வரைவைக் கொண்டுவருவதற்கு ஜே.வி.பி. தயாராகி வருகிறது என்று கொழும்பு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

### 'வெள்ளி அதிரடி'...

இரண்டு அதிரடி அறிவிப்புக்கள் இதற்கு முன்னர் வெள்ளிக்கிழமைகளிலேயே வெளிவந்திருந்தன. ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று ரணில் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச புதிய தலைமை அமைச்சராக மைத்திரியால் நியமிக்கப்பட்டார். நவம்பர் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்றே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டார் மைத்திரி. இதனால் ஒக்டோபர் பிற்பகுதியில் இருந்து பிரதி வெள்ளிக்கிழமைகள் சமூக வலைத்தளங்களில் கூர்ந்து கவனிக்கப்படும் அம்சமாக மாறியிருந்தன. இதற்கேற்ப ஏதோவொரு முக்கிய அரசியல் நகர்வு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இடம் பெற்றே வந்துள்ளது. இந்தப் பின்னணியில் இன்று வெள்ளிக்கிழமை ஏதேனும் முக்கிய அரசியல் நகர்வு இடம்பெற வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. அதிலும் நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளிவந்த அரசிதழ் அறிவிப்பு அரசமைப்புக்கு விரோதமானது என்று உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பிட்டுள்ள நிலையில் இந்த விவகாரத்தில் இன்று உச்சக்கட்ட எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)

### உயர்நீதிமன்றின்...

என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தை மைத்திரி கலைத்தமை அரசமைப்புக்கு முரணான செயல் என்று உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்த சில நிமிடங்களில் தான் வெளியிட்ட கீச்சகப் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதேநேரம் நாடாளுமன்றத்தின் தீர்ப்பை மதித்து ரணிலை உடனடியாகத் தலைமை அமைச்சராக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

"கடந்த நவம்பர் 12ஆம் திகதி உயர்நீதிமன்றம் நாடாளுமன்றம் கலைப்புக்கு எதிராக வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவு மூலம் ஜனநாயகத்தை விரும்பும் மக்களுக்கு ஓரளவு நிவாரணமும் நிம்மதியும் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக இன்றைய (நேற்றைய) சரித்திரம் வாய்ந்த தீர்ப்பானது சனநாயகத்திற்கான பூரண வெற்றியென்றே நாம் கருதுகின்றோம். நீதிமன்றத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் சனநாயக வெற்றிக்காகவும் நீதிக்காவும் போராடியது. அந்த வகையில் அரசியலமைப்புச் சட்டமானது நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கும் பாதுகாப்பு கிடைத்துள்ள தாகவே நாம் உறுதியாக நம்புகின்றோம்" என்று ரிசாட் மேலும் தெரிவித்தார். (ம)

### விபத்தில்...

நபரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது.

அல்வாயைச் சேர்ந்த குறித்த குடும்பத் தலைவர் ஈருருளியில் பருத்தித்துறை மாலுசந்திப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது முச்சக்கர வண்டியுடன் விபத்துக்குள்ளா னார். இதனால் படுகாயமடைந்த அவர் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். இந்த விபத்து தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-8,26)

### லங்கா...

யுள்ள தீர்ப்பை மனதார வரவேற்றார்.

இது தொடர்பில் இரா.சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சர்வாதிகார நடவடிக்கைக்கு உயர்நீதிமன்றம் தக்க பாடம் புகட்டும் என நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன். அதற்கமைய தீர்ப்பு இன்று (நேற்று) வெளிவந்துள்ளது. இந்தத் தீர்ப்பை மனதார வரவேற்கின்றேன். நாட்டில் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்ய இந்தத் தீர்ப்பு பெரிதும் உதவும். எனவே, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அரச தலைவர் மதிப்பளிக்க வேண்டும். தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை அவர் உடன் நிறுத்த வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள அணியினிடம் ஆட்சிப் பொறுப்பை அவர் வழங்கவேண்டும்" - என்றார். (ம)

### ரணிலை...

மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:


"உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கவேண்டும். அதை நாம் மதிக்கின்றோம். மக்கள் பக்கம் நின்றே அரச தலைவர் முடிவெடுத்திருந்தார். எனினும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஆட்சி நடத்த முடியாது என்று அரச தலைவர் அறிவித்தார். இதனால் சிற்சில பிரச்சினைகள் எழக்கூடும். இருந்தாலும் நாடு தொடர்பில் சிந்தித்து தான் எடுத்த முடிவை மாற்றப்போவதில்லை என்று அரச தலைவர் குறிப்பிட்டார். இதற்காக அவர் தனது பதவியை இழக்கவும் தயார்" - என்றார்.

இதேநேரம், ரணிலை தலைமை அமைச்சராக்க மைத்திரி அதிருப்தியுடன் சம்மதித்தார். எதிர்வரும் திங்கட்கிழமை புதிய ஆட்சி அமைக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் சில குறிப்பிட்டன.

ரணில் தலைமை அமைச்சராகுவதை அரச தலைவர் மைத்திரி விரும்பவில்லை. ரணில் அல்லாத ஒருவரே தலைமை அமைச்சர் என்பதில் மைத்திரி உறுதியாக உள்ளார். இதனால் கரு ஜயசூரியவின் பெயர் தலைமை அமைச்சர் பதவிக்குப் பரிசீலிக்கப்படுகிறது என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)


ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

தளபாடம் மற்றும் இலத்திரனியல் குளிர்சாதனப்பெட்டி



51 000 /=
41 950 /=
Free மெத்தை

தொலைக்காட்சிப் பெட்டி



TV 32"
32000/=
Free DVD PLAYER

ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(திருப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911/ 076 821 9418/ 077 358 3879

# வடக்கின் நட்சத்திரமாக வவுனியா வீரர் றுவான் ஒன்பது வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் சிறந்த வீரர்கள், வீராங்கனைகளைத் தெரிவு செய்து மதிப்பளிக்கும் வர்ண இரவு நிகழ்வு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. தென்னாபிரிக்காவில் இந்த வருடம் நடைபெற்ற 'அயன் மன்' போட்டியில் பங்குபற்றிய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஜே.எம்.எஸ். றுவான் வடக்கின் நட்சத்திரமாகத் தெரிவானார்.

**வடக்கின் வர்ண விருதுகள்**

வருடாவருடம் இடம்பெறும் வர்ண இரவுகள் நிகழ்வில் பத்து வீர.வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள் வழங்கப்படும். இந்த வருடப் பட்டியலில் பத்தில் ஒன்பதுபேர் பெண்கள். எஸ்.எழிலேந்தினி (வலைப் பந்தாட்டம்), எஸ்.தர்சினி (வலைப் பந்தாட்டம்) வி.ஆசிகா (பளு தூக்கல்), எஸ். கிந்துசன் (மெய்வன்மை), எ.ரி.மேரி கொன்சிகா (கால்பந்தாட்டம்) எஸ்.தேவபிரியா (கால்பந்தாட்டம்) வி.சயந்தினி (கால்பந்தாட்டம்) ஆர்.கிருசாந்தினி (கால்பந்தாட்டம்), யூ.ஜோகிதா (கால்பந்தாட்டம்) ஜேனுசியா (கால்பந்தாட்டம்) ஆகியோரே இந்த வருடத்துக்கான வர்ண விருதுகளுக்குத் தெரிவாகினார்கள்.

**மூத்த வீரர்கள் மதிப்பளிப்பு**

வடக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்திக்குச் சேவையற்றிய யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த ஏ.எவ். ஜே.றூபசிங்கம், கே.மனோகரன், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த எஸ்.கனகலிங்கம், பி.அன்ரனிப்பிள்ளை, மன்னார் மாவட்டத்தை சேர்ந்த அன்ரன் பிகாடோ, பி.டி.லம்பேட் ஆகியோரே அவ்வாறு மதிப்பளிப்பளிக்கப்பட்டனர்.

**700 பேருக்கு மதிப்பளிப்பு**

பன்னாட்டு விளையாட்டுப் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி, தெற்காசிய போட்டி என்பவற்றில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய வடமாகாண வீரர்கள், வீராங்கனைகள், தேசிய மட்டப் போட்டி, வடமாகாண மட்டப் போட்டி என்பவற்றில் சிறந்து விளங்கிய வடமாகாண வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்கள் என்று ஒட்டுமொத்தமாக 700 பேர் மதிப்பளிக்கப்பட்டனர்.

**நினைவு மலர் வெளியிடு**

வர்ண விருது விழாவை முன்னிட்டு நினைவு மலரும் வெளியிடப்பட்டது. இந்த மலரை வடக்கு மகாண கல்வி அமைச்சின் செயலாளர்சத்தியசீலன் வெளியிட்டுவைக்க வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட்குரே பெற்றுக் கொண்டார்.

(ம-23.9.159)




























இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஆட்டம் நடைபெறும் உலகின் அதிவேகப்பந்து வீச்சு ஆடுகளமான பேர்த் ஆடுகளத்தை இந்திய வேகப்பந்து வீச்சுக் கூட்டணி நேற்றுச் சிலமணிநேரம் ஆராய்ந்தது. (ம)

# இந்தியா - ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டமின்று!



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. அடிலெய்டில் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
உலகின் அதிவேகமான ஆடுகளம் என்று கருதப்படும் பேர்த் ஆடுகளத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இன்று ஆரம்பமாகும் ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணம் வெல்வதைக் கிட்டத்தட்ட உறுதி செய்யும். ஆதலால் வெற்றி நெருக்கடியின் ஆஸ்திரேலிய அணி களமிறங்குகிறது. (ம)

## பிருத்வி ஷா தொடர்பில் இன்றே முடிவு!

இளம் வீரர் பிருத்வி ஷா பேர்த் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவாரா இல்லையா என்பது தொடர்பில் இன்றே இறுதி முடிவு வெளிவரும் என்று இந்தியக் கிரிக்கெட் வட்டாரத்தில் இருந்து தகவல் வந்துள்ளது.
ஆஸ்திரேலியப் பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் கணுக்காலில் காயமடைந்தார் பிருத்வி ஷா. பவுண்டரி எல்லையில் பிடியெடுப்பை மேற்கொள்ள முயற்சித்த போது பிருத்வி ஷாவின்




கணுக்காலில் காயம் ஏற்பட்டது. பரிசோதனையில் அவரின் கணுக்காலில் தசைக் கிழிவு ஏற்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் விளையாடவில்லை. இரண்டாவது ஆட்டத்தில் அவர் விளையாடுவது குறித்து இன்றே இறுதி அறிவிப்பு வரும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வட்டாரத்தில் இருந்து தகவல் வந்தது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## வேகப்பந்து வீச்சாளர்களை கவனிப்பது முக்கியமானது

### கூறுகிறார் அருண்

வேகப்பந்து வீச்சாளர்களை பந்தயக் குதிரைகளைப் போன்று பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் அருண்.
இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அருண் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அடிலெய்ட் ஆட்டத்தில் மட்டுமல்ல, அதற்கு முன்பாக நடந்த தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மண்ணிலும் எமது வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். இந்திய கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த வேகப்பந்து வீச்சு கூட்டணியில் இஷாந்த் சர்மா, பும்ரா, சமி, புவனேஷ் வகுமார், உமேஷ் யாதவ் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை சிறப்பாகச் செய்து வருகின்றனர். வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் மிகவும் மதிப்புமிக்கவர்கள், அவர்களை பந்தயக் குதிரைகளைப் போல் பாதுகாக்க வேண்டும். காயத்துக்கும், பணிச்சுமைக்கும் இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடந்த தொடர்களில், தொடர்ந்து சீராக பந்து வீசுவதில் குறைபாடு இருந்தது. அதை சரி செய்வதற்கு உண்மையிலேயே கடினமாக உழைத்திருக்கிறோம். - என்றார்.




## அஸ்வின், ரோகித் சர்மா களமிறங்குவதில் சிக்கல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் அஸ்வின், ரோகித் சர்மா இருவரும் களமிறங்குவதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் பேர்த் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. பேர்த் மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் என்பதால் சுழல்பந்து வீச்சாளரான அஸ்வின் இன்று களமிறங்காவிட்டாலும் அது இந்திய அணிக்குள் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் வேகப்பந்து வீச்சு ஆடுகளங்களில் திறம்பட விளையாடக் கூடியவரான ரோகித் களமிறங்காவிட்டால் அது இந்திய அணிக்கு நிச்சயம் பின்னடைவே. ரோகித்துக்குப் பதிலாக இளம் வீரர் விகாரிக்கு இடம் கொடுக்க வாய்ப்புள்ளது. (ம)



## ஆஸி. அணியில் மாற்றம் இல்லை

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியில் முதலாவது ஆட்டத்தில் விளையாடிய வீரர்களே இடம்பெறுவார்கள் என்று உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது.
முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா தோல்வியடைந்தாலும் அந்த அணி மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால் இரண்டாவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்று கருதப்பட்டது. ஆனால் ஆஸ்திரேலிய அணியில் மாற்றம் செய்யப்பட வாய்ப்பில்லை என்று ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்ன். அவர் குறிப்பிட்டதைப் போன்று மாற்றங்கள் எதுவும் இல்லாமல் ஆஸ்திரேலிய அணி இன்று களமிறங்கவுள்ளது. ஆஸ்திரேலிய அணி விவரம்; பின்ஞ், ஹரிஸ், கவாயா, மார்ஷ், ஹான்ஸ்கொம், ஹெட், பெய்ன், கம்மின்ஸ், ஸ்ராக், லையன், ஹசில்வூட். (ம)



# Techno World

(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)

**A/L தொழில்நுட்ப பிரிவு - 2021**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
**22.12.2018 சனிக்கிழமை**
**காலை 9.00 மணி**
**நவீன ஆய்வுகூட வசதிகளுடன்....**

கிளைகள்: யாழ்ப்பாணம், புத்தூர்(சோமஸ்கந்தா அருகாமை)

**0770175346, 077 1703549**

# NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். | பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி

**A/L 2021**
கணித உயிரியல் பிரிவு
ஆரம்பம் 15.12.2018
சனி 9.00 மணி

**இரசாயனவியல்**
V.K.நந்தா M.A.நிரோஜன்

**பௌதீகவியல்**
A.கபில்தாஸ் / ச.சதீஸ் / S.ராகவன்

**கணிதம்**
S.விமலநாதன்

**உயிரியல்**
S.சுதா | A.தர்ஸன்

## பணிப் பெண் தேவை

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 741 9512**

விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021 493 1111

## Vacancies

Applications are invited to the following positions in a leading reputedinstitution in the Northern Srilanka from the candidates who have suitable qualification with ample experience in the relevant field

***Book Keeper***
***Building Maintenance Supervisor***

The resume shall be forwarded to the following Email address on or before 23.12.2018
Jaffna construction 15@gmail.com
Short listed candidates will only be called for an interview

## 2018 GCE O/L

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!

உங்கள் பரீட்சை பெறுபேறு வரும் வரையுள்ள பொன்னான காலத்தை IIS உடன் இணைந்து பயனுள்ளதாக்கி கொள்ளுங்கள்.



**இரட்டை சான்றிதழ்**
**IT + ENGLISH**
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

NEW BATCH STARTS ON 19.12.2018

TVEC Registered Centre

IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர் காலத்தின் வழிகாட்டி

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna

TEL :- 021 222 8060 Mobile :- 0777 570 038

# NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

## 2021 A/L PHYSICS

MR.M.KUGANESWARAN
ENGLISH MEDIUM
SAT & SUN 12.00 - 2.00
**தமிழ்மொழி மூலம்** SAT & SUN 2.00 - 4.00
**ஆரம்பம் - 14.12.2018** FRIDAY
ENGLISH MEDIUM - 9.00 AM
TAMIL MEDIUM - 10.00 AM

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

**வடமாகாண அலுவலக பணியாளர்**
பிரிவு I பிரதி சனி
9.30 → 2.30 மணிவரை
பிரிவு II பிரதி ஞாயிறு
12.30 → 5.00 மணிவரை

**அதிபர் சேவை**
பிரதி சனி, ஞாயிறு
9.00 → 3.00 மணிவரை
அதிபர் சேவைக்கான மேலதிக வகுப்புக்களும் இவ்வாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**SLAS, SLEAS**
பிரதி ஞாயிறு
9.00 → 3.00

**ஆசிரியர் தெரிவு**
ஞாயிறு
9.00 → 2.00

076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

NEW SCIENCE WORLD VICTORY MUST

# NEW SCIENCE WORLD

Navalar Road, Brown Road Junction, Jaffna.
Telephone:- 077 3364055 / 021 221 6690

## G.C.E. (A/L) 2021 SCIENCE STREAM

| தமிழ்மொழி மூலம் | | English Medium | |
|---|---|---|---|
| பௌதிகவியல் | திரு. R.குமரன் | Physics | Mr.R.Kumaran |
| | திரு. R.குகன் | | |
| இரசாயனவியல் | திரு. டயஸ் | Chemistry | Mr.Dias |
| | திரு.K.T.சிவகுமார் | | |
| உயிரியல் | திரு.N.T.கஜேந்திரன் | Biology | Mr.N.T.Gajenthiran |
| இணை.கணிதம் | திரு.S.S. செந்தில்றாஜ் | Com.Maths | Mr.S.Krishna |

(IN/8681)(10)

**ஆரம்பம் :- 14.12.2018 வெள்ளி காலை 7.00 மணி**

**அனுமதிகளை காலை 6.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.